A25

# சுதேச மித்திரன்

தொ. 31 எண் - 51

22.1.61.

JL
n211, N30
N61.31.51
158413

சிரமமற்ற சுத்தமான சலவைக்கு...

# காவேரி பார்

சலவை சோப்பை உபயோகியுங்கள்.

நீங்கள் அலுங்காமல்,
நலுங்காமல், ஆடைகளை
சலவை செய்ய காவேரி பார்
சோப்பை உபயோகியுங்கள்.
இல்லாளின் கை
கண்ட சலவை சோப்
காவேரி பார் சோப்!



*தயாரிப்பு:*
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை R. S. சேலம் ஜில்லா.
*மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:*
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

MC-842

1—22-1-'61

(425



# இந்த இதழில்

Vol XXXI.] [No 51
சார்வரி - தை 9, ஜன. 22 '61

புதிய அமெரிக்க ஜனாதிபதி 3
வந்ததும் வராததும் 6
காற்றுவாக்கிலே —அரட்டை 7
[illegible] —முன்ஷி 9
[illegible] ஒரு தாரகை —ஆர்வி 21
பள்ளம் —இறைவன் 27
முதுகிலே தட்டினேன்!
—குலதெய்வம் ராஜகோபால் 33
விமலா —ஸ்ரீமதி [illegible]ட்டவர்த்தன் 36
காதல் கண்களிலே இல்லை!
—தமிழ்வாணன் 45
நவீன ரிஷ்ய சிருங்கர் —சுருமன் 53
பூபதி எங்கே? —பாலன் 60
இப்படியும் ஒருவர் 62
ஊடலுக்குப் பின் —சாஸன் 65
மீட்டாய்ப் பாப்பா —'கல்வி' 71
பாசத்திற்கு ஈடு
—சௌந்தரம் ராஜகோபால் 75
ஏமாந்து போகலாமா?
—ஜியாவுதீன் 86
நாராயணீயம் —செங்காலிபுரம்
அனந்தராம தீக்ஷிதர் 93

158413

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.




வாழிய செந்தமிழ் — சுதேசமித்திரன் வாரப்பதிப்பு — வாழ்க நற்றமிழர்

# ஒரு புதிய திருப்பம்

★

ஸ்ரீ கென்னடி அமெரிக்க ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்ததுடன், அந்நாட்டின் வாழ்வில் ஒரு புதுத் திருப்பம் ஆரம்பமாகிறது. அந்நாட்டுக்கு மட்டுமில்லை, ஜனநாயக உலகம் முழுவதுக்குமே அது ஒரு முக்கிய நிகழ்ச்சி. உலகில் சமாதானம் கலகலத்துள்ள நிலை இது. வல்லரசுகள் கூடிப் பேசி, கெடுபிடிப் போரைத் தணிக்கும் என்ற நம்பிக்கை ஈடேறவில்லை. பாரிஸில் பெருந்தலைகள் மகாநாடு கூடுமுன்பே கலைந்து விட்டது. அதற்குப் பிறகு வல்லரசுகள் உறவு வரவரச் சீர்கெட்டு வந்திருக்கிறது. விஞ்ஞானத் துறையில் அவைகளிடை போட்டி நடப்பது வரவேற்கத்தக்கது. சந்திர மண்டலத்திற்கு ஒரு மனிதனைக் கொண்டு சேர்க்கும் முயற்சியில் யார் வேண்டுமானாலும் வெற்றி பெறட்டும். ஆனால் பூமண்டலத்திலுள்ள பூசலை அங்கும் கொண்டு போய்ச் சேர்க்க அது ஒரு முன்னோடியாயிருக்கக்கூடாது. ஆனால் தற்போதைய நிலையில் அந்த நம்பிக்கைக்கு இடமில்லை. லாவோஸிலும், காங்கோவிலும் இன்று பயங்கரமான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறதென்றால், அதற்கு வல்லரசுகளின் குறுக்கீடே காரணம். அவ்விரு தரப்புகளும் மறைமுகமாக இருந்து அங்கு போராடும் கட்சிகளை ஊக்கி விடுகின்றன. ஆனால் வல்லரசுகளே நேரில் மோதிக் கொள்ளத்தக்க பேராபத்து ஏற்படாதென யாரும் திட்டமாகச் சொல்ல முடியாது. அந்நிலை ஏற்பட்டால் அது மற்றொரு மகாயுத்தமாக பரவக்கூடும். அந்த ஆபத்தைத் தவிர்க்கவும், பொதுவாக வல்லரசுகளின் பரஸ்பர அவநம்பிக்கை தணியவும் ஸ்ரீ கென்னடி

புதியதொரு செயல்முறையைக் கையாள்வாரென்று உலகம் ஆவலுடன் எதிர்பார்க்கிறது. அவரது பதவி ஏற்பை ரஷ்யாவும் உற்சாகத்துடன் வரவேற்றிருப்பது ஒரு நல்ல அறிகுறி.

ஸ்ரீ கென்னடி அதிகாரத்திற்கு வந்தது கண்டு இந்தியா போன்ற ஜனநாயக நாடுகளும் தனிப்பட்ட மகிழ்ச்சியடையக் காரணமுண்டு. பின்தங்கிய ஆசிய நாடுகளில் இன்று ஜனநாயகவாதிகளுக்கும், கம்யூனிஸ்டுகளுக்கும் சித்தாந்தப் போராட்டம் நடந்து வருகிறது. கம்யூனிஸ்ட் வழிதான் சிறந்ததென்று காட்டச் சீனு முயன்று வருகிறது. ஜனநாயக வழியிலேயே துரிதமான பொருளாதார முன்னேற்றம் சாத்தியம் என்பது இந்தியாவின் கட்சி. அதை சென்ற பத்தாண்டுகளில் ஓரளவு நிரூபித்தும் இருக்கிறது. ஜனநாயகம் இன்னும் பலமாக நிலைபெற அதற்கு அமெரிக்கா போன்ற நாடுகளின் உதவி விசேஷமாகப் பயன்படக்கூடும். அத்தகைய உதவி ஏற்கெனவே இந்நாட்டுக்கு ஓரளவு கிடைத்து வந்திருக்கிறது. ஆனால் இந்நாட்டின் துரிதமான முன்னேற்றத்திற்கு அது போதியதல்ல. இன்னும் பெருவாரியான அளவில் உதவி புரிவதல் ஸ்ரீ கென்னடிக்கு அக்கரையுண்டு என்பது ஏற்கெனவே பலரும் அறிந்ததுதான். அதற்கேற்ற உருவான நடவடிக்கைகளை அவர் விரைவிலே எடுத்துக்கொள்வாரென்று நாம் எதிர்பார்க்கலாம்.

## இந்தியாவில் பிரிட்டிஷ் அரசி

தமது கணவருடன் இந்நாட்டுக்கு வந்துள்ள பிரிட்டிஷ் அரசி எலிஸபெத் இந்நாட்டில் கோலாகலமான வரவேற்பு பெறுவது இயற்கையே. அடிப்படையான காரணம், இந்நாட்டில் ஆளும் பொறுப்பை பிரிட்டிஷார் அமைதியாக இந்தியர் கைக்கு மாற்றியதுதான். சாதாரணமாக, அடிமையாயிருந்த ஒரு நாடு விடுபட்டபின், முன்பு ஆதிக்கம் செலுத்திய நாட்டுடன் நல்லுறவு கொள்வதில்லை. ஏனெனில் விடுதலை பொதுவாக பலாத்காரப் பிரயோகத்தின் விளைவாகவேயிருக்கும். ஆனால் இந்தியா சுதந்திரம் பெற்ற வகை உலக சரித்திரத்திலேயே ஒரு அற்புதம். இந்நாடு அஹிம்ஸா தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு, சுதந்திரப் போராட்டம் நடத்தி வெற்றி கண்ட பெருமை முழுவதும் காந்தி மகானைச் சாரும். பிரிட்டிஷாரும் கசப்பு முற்று முன் இந்நாட்டின் ஆதிக்கத்தைக் கைவிட்டது அவர்களது அறிவுத் தெளிவுக்கு ஒரு அத்தாட்சி. இந்தியர் விடுபட்ட பிறகும் அது காமன்வெல்தில் நீடிப்பது இரு நாடுகளுக்குமிடையிலுள்ள நல்லுறவுக்கு ஒரு அறிகுறி. பொருளாதார வகையிலும் இத்தொடர்பு மேன்மேலும் வலுத்துக்கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் அரசியின் தற்போதைய விஜயத்தின் மூலம் இரு நாடுகளுக்குமுள்ள நட்பு மேலும் உரம்பெறுமென்பதில் சந்தேகமில்லை.




அதிகாரத்தைக் கைவிடுவதில்தான் ஆனந்தம் இருக்கிறது என்கிறார், காங்கிரஸ் அக்ராஸனர் ஸ்ரீ ஸஞ்சீவி ரெட்டி.

# வந்ததும்

தமது வருமானத்துக்கும் மிஞ்சிய அளவுக்குச் சொத்து வைத்திருந்த சுங்க இலாகா சிப்பந்தி ஒருவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.

—புதுடில்லி செய்தி

தன்னைப் போலவே தனது பிரஜைகளும் வருமானத்துக்கு மிஞ்சிய அளவுக்குக் கடன் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்பது நம் சர்க்காருடைய திருவுள்ளம்போலும்!

ஃ ஃ ஃ

இந்தியாவில், சோவியத் யந்திரக் கலப்பைகளுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

—ஒரு செய்தி

யந்திரக் கலப்பைக்கு நிறைய கிராக்கி ஏற்படட்டும். ஆனால் சோவியத் சுத்தி—அரிவாள் கலப்பை யாரும் ஏற்படுத்தாமலிருந்தால் சரி என்கிறார் தோழர்களின் விரோதிகளில் ஒருவர்.

ஃ ஃ ஃ

இந்தியாவிலேயே சென்னை ராஜ்யம் அதிகத் தொழில் வளர்ச்சி அடைந்திருப்பதை அமெரிக்கர்கள் பாராட்டுகிறார்கள்.

—மந்திரி வேங்கடராமன்

ஏழை தனக்குக் கடன் கொடுத்தவனைப் பாராட்டுவது போலப் பணக்காரன் தன்னிடம் கடன் வாங்குகிறவனைப் பாராட்டுவானாகையால் இந்தப் பாராட்டைப் பாராட்டக்கூடாதென நாம் கருதுகிறோம்!

ஃ ஃ ஃ

மனைவியின் கூந்தலை அறுத்த மணாளன்.

—ஒரு செய்தித் தலைப்பு

உயிரை விட்டுவைத்து மயிரை மாத்திரம் கணவன் அறுத்தபடியால், 'மண்டைக்கு வந்த ஆபத்து கொண்டையோடு போயிற்று', என்று மனைவி சந்தோஷப்படலாம்!

நேருஜி சொன்ன உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு சாந்த பட்டேசிங் உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்.

—சண்டிகார் செய்தி

பட்டேசிங் உண்ணாவிரதத்தையா கைவிட்டார்? இல்லை, அவரை நம்பிக் கொண்டு தமிழ்நாட்டில் இனவெறிக்கும் மொழி வெறிக்கும் தூபம் போட்டுக்கொண்டிருந்த பல தோழர்களை அல்லவா கைவிட்டுவிட்டார்!

ஃ ஃ ஃ

செல்வம் கொழிக்கும் அமெரிக்காவிலேயே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம். இது முதலாளித்துவத்தின் சாபக்கேடு.

—ஒரு தோழர்

சாபக்கேடா? வேலையில்லாதவர்கள் எண்ணிக்கை அதிகமாக ஆக ஒரு முதலாளியின்கீழ் குற்றேவல் செய்து அவனால் சுரண்டப்படுகிறவர்களின் தொகை குறைவது வரப்பிரசாதமல்லவா?

ஃ ஃ ஃ

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் நலனில் இந்திய சர்க்கார் அதிக அக்கறை காட்டவேண்டும்.

—ஒரு பர்மா தமிழர்

இந்தியாவில் வாழும் இந்தியர்கள் நலனில் போதுமான அக்கறை காட்டுவதற்கே நம்முடைய சர்க்காருக்கு அவகாசமில்லையே என்ன செய்வது?

ஃ ஃ ஃ

நாட்டின் வறுமையை ஒழித்துக் கட்டும் போரில் நாம் ஈடுபட்டுள்ள இந்த வேளையில் வேலைநிறுத்தத்தின் மூலம் தடைகளைக் கற்பிப்பது சரியில்லை.

—நேருஜீ

வேலைநிறுத்தம் செய்கிறவர்கள் தங்கள் வறுமையை ஒழித்துக்கட்டுவதற்குத்தான் அப்படிச் செய்கிறார்கள் என்பதை நேருஜி மறந்துவிட்டாரே!

# வராததும்



# காற்று வாக்கிலே...

## கண் திறக்குமா? வழி பிறக்குமா?

நாட்டில் எங்கு தீமையைக் கண்டாலும், யார் தவறு செய்தாலும் வன்மையாகக் கண்டிக்க அன்று ஒரு மகாத்மா இருந்தார். இன்றும் ஒரு ஆசார்யர் இருக்கிறார். ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். காந்திஜியின் வார்த்தைகளுக்குத் தலைவர்களும், தொண்டர்களும் மதிப்புக் கொடுத்தனர். ஆசார்யருக்கும் மரியாதைக்குக் குறைவில்லை. பேச்சை மதிப்பவரைத்தான் காணவில்லை. கடிந்துரைக்கிறார். காதில் போட்டுக்கொள்வதேயில்லை அரசியல் தலைவர்கள்.

இன்று நம்மை வருத்தும் இன்னல்களுக்கெல்லாம் காரணம் அரசியல்வாதிகளின் பதவிப் போராட்டமே என்று பூதானப் பிதா கடுமையாகத் தாக்கியுள்ளார். அரசியல் தலைவர்களின் அதிகார மோகமும், சுயநலனுமே இன்று பல துறைகளிலும் இழிநிலைக்குக் காரணம் என்கிறார்.

இந்நாட்டில் அரசியல் கட்சிகளுக்குக் குறைவில்லை. தலைவர்களுக்கும் பஞ்சமில்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். நாட்டின் பழம் பெரும்கட்சி, தேசியக் கட்சி, சுதந்திரம் வாங்கித் தந்த கட்சியான காங்கிரஸைக் கவனித்தால் போதுமானது சமீபத்தில் சுமார் நாற்பது லட்சம் ரூபாய் செலவில் நடைபெற்ற மாபெரும் மகாநாட்டில் பெருந்தலைவர்களின் பொருமலைக் கவனித்தாலே போதுமானது.



மொழிவாரிப் பிரிவினைப் பூதம் !

பாரத மக்களூடே ஒரு ஒற்றுமை உணர்வு, ஒருமைப்பாடு இழையோடி வந்தது. தேசிய வாழ்க்கையைக் கட்டிப்பிணைத்த இந்த ஒற்றுமை இழையைப் பல்லாயிரம் ஆண்டுகளாக நம் முன்னோர் கட்டிக் காத்தனர். அதிகார வர்க்கத்தின் நிர்ப்பந்தத்தால் இந்த ஒற்றுமை உருவாகவில்லை. நமது முன்னோரின் தீர்க்க தரிசனம், தத்துவ தரிசிகளின் சித்தாந்தங்கள், கலைஞர்கள், கவிஞர்களின் அபூர்வக் கற்பனைகள் ஆகியவற்றால் உருவாகியது. பல்லாண்டு பல்லாண்டாக ஓங்கி வளர்ந்த ஒற்றுமையும், கட்டுக்கோப்பும் இன்று சிதைந்தது எப்படி?

நமது பணியே நாம் வரையும் சரித்திரம் என்றார் பாரதப் பிரதமர். காங்கிரஸ்காரர்கள் பலரது நோக்கும், போக்குமே இன்று ஸ்தாபனத்திற்கும், நாட்டின் ஐக்கியத்திற்கும் தீங்கு விளைவித்து வருகிறது என்றார் மத்திய நிதி மந்திரி. இதுதான் இன்றையவரலாறு சுதந்திரப் போராட்ட

காலத்தில் தியாகம், எளிமை, தொண்டு ஆகியவை காங்கிரஸ்காரர்களின் நெறியாக இருந்தன. அதெல்லாம் அந்தக் காலம். இன்றோ பதவிப் பித்தும், பற்றுமே வளர்ந்தோங்கிவிட்டன. அக்கிராசனரே சொல்லிச் சொல்லி மனம் வெதும்பினார். மொழி, மாகாணம், வகுப்பு போன்ற பித்துக்கள் தலைக்கேறியுள்ளன. பதவி கிடைத்துவிட்டால் அதில் அட்டை போல் ஒட்டிக் கொள்பவர்தான் அதிகம் என்றார் ஸ்ரீ சஞ்சீவி ரெட்டி. அப்பேர்ப்பட்ட காந்தி பக்தர்களிடம் 'அற்ப சபலங்களைக் கைவிட வேண்டும்' என்று மன்றாடுகிறார் முன்னாள் அக்கிராசனர்! இன்று நாட்டில் காணப்படும் பிரச்னைகளைத் தீர்க்கத் தைரியமும், தீர்க்க தரிசனமும் உள்ள தலைவர்கள் தேவை. அன்று அண்ணல் காந்திஜி அவ்வாறு இருந்தார். வகுப்புவாதம் போன்ற குறுகிய மனோபாவங்கள் தலைதூக்க இடமில்லாத ஒரு சூழ்நிலையை உண்டு பண்ணுவதில் அவர் வெற்றி கண்டார். இன்று நாட்டை வருத்தி வாட்டும் பல பிரச்னைகளுக்கும் காங்கிரசின் தற்போதைய தலைவர்களே காரணம் என்று சாடினார் ஒரு மாஜி மந்திரி.

பிரிவினைச் சக்திகளை அடக்குவது காங்கிரஸ்காரரின் கடமை என்று வற்புறுத்தினால் மட்டும் போதுமா? மொழிவாரி மாகாணங்கள் என்ற ஒரு பூதத்தைக் கிளப்பினர். மொழி அடிப்படையில் அமைக்கப்பட்ட ராஜ்யங்கள் இன்று தனி நாடுகள் போலவே இயங்க ஆரம்பித்துவிட்டன. இன்னும் வெறி அடங்கியபாடில்லை. அண்மையில் அஸ்ஸாமில் நடைபெற்ற மொழிக் கலவரங்களில் காங்கிரஸ்காரர்கள் பலரும் ஈடுபட்டனர் என்று விசாரணை நடத்திய தலைவர் தீர்ப்புக் கூறியுள்ளார். எதை காந்திஜி விஷமென வெறுத்தாரோ அந்த வகுப்புவாதம் இன்று நாட்டில் மீண்டும் தலைவிரித்தாடுகிறது. யார் இதற்குப் பொறுப்பு? இன்றும் வகுப்பு வாதத்தைக் கண்டிப்பதாகப் பேசும் காங்கிரஸ், தேர்தலில் அபேட்சகர்களைப் பொறுக்குவதில் வகுப்புவாதத்தையே முக்கியமாகக் கவனிக்கிறது. வகுப்புவாதக் கட்சிகளுடன் கூட்டுச் சேருகிறது.

ஒற்றுமை ஓங்க வேண்டும் என்கிறார்கள். கட்சிக்குள்ளேயே குத்து, வெட்டு. கட்டுப்பாடின்மை கடுமையான பிரச்னை. எதுவும் செய்ய வகையறியாது தலைவர்கள் தடுமாறுகின்றனர். மகாசபையில் தீர்மானங்கள் கொண்டு வரும்போது மட்டும் மகத்தான ஒற்றுமையைக் காணலாம். கைதூக்குவதில் பிரமாதமான ஒற்றுமை, உற்சாக மிகுதியில் இரு கைகளையும் தூக்கிக் கொண்டு நிற்பவரும் உண்டு. கர கோஷம் வானைப் பிளக்கும். ஆனால் அப்படி ஆர்ப்பாட்டமாக ஆதரவு தெரிவிப்பவர்களுக்கு அத்தீர்மானங்களில் பரிபூரணமான நம்பிக்கை கிடையாது. அதனால்தான் பெரும்பாலான தீர்மானங்கள் ஏட்டளவில் நின்றுவிடுகின்றன. கொள்கைகள், லட்சியங்களில் உண்மையான பிடிப்பில்லை. கோஷ்டிப் பூசல்களுக்கும், ஊழல்களுக்கும் குறைவில்லை. சோஷலிஸத் துறையில் முன்னேற்றம் தடைப்பட்டிருந்தால் அதில் வியப்பென்ன?

இதற்கிடையில், காங்கிரஸ் அக்கிராசனர் திடீரென்று மறைமுகத் தேர்தல் முறையை ஆதரிக்கிறார். ஆழ்ந்து ஆலோசித்து, விரும்பித் தேர்ந்தெடுத்த நேரடி ஜனநாயக முறை தோல்வியுற்றுவிட்டது என்று அவர் கருதுகிறாரா? ஏற்கனவேயே இந்தியாவில் ஜனநாயக எதிர்ப்புச் சக்திகள் தலைதூக்கி வருகின்றன. மக்களிடையே நேருஜிக்கு உள்ள செல்வாக்கு காரணமாகவே அவை அதிகம் வாலாட்ட முடியவில்லை. இத்தகைய சூழ்நிலையில் காங்கிரஸ் முதல்வரே குளறுபடி செய்யலாமா?

—அரட்டை





# தாயத்து

முன்ஷி

பூலோகத்தின் ஜனத்தொகை பயங்கரமாகப் பெருகிற்று; பொருளாதாரப் பிரச்னைகள் விடையற்ற கேள்விக் கொக்கிகளாகத் தொங்கின; புது முறைச் சிந்தனையாளர்கள் பொது மக்களின் மனத்தைக் குழப்பிக் கொண்டே இருந்தனர்; 'ஓர்—உலக' அரசாங்க அதிகாரிகளுக்கு ஒரே கவலையாக இருந்தது; தினந்தோறும் நியூயார்க் நகரில் ஒன்றிரண்டு உயர்தர நிர்வாகிகள் மாரடைப்பாலோ, ரத்த நாள வெடிப்பாலோ இறந்து காரியாலயக் காகிதக் கட்டுகளின்மேல் சாய்ந்தனர்.

கடைசியில் அதிகார கோஷ்டியினருக்கு ஒரு யோசனை தோன்றிற்று. வேறு உலகங்களுக்குக் குடியேற்றம்—பெருவாரிக் குடியேற்றம்—முழுதும் சர்க்கார் செலவில்.

அரசாங்கத்தின் பிரசார யந்திரம் முடுக்கிவிடப்பட்டது. புதுக் கிரக வாழ்க்கைச் சித்திரங்கள் மனதைக் கவர்ந்தன. படை படையாக ஜனங்கள் வெளியேறத் தயாராயினர். முதல் வெளியேற்றத்திற்கு, சரித்திரத்தில், மகா ஜனப் பிரவாகம் என்ற பெயர் ஏற்பட்டது. அதன்பின் ஒன்றிரண்டு தலைமுறைக்கொரு தடவை சிறு வெளியேற்றங்கள் நிகழ்ந்து வந்தன. கோடி கோடி மைலுக்கப்பாலுள்ள அந்த உலகங்கள் அகில பூலோக சாம்ராஜ்யத்தின் பகுதிகளாகக் கருதப்பட்டன. அவ்வுலகத்தாரிடம் அதி வேக விமானங்கள் கிடையா.

பல நூற்றாண்டுகளுக்குப்பின் ஒரு நாள் ஒரு குறிப்பிட்ட உலகத்தில் பிரம்மாண்டமான விமானமொன்று வந்திறங்கிற்று. அதில் பூ—சாம்ராஜ்யத்தின் அயல்நாட்டு மந்திரி தம் சிப்பந்திகளுடன் இருந்தார். மற்றப்படி விமானம் செலுத்தும் மாலுமிகளும் யந்திர நிபுணர்களும், ராணுவப் படையினருமாக சுமார் 2000 பேர் அதில் இருந்தனர். குடியேற்ற உலகங்களுக்குச் சென்று அங்குள்ளவரின் க்ஷேம லாபங்களை விசாரித்தறிந்து பூலோக அரசாங்கத்திற்கு யாதாஸ்து சமர்ப்பிக்கும் பணியில் அவ்விமானம் ஈடுபட்டிருந்தது.

ஆனால், என்ன விந்தை! இரண்டு மைல் நீளமுள்ள ஒரு விமானம் பலத்த அதிர்ச்சியுடன் தரையிறங்கியிருக்கிறது; அதைப் பார்க்க ஊர் மக்கள் திரளவில்லையே! உண்மையில் பெரிய ஊர் என்று சொல்லும்படி அந்தக் கிரகத்தில் எங்கும் தென்படவில்லை; எல்லாம் வளர்ச்சி பெறாத சிற்றூர்களாகவே

தோன்றின—சில வயல்கள், ஒன்றிரண்டு கடைத் தெருக்கள், சாமான்யமான சில வீடுகள், அதற்கப்பால் காடும் பொட்டலும். அரை மைல் தூரத்தில் பெரிய சாலையில் செல்லும் ஜனங்கள் வியப்புடன் நெருங்கவுமில்லை, பயத்தினால் ஓடி மறையவுமில்லை – மலைப்புண்டாக்கும் அசிரத்தை காட்டினார்கள்.

மந்திரி ராணுவத் தலைவனிடம் 'யாருடனாவது பேச்சுக் கொடுத்து அவ்வூரையும் உலகத்தையும்பற்றிய தகவல் விசாரித்தறிய வேண்டும்' என்று கட்டளையிட்டார். கட்டளை படிப்படியாய் இறங்க, கடைசியில் ஒரு முரட்டு சார்ஜெண்டும் எட்டு சிப்பாய்களும் சிடுசிடுப்புடன் புறப்பட்டனர்.

சாலையில் ஒரு வழிப்போக்கன் தென்பட்டான். முகத்தைப் பார்த்தால், பிற்போக்கான நாட்டுப்புறத்துக் குடியானவன்– வித்தியா விரோதி–போலும். பல நிற பல தினுசு ஆடைகளைப் பார்த்தால் விதூஷகன்போலவும், அவன் ஒரு விந்தையான மனிதனைத் தென்பட்டான். அவனிடம் மரியாதை காட்ட விரும்பாத ஸார்ஜெண்டு வேண்டா வெறுப்புடன் 'குட் மார்னிங்' முணுமுணுத்துவிட்டு 'நீ யாரப்பா?' என்று விசாரித்தான்.

'மகத்தான பிரச்னை. நான் எவ்வளவோ சிந்தித்துப் பார்க்கிறேன், அடிப்படையான அந்தக் கேள்விக்கு விடை இன்னும் தெரியவில்லையே! நீ யார், உனக்குத் தெரியுமா? நான் யார் என்று அறியவா இவ்வளவு பெரிய விமானத்தில் இத்தனை பேர் இவ்வளவு தூரம் வந்தீர்கள்?' என்றான் உள்ளூர்க்காரன்.

'நல்ல ஆளப்பா நீ!' என்றான் சார்ஜெண்டு திகைப்புடன்.

'நல்லவனாக இருக்கத்தான் நான் முயலுகிறேன். வேலையிருக்கிறது, போகிறேன்' என்று மரியாதையாய்ச் சொல்லிப் புறப்பட்டான் உள்ளூர்வாசி.

'சற்று பொறு. உன்னிடம் சில சங்கதிகள் விசாரிக்க வேண்டும். ஆனால், நீ ஒவ்வொரு வார்த்தையையும் அக்ஷரார்த்தமாக எடுத்துக்கொள்வதால் சம்பாஷணை சிக்கலாகிறது.'

'உன் மொழி ஆங்கிலமானாலும் விந்தையாக இருக்கிறது. நான் யதார்த்தமாகப் புரிந்துகொள்வதில் தவறென்ன? அதுதானே சரி. வேலையிருக்கிறது, நான் போகிறேன்.'

அதற்குள் ஒரு சிப்பாய் 'ஏய்! மரியாதையாக நடந்துகொள். இவர் யார் தெரியுமா? சார்ஜெண்டு துரை!' என்று எச்சரித்து அதட்டினான்.

உள்ளூர்க்காரன் வெடுக்கென்று 'உவேபாபோ!' என்று சீறிவிட்டுத் தன் வழி புறப்பட்டான். அவனைக் கைதியாக்கி விமானத்திற்கு இழுத்து வரும்படி சார்ஜெண்ட் கட்டளையிட்டான்.

அகாரணமான பலாத்காரத்தைக் கண்டு திகைத்த அவ்வெளிய மனிதன் சட்டெனத் தரையில் உட்கார்ந்துவிட்டான். சிப்பாய்கள் அவனை பலவந்தமாகத் தூக்கிச் செல்லவேண்டி வந்தது.

மந்திரி 'ஐயா! உமக்கு ஏற்பட்ட துன்பத்திற்காக நான் மிகவும் வருந்துகிறேன்' என்று தூதுகோஷ்டியினர் உப



யோசிக்க வேண்டிய போலி மரியாதையுடன் ஆரம்பித்தார். 'தானாக வீணில் சம்பாதித்துக் கொண்ட வருத்தமே உங்களுடையது. என் வேலையும் கெடுகிறது' என்ற விடை சட்டெனக்கிடைத்தது.

'அது போகட்டும். உம்முடன் சற்று பேச விரும்புகிறேன். அதனால்தான் கூப்பிட்டனுப்பினேன்.'

'இங்கே வரவேண்டுமென்று எனக்கிருந்திருந்தால் நானே



வந்திருப்பேன். இஷ்டமில்லை, வரவில்லை.'

'அது சரி, இந்த உலகத்தின் பெயரென்ன?'

'ஏன், உமக்குத் தெரியாதா?'

'நாங்கள் இட்டிருக்கும் பெயர் தெரியும்—கே. ஓ.—2டி என்–13. நீங்கள் இட்டுக்கொண்டிருக்கும் பெயர் என்ன?'

'இதற்கு முன் நீங்கள் இங்கே வந்ததில்லையா?' என்று அவன் வினவ, சார்ஜெண்ட் 'ஏய்! கேட்ட கேள்விக்குப் பதில் சொல்!' என்று அதட்டினான்.

'உவே பாபோ!' என்ற விடை கிடைத்தது.

'ஏய், முதல் தடவை தொலையட்டும் என்று விட்டு வைத்தேன். மந்திரி ஐயா முதுகுத்தோலை உரித்து விடுவார், உஷார்!'

இதையெல்லாம் ரசித்துக் கொண்டிருந்த மந்திரி, 'அதென்ன உவேபாபோ? கெட்ட வார்த்தையில்லையே?' என்றார்.

'அது வெகு நல்ல வார்த்தை. பிறரை அதட்டி விரட்டாமல் தம் கடமையறிந்தவர் அதன் கருத்தை அறிவர்.'

'அது சரி, நாங்கள் உங்கள் தாய் உலகத்திலிருந்து வந்திருக்கிறோம்—உங்கள் க்ஷேமத்தை யறிய. ஆகையால்..'

உள்ளூர்க்காரன் கபடமின்றி சிரித்துக்கொண்டு, 'மக்களின் பெயரை அறியாத தாய்! பெற்ற மக்களைப் பல நூற்றாண்டுகள் கழித்து சந்திக்கும் தாய்!.. உங்கள் வருகை எங்களுக்கிஷ்டமில்லாத காரியம். சீக்கிரம் திரும்பிப் போங்கள்' என்று தோரணையுடன் முடித்து விட்டு சட்டெனத் திரும்பி சாலையை நோக்கி நடக்கலானான்.

சார்ஜெண்ட் அவனைத் தடுத்து நிறுத்தத் தயாராகும்போது மந்திரி சைகையால் அவனை நிர்ப்பந்தப்படுத்த வேண்டாம் என்று உத்தரவிட்டு, ஹாரிஸன் என்னும் எஞ்ஜினீயரை அழைத்து, நிலைமையை விளக்கி, வழக்கம்போல் சில நன்கொடை சாமான்களும், தங்க வெள்ளி நாணயங்களும் எடுத்துக்கொண்டு ஊருக்குள் போம். இந்த ஊராரின் மனப்போக்கு விசித்திரமாக இருக்கிறது ஒன்றும் பிடிபடவில்லை. பார்ப்பதற்குக் காட்டுமிராண்டி, ஆனால் மூளை தெளிவாகவும் கூர்மையாகவும் இருக்கிறது. கோமாளி போலிருக்கிறான், ஆனால் கபடமின்றி கண்ணியமாக நடந்து கொள்கிறான். இந்த விபரீத நிலையின் ரகசியம் தெரியவேண்டும். இவ்வுலகத்தின் அரசியல் அமைப்பும், தலைவர்களைப் பற்றிய தகவல்களும் தெரியவேண்டும். நகர அதிகாரிகளில் சிலரையாவது, கூடுமானால் அவர்களுடைய மனைவிமாருடன், இங்கு விருந்துக்கழைத்து வாரும்' என்று உத்தரவிட்டார்.

ஹாரிசன் புறப்பட்டான். வெயில் கடுமையாக இருந்தது. ஒரு தோட்டத்தின் தலைவாசலில் ஒரு ஸ்திரீ தென்பட்டாள். அவன் மரியாதையாக 'உங்களுக்கு சிரமம் கொடுக்க நான் வருந்துகிறேன்' என்று ஆரம்பித்தான். அவள் மிருதுவான குரலில் 'அப்படியானால் ஏன் கொடுக்கிறீர்கள்?' என்று விசாரித்தாள். அது கடுமையாகவோ பரி








காசமாகவோ தொனிக்கவில்லை. உசிதமான யோசனை கூறுவதாகவே தோன்றிற்று.

அவன் திகைப்புடன் 'அதற்கில்லை. நான் இந்த ஊருக்குப் புதிது. இவ்விடத்தில் பெரிய மனிதர்களைப் பார்த்து...' என்று ஆரம்பிக்க, அவள் 'ஓஹோ, பெரிய விமானத்திலிருந்து வருகிறீரா? அப்படியானால் என் நேரத்தை வீணாக்க வேண்டாம். உவே பாபோ' என்றாள்.

'அப்படியென்றால்?'

'அதுவும் தெரியாதா? நீர் இங்கே எதற்கு வந்தீர்?'

'கனம் மந்திரியவர்களின் உத்தரவுப்படி..'

'உத்தரவா? பிறர் கட்டாயத்திற்காக மாத்திரம் செய்யும் காரியமா? உமக்கிஷ்டமில்லை!'

'எனக்கு-இஷ்டம் இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம்...'

'அல்லது 'நக'வைக் கழிக்கப் பார்க்கிறீரா?'

'அதென்ன நக?'

'அதுவும் தெரியாதா? அடக் கடவுளே! இவ்வளவு நேரம் பேசியதற்கு நான் உம்மேல் நக ஏற்றுவதானால்! ஆனால் என்ன பிரயோஜனம்? எப்படிச் செல்லாகும்?'

'ஒன்றும் புரியவில்லை' என்ற வார்த்தைகளை அவனுடைய தலையசைப்பு ஆமோதித்தது.

'அட கடவுளே! போகட்டும், உமக்கென்ன வேண்டும்?'

'ஊரில் ஒன்றிரண்டு பெரிய மனிதர்களைப் பார்த்து...'

'பெரிய மனிதர்! ராபர்ட் ஒரு பெரிய மனிதன். தெல 42, கிமே 37 சந்திப்பில் இருக்கிறான்.'

'அதாவது?'

'இது கூடவா தெரியாது? தெற்கு வடக்கு 42-ம் தெரு கிழக்கு மேற்கு 37-ம் தெரு.'

'அப்படியா, சந்தோஷம். உத்தரவு பெற்றுக்கொள்கிறேன்.'

'யார் உத்தரவு? எதற்கு?'

'அட கடவுளே!..நான் போகிறேன்' என்று சொல்லி புறப்பட்டவன் தன்னிடமிருந்த பொருள்களைக் காட்டி இஷ்டமானதை எடுத்துக் கொள்ளும்படி அவளிடம் வேண்டிக்கொண்டான். அவள் மரியாதையாக 'இவற்றுள் பல என்னிடமிருக்கின்றன; மற்றவை எனக்குத் தேவையில்லை. அதுவுந்தவிர, 'மஹாட்டெதிரி'யிடமிருந்து ஒன்றும் பெற்றுக்கொள்வதற்கில்லை' எனத் தெரிவித்தாள்.

'அதென்ன 'மஹாட்'?' என்று அவன் விசாரிக்க, 'உவேபாபோ' என்ற விடை கோபதாபமில்லாமல் பளிச்செனக் கிடைத்தது.

ஹாரிசன் தெல 42, கிமே 37-ஐத் தேடிச் சென்றான். ராபர்ட்டைக் கண்டதும் அவனுக்குப் பக்கென்று சிரிப்பு வந்தது. துதிக்கையற்ற யானைக்குட்டி போலிருந்தான் அந்தப் 'பெரிய மனிதன்'. ஹாரிசன் வந்த காரியத்தை அவனிடம் சொல்லாமல்,

சில நாணயங்களைக் காண்பித்து சாப்பாடு எங்கே கிடைக்கும் என்று விசாரித்தான். ராபர்ட் அவனை ஏறத்தாழப் பார்த்து விட்டு 'ஓ, பெரிய விமானத்திலிருந்து வந்தவனா? இந்தப் பொன் வெள்ளி வில்லைகளுக்கு இங்கு ஒன்றும் கிடைக்காது. நக தீர்க்க முடிந்தால்தான் உண்டு. அதுவோ உனக்கு சாத்தியமில்லை. நக ஏறியிருந்தால்தானே கழிக்க? உன்னை நம்பிப் புதிதாக யார் ஏற்றுவார்கள்?' என்று சொல்லிக் கொண்டே போனான்.

'இதென்ன நக?' என்று பூலோகத்தான் கேட்க, மஹாட்வாசி வியப்புடன் 'நக தெரியாதா? நன்றிக் கடன். நான் உனக்கு ஒரு உபகாரம் செய்தால் எப்பொழுதேனும் பதிலுக்கு நீ எனக்கு ஒரு உபகாரம் செய்து கணக்கைத் தீர்க்க வேண்டுமா, வேண்டாமா? உபகாரத்தின் தன்மையையொட்டிக் கடனின் அளவு அதிகமாகவோ குறைவாகவோ இருக்கும்' என்று விளக்கினான்.




'என்னால் உனக்கு ஆகவேண்டிய காரியம் ஒன்றுமிராவிட்டால்?' என்ற நியாயமான சந்தேகத்தைக் கிளப்பினான் ஹாரிசன்.

'இதென்ன பிரமாதம். இன்னொருவன் மேல் மாற்றிவிடேன். பால்காரன் ஸ்மித்துக்கு நான் கடன்பட்டிருக்கலாம்; என்னால் அவனுக்காக வேண்டிய காரியம் ஒன்றுமில்லை என்று வைத்துக் கொள். நீ பள்ளிக்கூட வாத்தியாராக`` இருந்தால் ஸ்மித்தின் மகனுக்குப் பாடம் கற்பிப்பாய். நீ எனக்குச் செலுத்த வேண்டியது, நான் ஸ்மித்துக்குச் செலுத்த வேண்டியது, ஸ்மித் உனக்குத் தரவேண்டியது மூன்றும் ஒரே சமயத்தில் கழிந்து போகும், அல்லது தராதரப்படிக் குறைந்து போகும். அதே யுக்தியைத்தான் இப்பொழுது உன் விஷயத்தில் கையாளலாம் என்று இருக்கிறேன். மற்றது எப்படிப் போனாலும் யாராவது பசி என்று சொல்லிவிட்டால் என்னால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இந்தப் பக்கம் வா. பார்த்தாயா— கோடரி, விறகு. இதை வெட்டிப் போட்டால் வார்பர்டனின் ஹோட்டலில் உன் சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்கிறேன். பெரிதும் சிறிதுமாக ஆறு நக நான் அவன் மேல் சுமத்தியிருக்கிறேன். ஒரு கனத்த நக குறையட்டும், உன் பசி தீரட்டும். என் அடுப்புக்குக் கீறின விறகு கிடைக்கட்டும். எப்படி என் யுக்தி? ஆனால் ஒரு சங்கதி— உனக்குப் பூர்ண இஷ்டமிருந்தால்தான் இந்த ஒப்பந்தம்; கட்டாயம் ஒன்றுமில்லை. அதை நீ புரிந்து கொள்வது அவசியம்.





ஹாரிசனுக்கு ஒரு ஆட்சேபமும் தோன்றவில்லை. அவன் வேலையை முடித்து விட்டு சாப்பாட்டிற்கு உட்காரும் சமயத்தில் அதே மேஜையின் முன் ஒரு யுவதி சாப்பிட உட்கார்ந்தாள். ராபர்ட் கொடுத்த சீட்டை ஹாரிசன் ஹோட்டல் சிப்பந்தியின் கையில் கொடுத்ததும், அவன் பகபகவென்று சிரித்து, 'வார்பர்டன், ராபர்டின் இன்னொரு கடன் தீர்ந்தது, பெரிய நக' என்று கூவி, சீட்டைக் கிழித்து எறிந்துவிட்டு, பல தட்டுகளிலும் கோப்பைகளிலும் சுவையான பண்டங்கள் கொணர்ந்து வைத்தான். யுவதியின் முன் சொற்ப உணவே வைக்கப்பட்டிருந்தது.

விமானத்தில் வெகு காலமாக உலர்ந்ததும் உப்பிலிட்டதும் அழுத்தத்தால் கல்போல் இறுகியதும் சாராம்ச சூர்ணங்களும் கறுத்த வில்லைகளும் மற்ற கவர்ச்சியற்ற பண்டங்களும் தின்று அலுத்துப்போன ஹாரிசனுக்கு உண்மையான காய்கறிகளும் இறைச்சி வகைகளும் கண்டதும் நாக்கிலும் கண்ணிலும் நீர் ததும்பிற்று, மூர்ச்சையாவதுபோலத் தோன்றிற்று. யுவதி அனுதாபத்துடன் 'ஏன், உங்களுக்குப் பிடிக்கவில்லையா? இஷ்டமில்லாததைச் சாப்பிட வேண்டாம்...ஏன் ஒரு மாதிரியாகப் பார்க்கிறீர்கள்? இந்தப் பிரதேசத்திற்குப் புதியவரா?' என்று விசாரித்து, உண்மையை அறிந்ததும் 'அட கஷ்ட காலமே! மஹாட்டெதிரியா? அடே, பார்த்தால் மனித ரூபமாகவே இருக்கிறதே!' என்று தன் அருவருப்பையும் வியப்பையும் வெளியிட்டாள்.

'நான் என்னை ஒரு மனிதன் என்றுதான் கருதி வருகிறேன்!' என்று ஹாஸ்யமாகச் சொல்லிக் கொண்டே அவன் தன் முன்னிருக்கும் பழங்களையும் பானங்களையும் சிறிதளவு ஏற்றுக் கொள்ளும்படி அவளை உபசரித்தான்.

'மாட்டவே மாட்டேன். கடன் சுமந்துவிடும். அன்னியர்களுடன் கடன் கணக்கு ஆபத்தானது. 'தீர்க்க இயலாக் கடனை ஏற்க வேண்டாம்' என்று படிக்கவில்லையா?' என்று அவள், அளிக்கப்படும் பண்டங்களை ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டே மறுத்தாள்.

'கடனை சீக்கிரமே தீர்த்துவிடலாம். என் கேள்விகளுக்கு விடையளித்தால் போதும்' என்றான் அவன்.

'என்ன கேள்வி?' என்று அவள் கேட்க, 'இந்த ஊரின் ஆட்சி எவ்வாறு நடைபெறுகிறது? சேர்மன், ஷெரீஃப், தலைவன், மேயர்—பெயர் எதுவானாலும் அந்த அதிகாரி எங்கே இருக்கிறார்?' என்று அவன் ஆரம்பித்தான்.

அவள் பிரமித்துப் போய் 'அப்படியெல்லாம் ஒன்றுமே இங்கே கிடையாது' என்று சொல்லித் தலையை அசைத்தாள்.

'அதெப்படி? போலீஸ் அதிகாரி, நியாயாதிபதி, வரி வசூல் அதிகாரி, சுகாதார டைரக்டர்...'



குமாரி ஹேமா

ஸ்ரீ ராஜம்ராமஸ்வாமி எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் குமாரி ஹேமாவின் நடனம் பெரம்பூர் சங்கீத சபாவின் ஆதரவில், பெரம்பூர் கலவல கண்ணன் செட்டி பள்ளிக்கூடத்தில் 17-12-60 அன்று நடைபெற்றது.

'ஊஹூம், அப்படியொன்றும் கிடையாது. நியாயாதிபதி என்றால் என்ன?'

'வழக்குகளை வாதிக்கும் கோர்ட்டில்...'

'மூன்றும் புதிய வார்த்தைகள். புரியவில்லை.'

'யாரேனும் திருடினால் அல்லது பொய் சொல்லி ஏமாற்றினால்...'

'அதெல்லாம் எப்படிச் செய்வது?'

'திருடன் என்றால்கூடத் தெரியாதா? பாட புத்தகம் எதிலும் வரவில்லையா? பிறர் பொருளை இச்சித்து அவர்களுக்குத் தெரியாமல் எடுத்துக்கொண்டு...'

'அதற்கென்ன அவசியம்? தேவையான பொருள்கள் எங்களுக்குக் கிடைத்துவிடுகின்றன; அப்படியாக ஒன்றிரண்டு கிடைக்காவிட்டால் பரவாயில்லை என்று இருந்துவிடுவோம். வேண்டாத சாமானை வெறுமனே நாங்கள் நாடுவதில்லை. தேவைக்கதிகமாக சேகரித்து வைப்பதில் ஒரு நன்மையுமில்லை, வீண் தொல்லைதான். நக மூலம் வேண்டியதெல்லாம் பெற்றுக்கொள்ள வழிகள் இருக்கின்றன.'

'நகர முனிசிபல் ஆபீசில்கூட ஒரு அதிகாரி அல்லது முக்கியஸ்தன் கிடையாதா? வரவு செலவுக் கணக்குகள் பதிய, மீடிங்குகளின் தீர்மானங்கள்படி உத்தரவுகள் போட, நல்ல குமாஸ்தாக்களை அல்லது தனக்கு வேண்டியவர்களை உயர்த்த, மட்டமானவர்களை விலக்க. கீர்த்தியெல்லாம் தான் ஏற்றுக்கொள்ள, குற்றமெல்லாம் பிறர் தலையில் சுமத்த, மொத்தத்தில் வெள்ளைச் சட்டையணிந்து கை வீசி நடக்க ஒரு முக்கியஸ்தன் கட்டாயம் இருப்பானே, அவனிடம் என்னை அழைத்துப் போ.' என்று மறுதளிப்பை ஏற்காத குரலில் அவன் சொன்னான்.

'இங்கே எல்லாரும் முக்கியஸ்தர்கள்தான்—எஞ்ஜினீயர், டாக்டர், தெருக்கூட்டி, உபாத்தியாயர், தீ அணைப்பவன், தோட்டக்காரன்....'

'அவர்களுக்குச் சம்பளம்?'

'அதென்ன?'

'அவர்களுடைய சாப்பாடு, துணிமணி, வீடுவாசலுக்கு...'

'அதுதான் வேலை செய்த இடங்களில் நக ஏறுமே! இங்கே அநேகமாய் எல்லாருக்கும் இரண்டு மூன்று தொழில்கள் நன்றாகவும் வேறு சில சாதாரணமாகவும் தெரியும். ஒவ்வொருவருக்கும் வெவ்வேறிடங்களில் சில நக கைவசமிருக்கும். ஆனால், யாரும் வீணாகச் சேர்த்து வைக்கமாட்டார்கள்.'

'அப்படியா! விந்தையாக இருக்கிறது. அதிருக்கட்டும், 'உவேபாபோ' என்றால் என்ன?' என்று அவன் கேட்க, 'இன்னும் இது கற்கவில்லையா?—'உன் வேலையைப் பார் போ'' என்று விளக்கினாள் அவள். அவனுடைய நச்சரிப்புத் தாங்காமல் சொந்தத்தில் அவள் அந்த வார்த்தையைத் தன்பால் பிரயோகித்துவிடுமுன், அவன் விடை பெற்றுக்கொண்டு விமானத்திற்குத் திரும்பினான்.

(அடுத்த இதழில் முடியும்)




...சிறியோர் மிட்டாய்கள் அத்தனையும் பத்திரப்படுத்திக் கொள்வதிலும் குற்றமில்லை.

...இவர்கள் தூங்கும்வரை காத்திருந்து பெரியவர்கள் ஒரு சிலவற்றை அபகரித்துக் கொள்வதும் தவறில்லை.

...தவறு யாருடையது?...நியூட்ரைன் மிட்டாய் இவ்வளவு பேர்களின் ஆவலையும் தூண்டுமளவு சிறப்புடையதாக இருப்பதே காரணம்.

Nutrine

நியூட்ரைன் மிட்டாய்கள்

நியூட்ரைன் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட்
சித்தூர், ஆந்திரப் பிரதேசம்

அட்டைப் படக்கவிதை

# ஊடல்

இளங்கார் வண்ணன்

★

சொல்லை, நீ சொல்லாலே
சுட்டெரித்துச் செல்லாதே!
முல்லையிதழ் மென்மையிலே
முள்ளதனை நீட்டாதே!

தேள் என்னைக் கொட்டி விட்டால்
ஜெபத்தாலே போக்கிடுவேன்!—நின்
நீள்விழியே கொட்டி விட்டால்
நீக்கும்வழிக் கென்செய்வேன்?

அழலாலே சூடுண்டால்
ஆற்றவொரு மருந்துண்டு—உன்
அழகாலே சூடுண்டால்
ஆற்றும்வகை ஒன்றுண்டோ?

கோட்டானின் ஊம்கொட்டில்
கொடும் அச்சம் கொண்டிடலாம்
பாட்டாலும் குயில்கூடப்
பயங்காட்டக் கூவுவதோ!

மதுரத்தேன் உண்டிங்கே—உன்
மணி நாவைத் தீட்டுதற்கு
உதிரத்தில் தீட்டாதே!—என்
உள்ளத்தை வெட்டாதே!



# இலங்கை லிகிதம்

இலங்கையின் சரித்திரத்தில் இன்று போல் என்றும் ஏற்பட்டதில்லையென்று சொல்லும்படியாக ஒரு பெரிய நெருக்கடி உருவாகியிருக்கின்றது. இன்றைய நிலையில் எப்பொழுது என்ன நேரிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சென்ற 1956ம் ஆண்டிலும் 1958ம் ஆண்டிலும் ஏற்பட்டதைப் போன்ற ஒரு பெரிய கொந்தளிப்பை ஒவ்வொருவரும் எதிர்பார்த்துக்கொண்டு நிம்மதியற்ற வாழ்வு வாழ்ந்து வருகிறார்களென்று கூறினால் சிறிதும் மிகையாகாது. எந்த நிலைமையையும் சமாளிக்க போலீசும் இராணுவமும் தயாராக இருக்கின்றன. உண்மையைச் சொல்லப்போனால் கடற்படையினர் ஏற்கனவே தமிழ் பேசும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர். ராணுவத்திலும் போலீசிலும் அரசாங்க சேவையிலும் உள்ளவர்களது ரஜாக்களெல்லாம் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. இந்த நெருக்கடிக்கு என்ன காரணம். இதற்குப் பரிகாரமே கிடையாதா, பரிகாரம் செய்ய ஏதாவது முயற்சி நடைபெறுகின்றதா என்ற விஷயங்கள் ஆராயத்தக்கவை.

அரசாங்க உதவி பெற்ற பள்ளிக்கூடங்கள், ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் ஆகியவைகளையெல்லாம் அரசாங்கம் தனது பொறுப்பில் எடுத்து நடத்துவதென்று சில மாதங்களுக்கு முன்னால் ஆளும் கட்சியினர் பார்லிமெண்டில் தங்களுக்கு இருக்கும் மெஜாரிட்டி பலத்தைக்கொண்டு ஒரு சட்டத்தை இயற்றினார்கள். இலங்கையில் உள்ள பெரும்பாலான பள்ளிக்கூடங்கள் இந்து, கத்தோலிக்க, பௌத்த சமயத்தவர்களினால் நடத்தப்படுபவை. பௌத்தப் பள்ளிக்கூடங்கள் மேற்படி சட்டத்தை அதிகமாக ஆட்சேபிக்கவில்லை. காரணம் எல்லாப் பள்ளிக்கூடங்களும் அரசாங்க உடைமையாக இருக்க வேண்டுமென்பதை ஆரம்ப முதல் வலியுறுத்தி வருவது பௌத்த காங்கிரஸ் என்ற ஸ்தாபனம்தான். அவர்களின் நெருக்குதலின் பேரிலேயே அரசாங்கம் பள்ளிக்கூடங்களை எடுத்துக்கொள்ளும் சட்டத்தை இயற்ற வேண்டியதாயிற்று. இந்துக்களின் பள்ளிக்கூட நிர்வாகிகள் புதிய சட்டத்தை ஆட்சேபித்தபோதிலும் அரசாங்கச் சட்டத்தை எதிர்க்க கடுமையான நடவடிக்கைகளைக் கையாளவில்லை. கத்தோலிக்கர்களோ அரசாங்கத்துடன் நேரடியான போராட்டத்தில் இறங்கத் தீர்மானித்து அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

பள்ளிக்கூடங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் தேதிக்கு முன்னால் கத்தோலிக்க பெற்றோர்கள் தங்களது பள்ளிக்கூடங்களில் குடும்ப சகிதம் குடியேறி அந்தக் கட்டிடங்களை ஸ்வீகரித்துக் கொண்டிருக்கிறார்கள். பலாத்காரமாக அவர்களை வெளியேற்றவேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டுபண்ணியிருக்கிறார்கள். இராணுவமோ அல்லது போலீசோ அவர்களை பலாத்கார முறையில் வெளியேற்றத் தலைப்பட்டால் பெருத்த குழப்பம் ஏற்படுமென்ற நிலைமை உருவாகியிருக்கிறது. இதற்கிடையில் ஒரு சட்டப் பிரச்னை தலையெடுத்திருக்கிறது. அரசாங்கம் ஏற்கெனவே இயற்றியுள்ள சட்டம் பள்ளிக்கூட நிர்வாகத்தை மேற்கொள்ள அரசாங்கத்துக்கு அதிகாரமளித்துள்ளதே தவிர பிறருக்குச் சொந்தமான பள்ளிக்கூடக் கட்டிடங்களை எடுத்துக்கொள்ள அதிகாரமளிப்பதாயில்லை. சட்டத்தில் உள்ள இந்தக் குறையை நிவர்த்த செய்து பள்ளிக்கூடக் கட்டிடத்தையும் நஷ்டஈடு ஏதும் கொடுக்காமல் அரசாங்கம் எடுத்துக்கொள்ள இன்னொரு மசோதாவை அரசாங்கம் இப்பொழுது தயாரித்திருக்கிறது. அந்த மசோதாவை நிறைவேற்றிச் சட்டமாக்குவதற்காக ஒத்திவைக்கப்பட்டிருந்த பார்லிமெண்டு சபை இம்மாதம் 18ம் தேதி மீண்டும் அவசரமாகக் கூட்டப்படுகிறது.

பள்ளிக்கூட நிர்வாகத்தை மட்டுமே தாங்கள் எடுத்துக்கொள்ள விரும்பியதாயும் பள்ளிக்கூடச் சொத்துக்களின் உரிமையில் தாங்கள் தலையிட விரும்ப

வில்லையென்றும் நஷ்டஈடு ஏதும் கொடுக்காமல் பள்ளிக்கூடச் சொத்துக்களையெல்லாம் ஸ்வீகரித்துக்கொள்ள வேண்டிய நெருக்கடியை கத்தோலிக்கர்களே உண்டுபண்ணியிருப்பதாயும் அரசாங்கம் குற்றஞ்சாட்டுகிறது. அரசாங்கம் பள்ளிக்கூடங்களை எடுத்துக் கொள்ளும் காரணம் பிற சமய போதனையை அடியோடு ஒழித்து இலங்கையை ஒரு சிங்கள பௌத்த நாடாக்குவதுதானென்றும் இந்நாட்டிலுள்ள பிற சமயங்களையெல்லாம் அரசாங்கம் ஒழித்துக்கட்ட திட்டமிட்டுக் காரியங்களைச் செய்கிறதென்றும் கம்யூனிஸ்ட் செல்வாக்கு அரசாங்கத்தில் அதிகமிருப்பதுதான் அதன் இந்த விபரீதப் போக்குக்குக் காரணமென்றும் கத்தோலிக்கர்கள் கூறுகிறார்கள். காரணம் எதுவாயினும் கத்தோலிக்கர்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டாலொழிய ஸ்வீகரித்துக் கொண்டிருக்கும் பள்ளிக்கூடங்களை சுலபமாக விட்டு அவர்கள் வெளியேறப் போவதில்லை. அரசாங்கம் பலாத்கார முறைகளில் இறங்கும்பொழுது கொந்தளிப்பு பள்ளிக்கூடங்களில் மட்டுமல்ல, பொதுவாக மற்ற இடங்களிலும் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

## பிரதமரின் இந்திய விஜயம்

பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயகா இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு வந்ததன் பயனாக இந்தியாவையும் இந்திய மக்களையும் ஓரளவு நன்கு புரிந்துகொண்டிருக்கிறாரென்றே சொல்ல வேண்டியிருக்கிறது. இந்தியாவைப் பற்றி அவர் கொண்டிருக்கக்கூடிய பல தவறான எண்ணங்களும் அவரிடமிருந்து விடைபெற்றுச் சென்றிருக்க வேண்டுமென்றும் உறுதியாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்திய மக்களின் தேசாபிமானத்தையும், கடும் உழைப்பையும் கட்டுப்பாட்டையும் அவர் வாயாரப் புகழுவதோடு இலங்கைக்குச் சாத்தியமான உதவிகளையெல்லாம் செய்ய இந்தியா மனப்பூர்வமாக விரும்புகிறதென்றும் அவர் வெளிப்படையாக அறிவித்திருக்கிறார். முக்கியமாக நேருஜி இலங்கையிடம் மிக்க அக்கறை கொண்டிருக்கிறாரென்றும், தேவையான உதவிகளையெல்லாம் செய்ய அவர் தயாராக இருக்கிறாரென்றும், அவருடைய இந்த நல்லெண்ணத்தைப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் தவறு இலங்கையினுடையதுதான் என்றும் அவர் தெளிவாக அறிவித்திருப்பது இலங்கை இந்திய உறவில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது. இலங்கை இந்திய நல்லுறவுக்கு ஒரு பெருந் தடையாக இருப்பது இந்நாட்டிலுள்ள இந்திய வம்சாவழியினர்களான பத்து லட்சம் மக்களுடைய பிரஜாவுரிமைப் பிரச்னைதான். இதற்கு ஒரு சுமுகமான முடிவு கட்ட பிரதம மந்திரி உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்திருக்கிறார். இவ்வருட ஆகஸ்ட் செப்டம்பர் மாதத்திற்குள் பிரஜாவுரிமைப் பிரச்னைக்கு ஒரு முடிவு கண்டுவிடப் போவதாக அவர் அறிவித்திருக்கிறார்.




புகையிலை போட்டிருப்பவர்:— என் ஸார்... பொங்கலுக்கு என்னென்ன வாங்கினீங்க!

நண்பர்:—என்ன சார்! நீங்க ஒண்ணு! எனக்குப் பெண்களே கிடையாதே! எல்லாம் பிள்ளைகள் தான்!

புகையிலை போட்டிருப்பவர்:—ஸரியாப் போச்சு போங்க! நான் பொங்கல் பண்டிகையைப்பற்றிக் கேட்டா...!”

# இருளில் ஒரு தாரகை

'ஆர்வி'

### அத்தியாயம் 30.

பெரியநாயகி அலட்சியமாகக் கரையேறி வந்தாள். ஆனால் அவள் வீசிய கத்தியின் இலக்கு தவறிவிட்டது. அங்கயற்கண்ணி அத்தனை சாமர்த்தியமாக, கத்தி சீறிக்கொண்டு வருமுன்பாகவே நிலத்தில் விழுந்துவிட்டாள். அவள் நின்ற நிலையிலேயே இருந்திருந்தால் அவளுடைய கோமளமான நெஞ்சத்திலே நச்சுக் கத்தி பாய்ந்திருக்கும்.

விர்ரென்று பாய்ந்து வந்த கத்தி, அங்கயற்கண்ணி விழுந்த இடத்துக்கு அப்பால் போய், நிலத்தில் குத்திக்கொண்டு நின்றது.

சித்திரக் குள்ளன் அந்தக் கத்தியையும் அதை வீசியவளுடைய கத்திக் கூர்மை பொருந்திய கண்களையும் ஒரு முறை மாற மாறிப் பார்த்தான். அடுத்த கணம் ஒரு துள்ளுத் துள்ளிக் குதித்துவிட்டு, கத்தியை நிலத்திலிருந்து பிடுங்கி எடுத்தான்.

'போடடா கீழே!' என்று இறுமாப்புடன் அதிகார மிடுக்கோடு கூவினாள் பெரியநாயகி.

'ஹே, ஹே' என்று பல்லைக் காட்டிச் சிரித்துவிட்டு, 'இதையா போடச் சொல்கிறாய்? ஏன்? எதற்காக?' என்று கரகரத்த குரலில் கேட்டான்.

'போடப் போகிறாயா, இல்லையா?'

'சரி; இந்தா, பிடி!' என்று கூறிய அவன், அவள் வீசியது போலவே பெரியநாயகியைக் குறிபார்த்து வீசப் போனான். மீண்டும் சுற்றி நின்ற பெண்கள் எல்லாம் பேதமைக் குரல் எடுத்து அலறினார்கள். ஆனால் குள்ளன் கையை விட்டுக் கத்தி அசையவில்லை. அவன் கையை இழுத்துக்கொண்டு, பரிகாசமாகச் சிரித்தவாறு, திகைத்து நின்ற பெரியநாயகியைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

'கைக்கு எட்டிய பொருளை நழுவவிடச் சொல்கிறாயே, கோமளமே!' என்று கூறியவாறு மீண்டும் துள்ளிக் குதித்தான்.

பெரியநாயகியின் கண்கள் கோபத்தால் சிவக்க அவனைப் பாய்ந்து பிடித்துவிடத் தாவிச் சென்றாள். ஆனால் குள்ளன் அதற்குமேல் அங்கே நிற்க

வில்லை. எடுத்தான் ஓட்டம்! பெருமூச்சு வாங்க, பெரியநாயகி அவனை எட்டிய மட்டும் ஈரத் துணி தடுக்கத் துரத்திச் சென்றாள். குள்ளனுடைய ஓட்டத்தைக் குதிரை வேகத்துக்குத்தான் ஒப்பிடவேண்டும். அவன் மாயமாக ஓடி மறைந்துவிட்டான்.



பெரியநாயகி திரும்பி வந்தபோது அவளுக்குக் கோபத்தினாலும் அவமானத்தினாலும் நெஞ்சே வெடித்துவிடும் போலிருந்தது. அத்தனை பெண்களும் நீராடிவிட்டுக் கரையேறுகிறவர்கள்போல் பாசாங்கு செய்தாலும், தன்னையே நோக்கிக் கேலி செய்வது போல அவள் உணர்ந்தாள். அவள் நெஞ்சுத் துடிப்பு எதிரேயிருப்பவர்களுக்கு நன்றாகவே புலப்பட்டது.

அங்கயற்கண்ணி கட்டுக்கடங்காத கூந்தலை ஆற்றின் வேகத்தோடு புரளவிட்டு, பசிய உடற்கூறுகள் நன்றாகத் துலங்கும்படி அலர நீராடிக் கொண்டிருந்தாள். அவளை என்ன செய்வதென்றே பெரியநாயகிக்குப் புரியவில்லை. வந்த கோபத்தில் ஆற்றோடு புரட்டித் தள்ளிவிடலாமா என்றுகூட ஆத்திரப்பட்டாள். அவளுக்குத் தன் பொங்கிய உணர்ச்சிகளை அடக்கிக்கொள்வதே பெரும் பிரயாசையாக இருந்தது.

சேடிகள் இரண்டு இரண்டு பேர்களாகக் கரையேறி அரண்மனைக்குச் செல்லும் அரிவையர் பாதை வழியே நடந்து சென்றார்கள். கடைசியில் எஞ்சியவர்கள் அங்கயற்கண்ணியும் பெரியநாயகியும்தான்! இருவரும் அத்தகைய நேரத்தைத்தான் எதிர்பார்த்தார்கள். பெண் சிங்கமும் பெண் புலியும் ஒரு துறையில் நீராட இறங்கியதுபோல் அவர்கள் தற்காப்புணர்ச்சியோடும் எச்சரிக்கையாக வு பாய்வதற்கேற்ற சமயத்தை எதிர் நோக்கியும்



நிற்பதுபோல் காணப்பட்டார்கள்.

'அரசருக்குத் துரோகம் செய்துவிட்டதாகச் சொன்னாயே, என்னடி நான் துரோகம் செய்துவிட்டதை நீ கண்டுவிட்டாய்?' என்று இருவருடைய கண்களும் சந்திக்க நேர்ந்தபோது கேட்டாள் பெரியநாயகி.

அங்கயற்கண்ணி ஒரு கணம் தயங்கினாள். பதில் சொல்வதா, வேண்டாமா என்று அவள் தயங்கவில்லை. அவளிடம் தனக்குத் தெரிந்த உண்மைகளைப் பிட்டுச் சொல்லிவிடலாமா, கூடாதா என்றே அவளுக்குத் தயக்கம் உண்டாயிற்று. அவள் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்ள விரும்பவில்லை. அப்படிப் பேசுவதனால் உண்டாகக் கூடிய விளைவுகளை அவள் சிறிது எண்ணிப் பார்க்க வேண்டியிருந்தது. பெரியநாயகியோ இன்றுடன் எல்லாம் தலைமுழுகிப் போய்விட்டது போல் துணிந்துவிட்டதாகத் தோன்றினாள்.

'உனக்கே தெரியும். அதை நான் சொல்லி நீ தெரிந்துகொள்ள வேண்டியதில்லை!' என்றாள்.

அப்படி இதுவரையில் அவள் ஒருமையில் பேசியதேயில்லை. இன்று எல்லாம்தான் தலைக்கு மேல் போய்விட்டதே! இனித் தனக்கு மானம் என்ன, அவமானம் என்ன? எது வந்தாலும் அதைக் கூசாமல் ஏற்றுக்கொண்டு, அதற்குச் செய்ய வேண்டிய பரிகாரத்தையும் கூசாமல் செய்துவிட வேண்டும் என்ற துணிவுடன் அவள் நின்றாள்.

'அரசருடைய உப்பைத் தின்றுவிட்டு, அவருக்கு நான் ஏதோ துரோகம் செய்துவிட்டதாக நீ கதைத்தாயே, அதை உன்னால் நிரூபிக்க முடியுமா?'

'ஏன் முடியாது? நீ அப்படி நம்பித்தான் எல்லாம் செய்திருக்கிறாய்? ஆனால் வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்பது தெரியாதோ உனக்கு? ஹூம்; உனக்கு எங்கே அது தெரியப்போகிறது? பரமனைப் பரம முட்டாளாகச் செய்து கைக்குள் போட்டுக்கொண்டிருப்பதாக உனக்கு நினைப்பு! அவனும் முட்டாளாக உன் கையடியிலே காத்துக் கிடப்பவனாக இருக்கலாம். ஆனால் அரசு, அரசாங்கம், அரண்மனை என்பது ஒரு தனிப்பட்ட ஆளைவிட்ட ஆபத்து நிறைந்தவை என்பதை நீ எப்படித்தான் மறந்தாயோ? நீ செய்து வருவதையெல்லாம் இன்னொருவர் கவனித்து வருவார் என்ற எண்ணம் உனக்கு இருந்தால்தானே? நீ இறுமாப்புக்காரி; பெரிய சாகசக்காரி; பெரிய மோசக்காரி. ஆணவமே உன் கண்களையும் கருத்தையும் கவர்ந்துவிட்டன! யாரிடம் இந்த நடிப்பெல்லாம் செல்லுமோ அங்கே போய் வைத்துக்கொள் உன் பசப்பலை! அதை என் வரையில் கொண்டு வந்து காட்டவேண்டாம்!' என்று ஒவ்வொரு வார்த்தையையும் வெகு நிதானமாக, கணீர் கணீரென்று கூறினாள் அங்கயற்கண்ணி.

பெரியநாயகி முதலில் நகடியாகச் சிரிப்பதுபோலச் சிரித்தாள்; பின்னர் மழைக்காலத்து மப்பு இடியைப்போல் கலகலவென்று உரக்கச் சிரித்தாள். அப்படிச் சிரித்துக்கொண்டே அங்கயற்கண்ணியை நெருங்கினாள்.

'அப்புறம் சொல்லடி! கேட்கக் கேட்க உன்னுடைய தீங்குரல் பேச்சு தித்திப்பாக இனிக்கிறதடி! எங்கே, நான் இறுமாப்புக்காரி; சாகசக்காரி; பசப்புக்காரி; மோசக்காரி! இவ்வளவுதானா, இன்னும் ஏதாவது உண்டா? ஏன், வாயை மூடிக்கொண்டு அப்படி என்னை விழுங்கிவிடுபவள்போல் பார்க்கிறாய்? எங்கே, உன் செம்பவள வாயைத் திறந்து செவி இனிக்கச் சொல்லு, பார்க்கலாம்!' என்று இறுதி வார்த்தைகளைச் சொல்லும்போது அவள்மீது அம்புச்சரமெனப் பாய்ந்தாள்.

அங்கயற்கண்ணி ஓர் எட்டுப் பின் வாங்கிக்கொண்டு அவளை எதிர்க்கத் துடியாக நின்றாள். ஆனால் பின்னாலிருந்த மடு தெரியாமல் காலை வைத்துவிட்டு மல்லாந்தாள். போர் போன்ற குழற்கத்தை அவளது தலைக்கே பெரும் பாரமாக இருந்தது. அதை ஒதுக்கிக்கொள்வதற்குள் பெரியநாயகி லாவிப்பிடித்துவிட்டாள். குரங்குப் பிடிதான்!

ஆத்திரத்தால் பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டு அவள் சினச் சிரிப்புச் சிரித்தாள்.

'உம்; சொல்லு! வாயைத் திறந்து சொல்லு! நான் போட்ட பிச்சையை வாங்கித் தின்றுவிட்டு, அதற்கு நன்றி கூறவேண்டிய வாயினால் எனக்கே துரோகம் செய்யத் துணிந்துவிட்ட உன் வஞ்சனைப் பேச்சுக்களை ஒன்றுவிடாமல் சொல்லு!' என்று கூந்தலை வெட்டி வெட்டி இழுத்தாள். ஒவ்வொரு வெட்டலுக்கும் அங்கயற்கண்ணி தண்ணீருக்குள் அழுந்தி அழுந்தி எழுந்திருந்தாள். அவளுடைய கையும் காலும் அவளுக்கு உதவவில்லை. வாய் வைகைத் தண்ணீரைக் குடித்தது. கண்கள் இரண்டும் பிதுங்கித் தத்தளித்தன. கையாலும் காலாலும் அவள் தண்ணீரை அடித்துப் பார்த்துவிட்டு, தவித்துப் போனாள்.

'யாரையடி நான் கைக்குள் போட்டுக் கொண்டிருக்கிறேன்? பரமனையா? உன்னைப்போல் அந்தக் கூறு கெட்ட அரசனை என் கைக்குள் போட்டுக்கொள்ளவில்லையே! எனக்குத் தெரியாது என்று நினைத்தாய்? மதுரத்திடம் பசப்பிக்கொண்டே உன்னோடு சரசமாடும் அந்தக் களவாணிப் பயலைப்பற்றி எனக்குத் தெரியாதென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? சொல்லுடி, சொல்லு! சொல்லாவிட்டால் இந்தத் தண்ணீரிலேயே சொல்லாமல் செத்துப் போய்த் தொலையடி, தொலை!' என்று ஆவேசமும் வெறியும் கொண்டவளாக அவளுடைய கூந்தலைத் தண்ணீருக்குள் இழுத்து அழுத்தினாள்.

அங்கயற்கண்ணிக்கு மீளும் வழியே இல்லை. அவள் தன்னம்



அசுரபலம் படைத்த பெரிய நாயகியின் குரூரமான பிடிப்பிலிருந்து மீண்டுவிடுவோம் என்ற நம்பிக்கையே மாய்ந்துவிட்டது. அவள் தண்ணீரினுள்ளே மூழ்கிக்கொண்டிருந்தாள். பெரிய நாயகியோ பெரும் சிரிப்புச் சிரித்துக்கொண்டி ரு ந் த ா ள். பிடியை அவள் சிறிதும் நழுவ விடவில்லை. ஒருகணம், இரண்டு கணம், மூன்று, நான்கு—

ஃ ஃ ஃ

பசுமலைக் காட்டினுள் பாழடைந்து விளங்கிய மண்டபத்திலே உட்கார்ந்திருந்தார் அந்த மழித்த தலைத் துறவி. அவருடைய கண்கள் அடர்ந்த செடிகளினூடே சென்ற ஒற்றையடிப் பாதையின் மீதே லயித்திருந்தன. நேரம் செல்லச் செல்ல, அவருடைய நெஞ்சம் படபடப்பதாகத் தோன்றியது. உட்கார்ந்திருந்த இடத்தில் அவருக்கு இருப்பே கொள்ளவில்லை.

அந்திச் சூரியன் அந்த மலைவாயின் அடுத்த பக்கத்திலே இறங்கிவிட்டான். பொன்னிற மேனி அங்கே சூழ்ந்து வந்த இருளில் கறுத்து வரத் தொடங்கியது. வெகு நேரம் யாருடைய வரவையோ எதிர்பார்த்துக் காத்திருந்த அவர், குறிப்பிட்ட நேரம் தவறிவிட்டதை யுணர்ந்தவர்போல் தீவிரமாக எழுந்தார். பாழும் மண்டபத்துக்கு வெளியே நின்று கொண்டிருந்த செம்பழுப்புப் புரவி. அவருடைய காலடி ஓசை கேட்டதுமே அது திரும்பிப் பார்த்து, முதுகைச் சிலிர்த்துக்கொண்டு நின்றது.

துறவிதான் அவர்; மழித்த தலை; ஆனால் அவருடைய புயங்களும் துடைகளும் வலிமிக்க தூக்க மரம் போல் உறுதி வாய்ந்திருந்தன. அடுத்த கணம் அவர் அந்தப் புரவிமீது பாய்ந்து ஏறினார். அவருடைய குறிப்பை உணர்ந்தது போன்ற குதிரை கிழக்குப் பக்கமாகச் சென்ற ஒற்றையடிப் பாதை வழியே பாய்ந்து சென்றது. சிறிது நேரத்தில் இருளோடு அவர்கள் சென்ற பாதையும் கலந்து போய்விட்டது. அடர்ந்து ஓங்கி வளர்ந்த செடிகளும் கொடிகளும் அந்தப் புரவியையும் அவரையும் மறைத்து விழுங்கிவிட்டன.

முன்னிருட்டுக் காலம். ஆயினும் பட்டப்பகலில் செல்வதை விட வேகமாகத்தான் சென்றது அந்தக் குதிரை. வாயில் நுரை தள்ள, அது ஓடிக்கொண்டே இருந்தது.

முதல் ஜாமம் கழிந்து, இரண்டாம் ஜாமம் தொடங்கிய சமயம் அது 'ஓ'வென்று இரைச்சலிடும் கடற்கரையருகே நெருங்கிவிட்டதாகத் தெரிந்தது.

வானத்திலே ஒற்றை நட்சத்திரம் ஒன்று கண்ணைச் சிமிட்டியது.

கடற்கரை ஓரமாக அமைந்த தீர்த்த மண்டபம் ஒன்றில் வெளிச்சம் தெரிவதை அவர் இருளில் நின்றவாறு கவனித்தார்.

அங்கே அழகிய இளம் பெண் ஒருத்தி, இரண்டொரு சேடியர் புடைசூழ வீற்றிருக்கக் காணப்பட்டாள். வடக்குத் திக்கிலிருந்து வந்துகொண்டிருந்த ஒரு குதிரையையும் அதன்மீது வந்த இளம் வீரனையும் அவர் அங்கிருந்தவாறு ஒருங்கே கண்டார்.

பூம்புகார்த் துறையில் நின்ற புலிக்கொடி கட்டிய மாக்கலம் காற்றிலே, அப்போது முளைத்தெழுந்த முழு நிலவிலே மெல்ல அசைந்தாடிக் கொண்டிருந்தது.

(தொடரும்)






'வேணாம் மச்சான், நேக்கு ரொம்ப வெக்கமா இருக்குது.'

'பெரிய வெக்கந்தாண்டி. புதுசா, நோக்குமட்டும் வந்திருச்சோ? எல்லாம் கொஞ்ச நாளக்கி அப்படித்தான் இருக்கும். நாளாக ஆக, தானா எல்லாம் சரியாயிடும்.'

'அதுக்கில்லீங்க... என்னமோ, நாலு ஆம்பிள்ளைங்களுக்கு நடுவே, கூச்சமில்லாம ஆடிப் பாடிக் குதிக்கிறதுன்னு...'

'அட, ஆம்பிள்ளைங்களைக் கண்ணாலேயே காணாதவ மாதிரியில்லே பேசறே? இதுலே என்னா வெக்கம்கிறேன்? நம்பகிட்டை திறமை இருக்குது; வெளிப்படுத்தறோம். இதுக்கு என்னா வெக்கம் வந்திடுச்சுது?'

'ஆயிரம் சொல்லுங்க...எப்படிப் பேசினாலும் பொம்பளை பொம்பளைதானேங்க?... கூச்சமில்லாமே போகுமா மச்சான்? நீ என்னமோ, அம்மாம் லேசாச் சொல்லிப்பிட்டே. எனக்கோ, உன்னைத் தவிர வேற யாரையும் பார்த்தாக்கூட, உடம்பு 'வெட வெட'ன்னு நடுங்குது...வீட்டுக்குள்ளே கிடந்து, சம்பாரிச்சுக் கொண்டாறவருக்குச் சோறாக்கிப் போட்டு, ஆசையாப் பேசிக்கிட்டிருக்கிறத்தை விட்டுட்டு, வெக்கம் மானம் மறந்து எப்படி மச்சான், சதிராட முடியும்?'

'இதுதான் எனக்குப் புடிக்கலைங்கிறேன். சினிமாவிலே ஆடறதாலேயே நம்ப மானம்—மருவாதையெல்லாம் போயிடறதா அர்த்தம்னு யார் சொன்னாங்க?...எங்க 'அம்மா' 'பேரளத்துப் பைங்கிளி'ன்னு எப்படிப் பேர் வாங்கினாங்க? அவங்ககூட இப்படித்தான்; ஏன் இதைவிட மோசமா, ஒருவாய்ச் சோத்துக்கே தாளம் போட்டுக்கிட்டிருந்தவங்களாம். இத்தனைக்கும், உன் அழகிலே கால்பங்குகூடக் கிடையாது. பாதாளக் கிணறு மாதிரி கண் ரெண்டு; ஒட்டிப் போன கன்னம்; சதையில்லாத உடம்பு; குச்சி–குச்சியா கையும் காலும்!...'மேக் அப்' இல்லாமல்

அவங்களைக் கண்ணால் பார்க்க முடியாது. அவுங்க அழகை, உன் கால்லேகூடக் கட்டி அடிக்க முடியாது. அவள் என்னடான்னா, இன்னிக்கு லெட்சம் லெட்சமா ரூவா சேர்த்துட்டு, கால்மேல் கால் போட்டுக்கினு உக்காந்து கிடக்கிறாள்...எப்படி முடிஞ்சுச்சு அவளால்?'

'எப்படி முடிஞ்சுச்சு? வெக்கம்-மானத்தைவிட்டாள்— முடிஞ்சிச்சு. உலகமெல்லாம் அவளைப் பத்தி எம்மாம் மட்டமா பேசுது? நல்லவேளை, அவளுக்குக் கல்யாணம் ஆகலை; ரொம்ப சௌகரியமா இருக்குது.'

'அட, நீ சொல்றதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கிட்டிருந்தா என்னா அர்த்தம்னு கேக்கறேன்? 'நாளைக்கே' நீ பெரிய நடிகையாகி, லட்சம் லட்சமா சொத்துச் சேர்த்து, நாம ரெண்டு



ஏம்பா! இதுலே ''இல்லான் அகத்திருக்க இல்லாததொன்றில்லை''னு போட்டிருக்கே! அப்படின்னு என்ன அர்த்தம்?
''இல்லான் அகத்திருக்க'', அதாவது மனைவியானவள் விட்டிலிருக்கும் போது. ''இல்லாததொன்றில்லை'', இல்லாத பொருள் ஒன்றல்ல; அரிசி இல்லை, பருப்பு இல்லை, உப்பு இல்லை, புளி இல்லை, பணமில்லை, காசில்லை, இப்படியாக இல்லாத பொருள் ஏகப்பட்டது'' என்று அர்த்தம்!

பேரும் காரில் போனால்...ஹூம். உனக்கெங்கே புருசன்மேல ஆசையிருக்குது? இருந்தாக்க, இப்படியெல்லாம் நான் சொல்றதைத் தட்டிக் கழிப்பியா?'

'சரி மச்சான், உன் இஷ்டப்படியே ஆவட்டும். ஆனாலும் எனக்கென்னவோ பயமாத்தான் இருக்குது, மச்சான்.'

'என் கண்ணில்லே. இப்பத்தான் என் செல்லக் குட்டி! நாளைக்கே எங்க 'அம்மா'வை இட்டாரேன், இந்த வழியா...நீ பெரிய நடிகையாகி, நாம் பணக்காரர் ஆயிட்டா, அப்புறம் நான் இந்த டிரைவர் வேலைக்கே முழுக்குப் போட்டுட்டு, காரிலே, எப்பவும் உன் கூடவே...'

'ஐய, விடுங்க கையை, யாராவது பாக்கப் போறாங்க.'

☘ ☘ ☘

'டிரைவர், காரை எடு. 'அனுமந்தன் ஸ்டூடியோ'க்குப் போகணும்.'

'இதோ வந்துட்டேனுங்க.'

''இராவணா புரொடக்ஷன்ஸ்' 'கால் ஷீட்' இன்று தரமுடியாதென்று சொல்லிவிட வேண்டும்.'

'......'

''பாரதா ஸ்டூடியோ'வுக்குப் போ'.

'சரிங்க.'

☘ ☘ ☘

'அப்பப்பா, 'அனுமந்தன் ஸ்டூடியோ'விலே, இன்னிக்கு உயிரையே எடுத்துட்டாங்க.'

'இன்னிக்கு உங்க நடிப்பு ரொம்பப் பிரமாதமுங்க.'

'காதல் காட்சியாம், கர்மம் கர்மம்! எவனையோ புதுமுகம்னு கொண்டுவந்து போட்டிருக்காங்க. அவனுக்கு 'நான் உன்னைக் காதலிக்கிறேன்'னு சொல்லத் தெரியலை. நெஞ்சும், மார்பும்





'திக்திக்'குனு அடிச்சுக்குது. பாவம்! ஒருதடவை என் தோளைப் புடிச்சுத் திருப்பினப்போ, அவன் உடம்பெல்லாம் பதறிச்சு...வேர்த்து விறுவிறுத்துப் போய்...உனக்குத் தலைமயிர், அடர்த்தியாக, அழகாக வளர்ந்திருக்கிறது டிரைவர்.'

'ஹிஹிஹி... இல்லீங்க... ஆமாங்க...'

'சரி, வீட்டுக்குப் போகலாம்; காரைத் திருப்பு. ஒரே அசதியா இருக்குது எனக்கு...உனக்கிருக்கிற அழகுலே கால் பங்குகூட இந்தக் கதாநாயகன்களுக்கு இல்லை, டிரைவர் என்ன, நான் சொல்றது சரிதானே?'

'ஹிஹி...ஹி...அப்படியெல்லாம் ஒண்ணுமில்லீங்க.'

'நேரே வீட்டுக்குப் போக வேண்டாம். 'கெம்பே கௌடா' ரோடு வழியா போய், 'மெஜஸ்டிக் சர்க்கிள்' வந்து, 'ஸிடி மார்க்கெட்'டைச் சுத்திக்கிட்டுப் போ. எனக்கு ஊரைப் பார்க்கணும் போலிருக்கு இன்னிக்கு...இப்படி, உன் கழுத்திலே கையைப் போட்டுக்கிட்டு எத்தனை நேரம் வேண்டுமானாலும் கடத்தலாம் போலிருக்கு, அந்தக் கதாநாயகன்களின் மார்லே வீழ்ந்து படுத்துப் புரண்டு கொஞ்சற கண்றாவிக்கு...'

'...ம்...வந்து...கொஞ்சம் கையை எடுத்துக்குங்க... 'ஸ்டியரிங்' பிடிக்க முடியல்லே...'

'பரவாயில்லை. மெதுவாத்தான் போயேன். என்ன, கொள்ளை போற அவசரம் அப்படி?'

'சரிங்க.'

'......'

'......'

'டிரைவர்!'

'ம்?'

'நான் அழகா இருக்கேன். இல்லியா?'

'ஐயோ, என்ன கேள்விங்க இது? நீங்க பிரபல நடிகை...'

'ஐயோ, அந்தப் புராணமே வேண்டாமே! நான் அழகா இருக்கேனா, இல்லியா?'

'கொள்ளை அழகு, போங்க.'

'கொள்ளை அழகுன்னா?'

'அதையெல்லாம் எப்படிங்க வாயாலே சொல்றது?'

'என் கண் எப்படி இருக்குது?'

'நல்லா இருக்குங்க.'

'நல்லான்னா?'

'நல்லா... நல்லாத்தாங்க... அப்படியே, பார்த்துக்கிட்டே இருக்கலாம்போலே...'

'மூக்கு?'

'அது அதைவிட அழகுங்க.'

'பல்?'

'நல்லா, முல்லை வரிசைன்னு சொல்றுப்பலே...'

'கன்னம்?'

'என்னா கேள்விங்க இது? பிரபல நடிகை, நீங்களா இப்படியெல்லாம் கேக்கறது?'

'இதோ பார், அதையெல்லாம் நான் உன்னிடம் கேட்கவில்லை. என் கன்னம் எப்படி இருக்கு, சொல்.'

'அதுவா... வந்து... வந்து... நல்லா, செக்கச் செவேல்னு...

செக்க செவேல்னு...அவ்வளவு தானா? கடிச்சுத் தின்னுடலாம்போல இருக்காமே; நெஜமாவா?'

'ஹிஹி...அதை நான் எப்படிங்க சொல்றது?...அட, ஏங்க, உடம்பு சரியில்லையா? ஏன் என் கழுத்தை இறுக்கி, இப்படிக் கட்டிக்கிறீங்க?'

'ஒண்ணுமில்லை... எனக்கென்னவோ, உன்னை ரொம்பவும் பிடிச்சிருக்கு, டிரைவர்.'

'வீடு வந்திருச்சுங்க; இறங்குங்க.'

'அட, அதுக்குள்ளாறவா?'

'டிரைவர்!'

'ஏங்க?'

'ரொம்பத் தலையை வலிக்குது; ரெண்டு 'பில்ஸ்' கொண்டு வா; அதோடு, தைலமும்கூட.'

'வேலைக்கார அம்மாவிடம் கொடுத்தனுப்பட்டுங்களா?'

'பரவாயில்லை; நீயே கொண்டா.'

'......'

'...ம்...கொஞ்சம் இந்தத் தைலத்தை நெத்தியிலே தேய்ச்சு விடு.'

'வேலைக்கார அம்மாவைக் கூப்...'

'வேணாம். நீயே கொஞ்சம்... அப்பா, இப்பத்தான் இதமா இருக்குது...உன் கைதான் எவ்வளவு வலுவாக...'

'போதுங்களா?'

'இன்னும் கொஞ்சம்...இதோ பார், இங்கே...இங்கே...அப்பா, ரொம்ப இதமா...டிரைவர், உண்மையிலேயே நீ ரொம்ப அழகு...'

'தலைவலி தேவலைங்களா?'

'தேவலை. கொஞ்சம் இப்படி வாயேன்.'

'என்னாங்க?'

'இப்படி உட்காரேன்.'

'பக்கத்திலேயா? உங்க பக்கத்திலேயா?'

'ஐய, உட்கார்ந்தா என்ன? சும்மா உட்கார்.'

'ஐயோ, என்னங்க இது?'

'ஆசையோடு காத்துக்கிட்டிருந்தேன். மேக்-அப் போட்டுக்கினு கதாநாயகன் மாதிரி வர்ற அம்பது வயசுக் கிழவங்களோடு பழகிப்பழகியே என் உணர்ச்சியெல்லாம் செத்துப் போச்சுது. இன்னிக்கு ஏனோ உன்னிட்டே...'

'ஐயோ, என்னை விடுங்க; விட்டுடுங்க.'





என்னை விட்டுட்டா? இதோ பார், இந்த ஒரு தரம் மட்டும்…நீ எவ்வளவு பணம் கேட்டாலும் தர்றேன்…’

‘வேணும். என்னைக் கட்டாதீங்க. நான் போயிடறேன்.’

‘என்னை விட்டுட்டா? ஊஹூம்! நான் வேண்டாமா உனக்கு?’

‘ஐயோ வேணும், என்னை விடுங்க. நான் ஓடியே போயிடறேன். விட்டுடுங்க.’

‘சீ முரடன்? இப்படியா முகத்துலே பிருண்டிட்டு ஓடறது? படிக்காத முட்டாள்’ங்கிறது சரியாத்தான் இருக்குது. போய்த் தொலையட்டுமே! பெரிய ‘மன்மதன்’னுதான் மனசுக்குள் நினைப்பு…’

ஃ ஃ ஃ

‘ஐயோ, வள்ளி, வள்ளி!’

---



இந்திய நுண்கலைக் கழகத்தின் ஆதரவில் எழும்பூர் மியூஸியம் தியேட்டரில் முதல் தேதியன்று குமாரி கே. ஆர். கீதாவின் பரத நாட்டியம் சிறப்பான முறையில் நடைபெற்றது.



‘வள்ளி!’

‘……’

‘ஏன் அழுவுறே இப்படி? என்ன நடந்திச்சு?’

‘நீ ஏன் இப்படிப் பதர்றே?’

‘அதை அப்புறமா சொல்றேன். ‘என்ன நடத்திச்சு’ன்னு நீ மொதல்லே சொல்லு.’

‘நான்…நான்…நீ சொன்ன முதலாளியோட ஆள் வந்து என்னை ஏதோ ‘டான்ஸ்’ ஆடச் சொல்லிட்டு, அப்புறம்…’

‘ஐயோ, அதை எப்படி மச்சான் சொல்வேன்? சினிமாவுக்கு முந்நூறுன்னு சொல்லி ரூபாயைக் கொடுத்து. நான் எண்ணிக்கிட்டிருந்தப்போ, ‘உனக்காக இருநூறு’ன்னு சொல்லி, என் கையைப் பிடிச்சு…’

‘அப்புறம்?’

‘பளார்’னு விட்டேன் அவன் கன்னத்தில். காரிலே ஏற ஓடிட்டான்…என்னை மன்னிச்சுடு, மச்சான். எனக்கு வேணும் இந்தச் சினிமா வாழ்க்கை. நான் மானத்தோட வாழ ஆசைப்படறேன். ஆம்பிள்ளைங்க எத்தனை அக்கிரமம் பண்ணினாலும் தட்டிக் கேட்க யாருமில்லை. ஆனா, பொம்பிள்ளைங்களே ‘இப்படிச்’ செஞ்சிக்க, பூமாதேவி பொறுக்கமாட்டா…’

‘அழாதே, வள்ளி. நியாயம் ரெண்டு பேருக்கும்தான். ரெண்டு பேருமே ஏதோ பள்ளத்திலே விழப் பார்த்தோம். நல்லவேளை, தப்பிச்சுக்கிட்டோம். இனிமே, நமக்கு இந்தப் பிழைப்பே வேணும். எங்காவது கூலி வேலை செஞ்சாவது பிழைக்கலாம். உம், புறப்படு.’

# முதுகிலே தட்டினார்!



கலைதெய்வம் ராஜகோபால்

என் வாழ்வுக்கு வளம் தேடித்தந்து வாழக் கற்றுக் கொடுத்த கலைவாணரை நான் நினைக்காத நேரமே கிடையாது. அவரோடு தங்கி இருந்த பேறு பெற்றிருந்த அந்தச் சில நாட்களில் எத்தனை சம்பவங்கள் நடந்திருக்கின்றன!

ஒருசமயம் அவரோடு திருக்குற்றாலம் போயிருந்தேன். அவர் எங்கு போனாலும் காரில்தான் போவார். குற்றாலத்திலே ஓய்வு பெற்றுக் கலைவாணர் தங்கி இருந்தபொழுது, எண்ணெய் தேய்த்து முழுக விரும்பினார். ‘தம்பி, தலைக்கு எண்ணெய் தேய்த்துவிட ஆள் அகப்படுமான்னு பாரு. சென்னைக் குழாயிலே எண்ணெய் தலையை குடுப்பது விடக் குற்றாலத்து அருவிக்கே தலையை அர்ப்பணித்து விடுகிறேன்!’ என்றார்.

நான் உடனே, ‘ஆள் எதுக்கு? நானே எண்ணெய் தேய்த்து விடுகிறேன்’ என்று சொல்லிவிட்டு அவரது பதிலைக் கூட எதிர்பாராமல் அவருடைய தலையில் படபடவென்று தட்டி எண்ணெயைத் தேய்க்கத் தொடங்கினேன். அப்போது கலைவாணர் என்னிடம் சொன்னார்: ‘தம்பி, இப்ப நீ எனக்கு எண்ணெய் தேச்சுவிடறே. ஆனந்தமா, நிம்மதியா இருக்கு. நாளைக்கு நான் உனக்கு எண்ணெய் தேச்சுவிடற காலம் வந்தாலும் வரலாம்!’



என் கண்கள் கலங்கிவிட்டன. ‘அப்படிச் சொல்லாதீர்கள். உங்களுக்கு அந்தக் காலம் வரவே வராது!’ என்றேன்.

சிரித்தார் கலைவாணர் அந்தச் சிரிப்புக்கு முன்னால் குற்றால அருவிகளின் கலகல என்ன செய்யும்?

சிரிப்புக்குப் பிறகு அவரிடமிருந்து கருத்து ஒன்று பிறந்தது. ‘காலம் இப்படியே இராது. மாறிக்கிட்டே போகும் அதுக்குத் தகுந்தாப்பிலே மனுஷனும் மாறிக்கிட்டே இருப்பான். அவனுடைய குணமும் இப்படித்

நான் இதே நிலையிலே இருப்பேன். நீ என்னிக்கும் எனக்கு எண்ணெய் தேச்சு விட்டுக்கிட்டே இருப்பேன்னு அர்த்தமில்லே. அதான் சொன்னேன். 'அந்தக் காலமும் வரலாம்னு!' மனுஷனே அப்படித்தான், தம்பி!




அதற்குப் பிறகு—நான் சினிமாவில் சேர்ந்து ஓரளவு வசதி பெற்ற பிறகு பிறரைவிட்டு எனக்கு எண்ணெய் தேய்த்துவிடச் சொல்லுவதில்லே! தேவை என்று தோன்றினால் என் கைதான் என்னுடைய தலையில் கைவைக்கும்! இன்னொருத்தனை என் தலையிலே 'டச்' பண்ணவிடமாட்டேன்!

மற்றொரு சமயம் கலைவாணருடன் மைசூருக்கு ஒரு படப்பிடிப்பிற்காகப் போயிருந்தேன். அங்குள்ள பிருந்தாவனக் காட்சிகளை அவர் கண்டுவிட்டு, 'இவைகளையே படமாக்கிறபடி ஆக்கி, சினிமாவிலே காட்டினா பிரமாதமா இருக்கும்! நல்ல லொகேஷன். ஆனா கறுப்புப் படத்திலே காட்டினா போதாது, எவனாவது கலர்லே படம் புடிச்சுக் காட்டினா வெகு சிறப்பா இருக்கும்!' என்றார்.

எங்களை வைத்துப் படமாக்க வந்தவர் 'ஆமாங்க' என்று அவருடைய கருத்துக்கு மதிப்புத் தந்தார். 'ஆமாங்க' போட்டு என்ன பண்றது? டெக்னிக் கலர்லே படம் பிடிக்கிற போதில்லே என் கருத்துக்கு உண்மையான மதிப்பு ஏற்படும்!' என்றார் கலைவாணர்.

அதற்கும் படமெடுக்க வந்தவர் இன்னொரு 'ஆமாங்க!' போட்டார்.

மேலும் அவரைச் சோதிக்க என் குருநாதர் விரும்பவில்லை! தென்னாட்டுப் பட முதலாளிகள் 'ஆமாங்க' போடுவதிலே வல்லவங்க. இதிலே போய் பணத்தைக் கொட்டிவிடமாட்டாங்கன்னு எனக்குத் தெரியும் வேலையைப் பாருங்க!' என்று அந்தப் பட முதலாளிக்கு விடுதலையளித்தார். 'ஆமாங்க' அத்துடன் ஓய்ந்தது!

ஆறு மாதங்களுக்குப் பிறகு சென்னை, மிட்லண்டில் வடநாட்டு டைரக்டர் வி. சாந்தாராம் எடுத்த 'ஜனக் ஜனக் பாயல் பஜே' என்னும் இந்திப் படம் வந்திருந்தது. படம் பார்க்கப் போயிருந்த நான் அதில் மைசூர் பிருந்தாவனக் காட்சிகள், நாங்கள் குறிப்பிட்ட இடங்களை வைத்து இப்படியே கலரில் படமாக்கப்பட்டிருந்தன! பார்த்துவிட்டு வியப்பும் திகைப்புமானேன். எதையோ ஒன்றைப் பறிகொடுத்த உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. அன்று கலைவாணர் சொன்ன 'ஐடியா'வை வடநாட்டு டைரக்டர் தட்டிக்கொண்டு போய்விட்டாரே என்று நினைத்துக்கொண்டே வெளியே வந்தேன்.

எனக்குப் பின்னால் முதுகிலே ஒரு கைபட்டது! பட்ட கை முதுகைத் தடவித் தட்டி, 'தம்பி, படம் பார்த்தியா? பிருந்தாவனக் காட்சியைப் பிடிச்சுப் போட்டுட்டான், கவனிச்சியா?' என்று ஒரு குரல் கேட்டது! அது கலைவாணரது குரல்! அவர் படம் பார்க்க வந்திருந்தது எனக்குத் தெரியாது! அசந்து அப்படியே நின்றேன். முன்னால் நடந்து கொண்டே அவர் சொன்னார்: 'தம்பி, எனக்குத் தோன்றிய கருத்து வடநாட்டானுக்கும் தோன்றி இருக்கு. தமிழர்கள் இதை எல்லாம் கோட்டை விடுவது சகஜந்தான்! ஆனா ஒண்ணு. ஒருத்தருக்குத் தோன்றுகிற கருத்து இன்னொருத்தருக்குத் தோன்றக்கூடாதுன்னு இல்லே, இதைப் புரிஞ்சுக்க போதும்!' என்றார்.

புரிஞ்சுக்கிட்டேன்! கலைவாணரிடமிருந்து இன்னும் எவ்வளவோ 'புரிஞ்சிக்க' முடியாமல் அவர் என்னை விட்டுப் பிரிந்து விட்டாரே!

---

# கிறுக்கெட்!

கல்லெடுத்து வீசினக்க யாரும்
காசு கொடுத்து பாக்கமாட்டார் ஆனால்
கல்லெப் போலெக்ரிக்கெட் பந்தை வீசும்
காட்சி பார்க்கக் கூடினங்க கூட்டம்.

பல்லுப்போன கிழவன்கூட மாட்சை
பார்க்கப்போன ஜோரைப் பாருஜோரை
சொல்லப்போனா வெடகக்கேடு பட்டணத்து வாழ்க்கை
சோத்தைவிட்டு 'மாட்சை'ப் பார்க்க கூட்டம் போச்சு பாரு

வீட்டில் பஸ்ஸில் கோர்ட்டிலெங்கும் 'ஸ்கோ'ராம்
விட்டுவிட்டு ஒயரும் 'நம்பர்' 'போ'ராம்
கேட்டுக்கேட்டு: 'ஃபானி'ல் பேசும் நேரம்
கெட்டுப்போச்சு ஆபீஸ் வேலை யாவும்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

3

(காலை மணி பத்து. விமலா ஆபீஸ் செல்வதற்குத் தயாராகத் தெருவில் நின்று கொண்டிருக்கிறாள். தனக்குத்தானே சிரித்துக்கொள்கிறாள். ராமு வருகிறான்.)

# விமலா




'விமலா!...விமலா!...'

'ஆங்?'

'எங்கே போறே?'

'ஆபீஸுக்கு.'

'இன்னிக்கு ஞாயித்துக் கிளமை. ஆபீஸ் ஏது?'

'எங்க ஆபீஸ் ஞாயித்துக் கிளமைகூட உண்டு. அதனால் தான் சம்பளமும்கூட ஜாஸ்தி கிடைக்கறது. வயிறு வெடிக்கற மட்டும் சாப்பிடக் கிடைக்கறது.'

'நீ இன்னும் சாப்பிடலையா?'

'சாப்பாட்டைப் பத்தி ஏன் அவ்வளவு கவலைப்படறே? சாப்பாடு ஒண்ணுதானா சகலமும்? அம்மாவுக்கும் அதே கவலை. தங்கைக்கும் அதே. நீயும் அதையே தான் கேக்கறே.'

'உனக்கு உடம்பு சரியில்லையா?'

'எனக்கா?' – சிரிக்கிறாள். மறுபடியும் சிரிக்கிறாள். 'எனக்கு உடம்பு நன்ன்றாக இருக்கு.'

'ரகுவிடம் போயிருந்தியா?'

'ஊம். போயிட்டு வந்தேனே.'

'என்ன ஆச்சு?'

'என்ன ஆகணும்?'

'அதாவது...என்னன்னா...நீ, என் வீட்டுக்கு வரியா?'

'ஊம்.'

'உட்கார்.'

மராத்தி மூலம் :

ஸ்ரீமதி வஸுந்தரா பட்டவர்த்தன்

---

விமலா உட்காரவில்லை.

'உட்காரேன். ஏன் நின்னுண்டிருக்கே?'



'நான் நின்னுண்டேதான் இருக்கப்போறவ.'

விமலா நாலாபுறமும் பார்க்கிறாள்.

'என்னவேணும் உனக்கு?'

'எனக்கா? எனக்கென்ன வேணும்? எனக்கொண்ணும் வேண்டாம். ஒண்ணும் வேண்டவே வேண்டாம். சாப்பாடு வேண்டாம், தூக்கம் வேண்டாம். நீ வேண்டாம். நான் வேண்டாம்.'

'என்ன இப்படிப் பேசறே விமலா?'

'இப்படின்னா எப்படி?'

'முட்டாள்தனமா.'

'அப்படின்னா என்னை புத்தி சாலிங்கறயா நீ?'

'கண்டிப்பா. புத்திசாலி! கெட்டிக்காரி! அழகி! நல்லவள்!'

விமலா ஒன்றும் சொல்லவில்லை.

'நீ ரொம்ப நல்லவ விமலா. ஆனா, நேத்து ரகுவண்டை போயிருந்தியே என்ன ஆச்சு?'

'என்ன ஆச்சு? ஒண்ணும் ஆகலே...ஆனா, ராமு! உனக்குத் தெரியுமோ? நேத்து நல்ல மழை பேஞ்சுது, நல்ல வெயில் அடிச்சுது, அதே சமயத்துலே மிருதுவான, பட்டுப் போல அழகான நிலா ஒளி வீசியது. எவ்வளவு வாசனை நிரம்பியிருந்தது. ராமு, உனக்குத் தெரியாதா?'

'எனக்குத் தெரியாது.'

'ஆச்சரியமா இருக்கு. உலகமே சுட்டுப் பொசுங்கிப் போயிட்டுது. சிருஷ்டியெல்லாம் வெள்ளத்தில் அடிச்சுண்டு போயிட்டுது. உனக்குத் தெரியாதா ராமு?'

'விமலா, எனக்கு உன்னோடே கவிதை வேண்டாம்.'

'கவிதை? ஊம். ஊம். அதாவது கனவு. கவிதைன்னா கனவுதான் ராமு. கனவுன்னா கவிதை.'

'நான் கேக்கறது இதுதான். நீ நேத்து ரகுவண்டை போயிருந்தே. போயிருந்தில்லையா?'

'ஆமா.'

'அப்போ அவன் உன்னண்டை என்ன சொன்னான்?'

ஒண்ணும் சொல்லலே.'

'ஒண்ணும் சொல்லலையா?'

'சொன்னாரே. 'நீ இங்கேயே இருந்துடு'ன்னு சொன்னார். எனக்கு உன்னிடத்திலும் பயம் இல்லே. லீலாவிடத்திலெயும் பயம் இல்லே. என்னிடத்திலெயும் பயம் இல்லே.'

'அப்புறம்?'

'அப்புறம் அவர் எனக்கு பூச்செடிகளைக் காண்பிச்சார். போட்டோவைக் காண்பிச்சார். அழகு! அமைதி! சாந்தம்!' — சிரிக்கிறாள்.

ராமு அவளை அதட்டுகிறான். 'ஏன் சிரிக்கறே விமலா? என்ன நடந்ததுன்னு சரியா சொல்.'

'மறுபடியும் மறுபடியும் அதையே என்ன கேக்கறே?'

'உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு, விமலா.'

'என்னை எல்லோருக்குமே பிடிச்சிருக்கு.'

'ஆனா எல்லாரைக் காட்டிலும் என்னுடைய பிரியம் ரொம்பப் பெரிசு.'

'ஆனா இதென்ன ராமு? பூச்செடியெல்லாம் இன்னிக்குக் காணலையே, எங்கே போச்சு? டேபிள் க்ளாத்தெல்லாம் கூட எங்கே காணலே? அப்புறம் அந்த அமைதியும் பொறுமையும் நிறைந்த முகம்?'

'முகம்?'

'அதுதான் போட்டோ. உன் மனைவியின் போட்டோ.'

'என் மனைவி செத்துப் போயிட்டாளே, மறந்துட்டியா?'

(விமலா யோசிக்கிறாள்.)



'உன் மனைவி? உன் மனைவி செத்துப் போயிட்டாளா? உன் மனைவி செத்துப் போயிட்டாளா?'...(ஓடுகிறாள்)... 'அப்படின்னா நான் இப்போ ரகுவண்டை போகணும். அவர் பெண்டாட்டி செத்துப் போயிருந்தா நான் அங்கே போகணும்' (போகிறாள்)

'விமலா! எங்கே போறே நீ? திரும்பு இந்தப் பக்கம். பின்னாடி திரும்பு விமலா. ஒரு அடி முன்னாடி எடுத்து வெச்சியின்னா பார்...' ராமு அதட்டுகிறான். விமலா நிற்கிறாள்.

'வா இங்கே. கீழே உட்கார். உட்கார் கீழே.'

விமலா கீழே உட்காருகிறாள். சிறிது நேரம் பேசாமலிருக்கிறாள். பிறகு ராமுவைக் கேட்கிறாள்.

'உன் மனைவி ஏன் திடீர்னு செத்துப் போயிட்டா?'

'திடீர்னு ஒண்ணும் சாகலே. அவ செத்துப் போய் ரொம்ப நாளாச்சு.'

'அப்படியா? ஆனா முந்தா நாள் கூட நான் அவளைப் பார்த்தேனே. நீ கூட நேத்து அவ போட்டோவைக் காட்டினியே. அழகு! அமைதி! பொறுமை! அவ ஸ்பர்ஸம் உனக்குப் பழக்கமானது. அவ இல்லாம உனக்கு சரிப்படாது. உன் மனைவி!...அவ எங்கே ராமு?'

'அவ இங்கேதான் எங்கேயோ இருக்கா.'

விமலா இருந்தாற்போலிருந்து அழ ஆரம்பிக்கிறாள். விம்மி விம்மி அழுகிறாள்.

'ஏன் அழறே விமலா?'

'யாருக்குத் தெரியும்?'

'ரகு உன்னைக் கோபிச்சுண்டானா? உன்னோடே பேசலையா?'

'பேசினாரே.'

'உன்னை நிராகரிச்சுட்டானா?'

'அவர் என்னைக் காதலிச்சார்.'




—44-ம் பக்கம் பாருங்கள்

'காதலிச்சானா?'

'அவர் என்னைத் தோற்கடிச்சார். என்னை வெற்றியடையச் செய்தார். தோற்கவும் செய்தார். எவ்வளவு பெரிய தோல்வி ராமு. அந்தத் தோல்வியினாலேயே வெற்றி கிடைச்சுது. நான் அவரை ஜெயிச்சேன். அவர் மனைவியையும் ஜெயிச்சேன். ஆனா ராமு, அவராலே என்னை ஜெயிக்க முடியலே. ஏன்னா, அதுக்கு முன்னாடியே நானே என்னை ஜெயிச்சுட்டேன்…அப்ப பிடிச்சு எனக்கு அந்த டானிக் ஞாபகம் வந்துடுத்து. ஏன் ராமு, உங்கிட்டே அந்த டானிக் இருக்கில்லையா?'

'இருக்கு.'

'அதை நீ சாப்பிடு. எனக்கு ராமு அதை கொடுப்பது வழக்கம்.'

'உனக்கு அது வேணுமா?'

'சீசீ. எனக்கு எதுக்கு அது? உன் மனைவி செத்துப் போயிட்டாளில்லையா? அதனாலெ நீ சாப்பிடு.' (சிறிது நேரம் யோசிக்கிறாள். பிறகு பேசுகிறாள்) – 'ஏன்னா, உங்களுக்கு அந்த கம்பம் நினைவிருக்கா? விளக்குக் கம்பம்? அதுக்கடியிலே நாம நின்னுண்டிருப்பமே?'

'ஞாபகமிருக்கே. எப்படி ஞாபகமில்லாமப் போகும்? விளக்கு எரிய ஆரம்பிச்சப்புறம் கூட நாம ஒருத்தர் கையை ஒருத்தர் பிடிச்சுண்டு அப்படியே நின்னுண்டிருப்போம். அந்த விநாடி அப்படியே ஓடாமல் நின்றுவிடும். நீயும் நானும்! உன் கண்களும் என் கண்களும்! இன்னைக்கும் உன்னோடெ அதே கண்கள், அதே அழகான முகம், அமைதியான முகம்…விமலா, இப்பவும் நீ எவ்வளவு அழகா இருக்கே?'

'ராமுகூட எப்பவாவது என்னண்டை இப்படித்தான் ஏதாவது சொல்லுவான். என்னைத் தன் கைக்குள் போட்டுக்கப் பார்ப்பான். தூ, ராமு!'

'ஆனா நான் ராமு இல்லே.'

'அது எனக்குத் தெரியும்.'

'அப்படின்னா நான் யார் விமலா? நீ யார்? நான் யார்?'

'அதெல்லாம் ஒண்ணும் எனக்குத் தெரியாது.'

'ஆனா எனக்கு எல்லாம் தெரியும். இதோ உன் கழுத்திலிருக்கற இந்த ஸ்கார்ப்! இந்த ஸ்கார்ப் ஒரு நாள் நான் உன் கழுத்திலே சுத்தனேன்.'

'என் கழுத்திலியா? ராமு? இதை நான் விலைக்கு வாங்கினேன். நீ எனக்கு எப்பவுமே ஒண்ணுமே கொடுத்ததில்லே.'

'இன்னிக்கு குடுக்கறேன். இதப் பாத்தியா? உனக்காகத்தான் இந்த அழகான புடைவையை வாங்கிண்டு வந்து வெச்சிருக்கேன். நேத்து நீ இங்கிருந்து போனே. அப்ப இருந்து நான் நீ வர்ற வழியையே பாத்துண்டிருக்கேன். விமலா, இன்னிக்குக் காலையிலே எழுந்ததுமே கடைவீதிக்குப் போனேன்.'

'எதுக்கு?'

'புடைவை வாங்கறதுக்கு. ஆனா எந்தப் புடைவை வாங்கறதுன்னு தான் தெரியலே. உன் நிறமும் புடைவையின் நிறமும்! உனக்கு எந்த நிறம் பொருத்தமா இருக்கும்னு என்னாலே தீர்மானிக்க முடியலே. அப்புறம் தோணித்து. அழகா இருக்கறவாளுக்கு எதுவாயிருந்தாலும் பொருந்தும்னு. எந்த நிறமாயிருந்தாலும் உனக்கு எடுப்பாத்தான் இருக்கும். அதனாலே இந்தப் புடைவையை வாங்கிண்டு வந்தேன்.'



புடைவையை அவள் உடல் மீது வைத்து அழகு பார்க்கிறான். அவள் தோள்மீது அதை வைத்துப் பிடித்துக்கொள்கிறான்.

'எப்படியிருக்கு? நிறம் பிடிச்சிருக்கா உனக்கு?'

'நிறமா? புடைவையின் நிறமா? புடைவையின் கலரும் என் கலரும்! ஆமாமா. என் கலரும் உங்க கலரும்! லீலாவின் நிறமும் உலகத்தின் நிறமும்! எல்லா நிறமும் ஒண்ணோடொண்ணு கலந்து ஒரு பயங்கரமான கவிதை பிறக்கறது.'

'கவிதை? என்ன கவிதை?'

'எனக்குத் தெரியாது' – சிடுசிடுக்கிறாள். எழுந்து உலாவுகிறாள். படபடக்கிறாள்.

'உடம்பு சரியில்லையா விமலா?'

விமலா அவனைக் கவனிக்கவே இல்லே.

'உனக்குப் பாட வருமா?'

அவள் முன்னால் போய் நின்றுகொள்கிறான்.

'பாடுகிறாயா?'

'பாட்டு?'

'ஊம். பாட்டு! நீ பாட்டே கேட்டதில்லையே எப்பவும்?'

விமலா தலையை அசைக்கிறாள்.

'நான் பாடிக் காமிக்கிறேன்' – அவன் ஒரு காதல் பாட்டு பாடுகிறான். அவளிடம் அடிக்கடி நெருங்குகிறான். அவள் விம்முகிறாள். அழுகை வருகிறது.

'நிறுத்து உன் பாட்டை முதல்லெ. நிறுத்து. சகிக்கலே. கத்தற மாதிரி இருக்கு. அழலாமான்னு இருக்கு. ஓன்னு கத்தலாம்னு தோணறது. வயித்துலெ என்னமோ பண்ணறது. இருதயம் உடைஞ்சு போயிடும் போலிருக்கு. என்னமோ பயமாயிருக்கு. ராமு, நீ கல்யாண ஊர்வலம் பாத்திருக்கியோ? பாண்ட் கேட்டிருக்கியோ? நாதஸ்வரம் எப்பவாவது கேட்டிருக்கியா? அப்ப எப்படி இருக்கோ அந்த மாதிரி அந்த மாதிரி…'

அவள் பார்வை எங்கோ சூனியத்தில் பதிகிறது.

'நான் ஒரு கதை சொல்கிறேன் விமலா. கேக்கறியா?'

'வேண்டாம்.'

'அப்ப நீ சொல்லு. நான் கேக்கறேன்.'

'நானும் சொல்ல மாட்டேன்.'

'அப்ப என்ன பண்ணப் போறே?'

'அது எனக்குத் தெரியாது.'

'அப்படின்னா நீ போ இங்கிருந்து.'

'போன்னா? என் வீட்டிலேருந்து நான் போறதா? வேணும்னா நீ போ இங்கிருந்து. இது ஒண்ணும் உன் வீடில்லே.'


PAKCO



நீடித்து உழைக்கும்
க்ரூட் ஆயில் எஞ்சின்கள்
5/6 H. P., 8/9 H. P. & 10/11
H. P. களில் கிடைக்கும்.
அதிக சக்தி உள்ள எஞ்சின்களுக்கும்
விண்ணப்பிக்கலாம்.
ஆர்ம்ஸ்டிராங் சிட்லி இங்கிலீஷ்
டீசல் எஞ்சின்களுக்கு ஸ்பேர்
பாகங்கள் எப்பொழுதும் ஸ்டாக்கி
லிருந்து கிடைக்கும்.
சென்னை, ஆந்திரா, மைசூர் & கேரள
ராஜ்யங்களுக்கு ஏஜண்டுகள் :
K. S. ஷிவ்ஜி அண்ட் கோ,
தபால் பெட்டி நெ. 5,
78/179, பிராட்வே, சென்னை-1.
போன்: 3617 தந்தி: 'லாம்ப்' Estd. 1903

நான் உனக்குக் கதை சொல்ல
றேன். நீ கேட்டுதான் ஆகணும்.'

'நான் கேட்கமாட்டேன்.'

புறப்படுகிறாள்.

'விமலா!'

திரும்புகிறாள்.

'உட்கார் இங்கே. இந்த நாற்காலியிலே உட்கார்.'

அவள் முதுகுக்கு ஆதரவாக தலையணை ஒன்றை வைக்கிறான்.

'அப்படி ராணி மாதிரி உட்கார். நீ ராணியே தான்னு வைச்சுக்க. நீ இப்ப கோபிச்சுண்டிருக்கே. ராஜாவோட பேச மாட்டியாம். அவரைப் பார்த்து சிரிக்கக்கூட மாட்டியாம்.'

விமலா அவன் சொல்வது ஒன்றையும் கவனிக்காமல் எங்கோ பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

'ஆனால் அவரோ உன்னை சமாதானப்படுத்தப் பார்க்கறார். உனக்காகப் பாட்டுப் பாடுகிறார். உன்னிடம் பேசுகிறார். கெஞ்சுகிறார். ஆனால் உனக்கு மனம் இளகவில்லை. அவருக்கு — அந்த ராஜாவுக்கு நீ வேணும். நீ வேணும் விமலா அவருக்கு. நீ இல்லாமல் அவரால் வாழ முடியாது.'

'வாழறது என்ன அவ்வளவு கஷ்டமான காரியமா ரகு? நான் வாழலையா? நாம எல்லாரும் வாழ்ந்துண்டுதான் இருக்கோம். அந்த மாதிரியே எல்லோரும் வாழணும்.'

பலமாகச் சிரிக்கிறாள்.

ராமுவுக்கு கோபம் வருகிறது.

'போதும் உன் சிரிப்பு. நிறுத்து, உன் எண்ணம் என்ன? உலகத்துலே உனக்கு ஒருத்திக்குதான் மனவருத்தம் இருக்கா? மத்தவாள்ளாம் சுகக்கடல்லே முழுகியிருக்காளா? உன் காலடியிலே மாத்திரம் பூகம்பம், என் காலடியிலே பட்டு மெத்தை விரிச்சிருக்கா? ஆகாயம் உன் தலையிலே இடிஞ்சு விழுந்துடுத்து, என் தலையிலே புஷ்பமாரி பெய்யறதா? — விழிச்சுக்கோ விமலா, விழிச்சுக்கோ. வீரர்களைப்போல வாழக் கத்துக்கோ.'

விமலா கைகொட்டிச் சிரிக்கிறாள்.

'வீரன்? ஆண் பிள்ளை! புலிக்கு வீரம் உண்டு! சிங்கத்துக்கு வீரம் உண்டு.'

'நாம மனுஷாளும் வீரர்கள் தான் விமலா. நாம் வீரர்களாகணும். பலவீனமான எண்ணங்களையெல்லாம் விட்டுடணும். எல்லோரும் அதைத்தான் செய்யறாங்க. நாமும் அதையே செய்யணும் விமலா.'

'நீங்க ரொம்பப் பெரியவர் ரகு.'

'நான் ரகு இல்லே. நான் ராமு. ரகுவின் பேரிலே உனக்குக் காதல் இருந்தது.'

'காதல்?' — புரியாத சொல்லைக் கேட்டது போல மிரள்கிறாள்.

'எனக்கு உன்பேரில் காதல் இருக்கு. இது உனக்குத் தெரியலையா?'

அவள் தலையை அசைக்கிறாள்.

'உனக்கு என்னதான் தெரியறது பின்னே? உன் துக்கம் ஒண்ணுதான் உனக்குப் புரியறது. மத்தவாளது புரியறதில்லெ?'

'என்னுடைய துக்கமா? நான் துக்கத்திலெயா இருக்கேன்? ஊஹூம். நினைவிருக்கட்டும். இப்போ துக்கத்திலிருப்பவர் ரகு. ராமு துக்கத்தில் இருப்பவன். எல்லாரைக் காட்டிலும் அதிக விசனத்திலிருப்பவலைலா.'

அவன் அவள் அருகே செல்லுகிறான். அவள் தோள்களைப்பற்றி அவளைக் குலுக்குகிறான்.



'விமலா! இப்படியெல்லாம் பைத்தியம் மாதிரி செய்யாதே. கொஞ்சம் சுயஞாபகமா இரு. கொஞ்சம் இந்த உலகத்துக்கு வா. யோசி, விமலா. நாம் ரெண்டு பேரும் கஷ்டப்படறவா. விசனத்துலெ இருக்கறவா. நாம ஒரே மாதிரியான பிச்சைக்காரா. சுகங்கற சோலை இல்லாத பாலைவனம் நம்ம வாழ்க்கை. நம்மைப் பார்த்து அநுதாபப்படறவா யாரும் இல்லே. 'உக்கார்' 'சாப்பிடு'ன்னு சொல்றவா யாரும் இல்லே. நம்மளை நாமேதான் கவனிச்சிக்கணும். நம்மைக் கண்டே நாம பயப்படறோம். நம்ம வாழ்க்கை எவ்வளவு விசனகரமானது விமலா. மனுஷ ஜாதி இப்படி வாழ முடியாது. நாம ஒண்ணாயிடுவோம் விமலா. நான் உனக்கு சுகம் அளிக்கிறேன். உன்னை புஷ்பம் போல பாத்துக்கறேன். உன்னைக் காப்பாத்தறேன். உன்னைப் போல எனக்குப் பிரியமானது இந்த உலகத்துலெ வேறே எதுவுமே இல்லையடி பைத்தியக்காரப் பெண்ணே. விமலா!'

அவள் கையைப் பிடித்துக் கொள்கிறான். மற்றொரு கையையும் பற்றுகிறான். தோள்களைப் பிடித்து அசைக்கிறான்.

'விமலா, விமலா! இங்கே பார். நான் சொன்னது உன் காதிலெ விழுந்ததா?'

அவள் மரக்கட்டையைப்போல நின்றிருக்கிறாள். அவன் சொல்லுவது ஒன்றுமே அவளை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. சிறிது நேரங்கழித்து அவள் சுற்றுமுற்றும் பார்க்கிறாள்.

'என்ன பார்க்கறே? என்ன வேணும் உனக்கு?'




பேண்ட்காரர்:—"டேய்! நேற்று ஒரு தமாஷ் நடந்தது தெரியுமா...நம்ப ராமு புதிதா வர்ணம் அடித்திருந்த கம்பத்திலே சாய்ஞ்சிருக்கான். வர்ணமெல்லாம் ஷர்ட்டிலே ஒட்டிண்டிருக்கு........பாவம் கவனிக்காமெ அப்படியே போயிருக்கான். எல்லாரும் பார்த்து சிரிச்சப்பறம்தான் கவனிச்சிருக்கான்......!"

'அந்த டேபிள் கிளாத்? பூச்செடி? அந்த முகம்? போட்டோ? ரகு எங்கே? இதெல்லாம் எங்கே?'

'அதையெல்லாம் நான் தூக்கி எறிஞ்சுட்டேன். நீ பைத்தியக்காரி விமலா. பைத்தியக்காரி!'

'எறிஞ்சுட்டியா? எங்கே? எப்போ? எதுக்காக? என்னைக் கேக்காமயா? என்னோட கவிதையைக் கிழிச்சுட்டியா? என் கனவை முறிச்சுட்டியா? கனவைத் தூள் தூளாக்கிட்டிங்களே ரகு?'

அழுகிறாள். குரல் எடுத்து அழுகிறாள். ராமு அவளை அடிக்கிறான். அவள் 'அம்மாடி' என்று சொல்லிக்கொண்டே கீழே உட்காருகிறாள். அவனையே பார்க்கிறாள். கண் இமைக்காமல் பார்க்கிறாள். அவள் முகம் மாறுகிறது. கன்னத்தில் கையை வைத்த

படியே மெதுவாக எழுந்திருக்கிறாள். அவன் பிரமிப்படைந்து நின்று கொண்டிருக்கிறான். அவள் மெதுவாக அவனை நோக்கி வருகிறாள்.

'என்னை அடிச்சிட்டிங்களா ரகு? இப்ப உங்க மனசுக்கு சமாதானமாச்சா? என்னை அடிக்க யார் சொல்லிக்குடுத்தா உங்களுக்கு? லீலாவா? அவளுக்கு அவமானம் வரக்கூடாதுன்னு என்னை அவமானப்படுத்தனிங்களா? மானம்! அவமானம்! அதையெல்லாம் நான் என்னிக்கோ விட்டாச்சு. அதனால் தான் நேத்து உங்களைத் தேடிண்டு வந்தேன். ஆனா உங்களோட தங்கல்லே. ஒரு நிமிஷம் கூட தங்கல்லே. தங்குன்னு நீங்க சொல்லியும்கூட நான் தங்கல்லே. அப்படியிருந்தும் என்னை அடிச்சுட்டிங்க. நீங்களே கதின்னு உங்க காலிலெ வந்து விழுந்ததுனாலெ உங்க அதிகாரத்தைக் காமச்சுட்டிங்க. எதுக்காக அடிச்சிங்க? நிஜமாத்தான் சொல்லுங்க, என்னை எதுக்காக அடிச்சிங்க ரகு?'




—52-ம் பக்கம் புரட்டுங்கள்.

'ஐயோ பாவம்! முழுப் பைத்தியமே ஆயிட்டாள். இவளையா நான் அடிசேன்? இல்லை விமலா இல்லை. நான் தவறு செஞ்சுட்டேன். என் தப்புதான். உன் நினைவாலே பைத்தியமாய் அப்படி செஞ்சுட்டேன். நீ எனக்கு வேண்டியிருந்தே. எனக்கு உன்னைப் பிடிச்சிருந்தது. இப்பவும் உன்னை எனக்குப் பிடிக்கறது. ஆனா உனக்கும் சுகம் கிடைக்கட்டும்ங்கற ஆசை எனக்கு இருந்தது. உன் வாழ்க்கையும் என் வாழ்க்கையும் குறையுள்ளது. அதை நிறைவுள்ளதாக ஆக்கலாம்னு அப்படி செஞ்சேன். நான் உன்னை அதட்டினேன். புத்தி சொன்னேன். கெஞ்சினேன். உனக்காக பாடினேன். அழுதேன். எல்லாம் செஞ்சு பொறுமையை இழந்தேன். என் கை பரபரத்தது. என்னை அறியாமலே உன்னை அடிச்சுட்டேன். தப்பு, விமலா. நான் செய்தது தப்பு. என்னை மன்னிச்சுடு. என் மனசுலெ உன் பேரிலெ எவ்வளவு கனிகரம் இருக்குங்கறதெ நீ ஒருத்திதான் புரிஞ்சிண்டிருக்க முடியும். ஆனா இப்போ நீ ரொம்ப தூரம் போயிட்டே. நீ 'நீ'யாக இல்லே. உலகத்துக்கு அப்பாலே போயிட்டே. பறந்து போயிட்டே. கனவாயிட்டே. கவிதையாயிட்டே. ஆனா பயங்கரமான கவிதை. என்னாலே பாட முடியாது. தொட முடியாது. வாசிக்க முடியாது. விமலா!'

'ரகு!'

ஆவேசத்துடன் அவனை அணைத்துக்கொள்கிறாள். அவன் அவளை மெதுவாக தன்னிடமிருந்து விலக்கி முதுகைத் தடவிக்கொடுக்கிறான்.

(முற்றும்)



# காதல் கண்களிலே இல்லை

புரட்சி எழுத்தாளர் தமிழ்வாணன்

## 32

பூவேந்தன் கார்களின் இடையே புகுந்து விரைந்து சென்றார். காரோட்டி வேல்நம்பியை அங்கேயே, எதிர் பாராத அந்த நேரத்தில் அவர் நேருக்குநேரே சந்தித்துப் பேச விரும்பினார். ஆனால்—

வேல்நம்பி நிற்கவில்லை.

அவன் திரும்பிப் பார்க்கவுமில்லை.

அவன் திரும்பிப் பார்த்திருந்தால், பின்னால் தன்னைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்த பூவேந்தனைப் பார்த்திருப்பான். ஆனால், அவன் தன் பின்னால் எவரும் வருவதாகவே எண்ணவில்லை!

பூவேந்தன் விரைந்து சென்றாலும் சற்றும் பதட்டமடையவில்லை. அவர் மனம் எண்ணியது: 'வேல்நம்பி! நாம் சந்திக்கும் நேரம் வந்துவிட்டது. எங்கேயோ விரைந்து செல்லப் புறப்பட்டிருக்கும் நீ ஏதாவது ஒரு காரில் ஏறப்போகிறாய்! நானும் அதே காரில் ஏறி வந்து உன்னுடன் பேசப் போகிறேன் என்பதை நீ அறிவாயா?'

அவர் எண்ணம் தடைப்பட்டது!

எங்கேயோ நிறுத்தி வைத்து விட்டு வந்த ஒரு காரைத் தேடுவதைப்போல் இங்கும் அங்கும் விரைந்து சென்றுகொண்டிருந்த வேல்நம்பி, சற்றும் எதிர்பாராமல், பங்களாவின் பின்பக்கம் சென்றான். கார்கள் இருந்த இடத்தை விட்டு விலகி அவன் பங்களாவின் பின் பக்கத்தை அடைந்ததும், சற்றுப் பொறுத்துப் பார்க்கலாம் என்று பூவேந்தன் ஒரு காரின் மறைவில் நின்று கவனித்தார். வேல்நம்பி—

மீண்டும் பங்களாவுக்குள் பின்புற வழியாக மறைந்துவிட்டான்!

அவனை மேலும் தொடர்ந்து செல்லலாமா வேண்டாமா என்று எண்ணியபடி பூவேந்தன் ஒரு சில விநாடிகள் நின்றார். நூற்றுக்கணக்கான பெரிய மனிதர்களும் பணக்காரர்களும் வந்து நிறைந்திருக்கும் அந்தப் பங்களாவில் வேல்நம்பியைத் தொடர்ந்து அப்போது புழக்கடை வழியாகப் போக பூவேந்தன் விரும்பவில்லை.

பூவேந்தன் சிந்தனை செய்தபடியே பங்களாவின் முன் வாயிலை நோக்கி நடந்தார். அப்போது—

பணியாள் ஒருவன் ஓடிவந்து, 'உள்ளே செல்லுங்கள்! விருந்து ஆரம்பமாகப் போகிறது!' என்றார்.

பூவேந்தன் மெல்லச் சிரித்துக்கொண்டே, 'இதோ வந்துவிட்டேன்!' என்றார் வாய்ப்பை நழுவ

விடாமல் அவர் மனம் எண்ணியது: 'அழையாத வீட்டுக்கு நாம் விருந்துண்ணப் போகிறோம்! உண்மையில் நான் யார் என்பதை அறிந்தால், நாகமாணிக்கம் நான் வருவதை விரும்புவாரோ இல்லையோ? போய்ப் பார்க்கலாமே! எப்படியும் நாகமாணிக்கத்திடம் பேச வேண்டியிருக்கிறது!'

அவர் சிந்தனையுடன் பங்களாவுக்குள் நுழைந்தார். உள்ளே—

பூவேந்தன் கண்ட காட்சி அப்படியே அவரை வியப்படையச் செய்தது.

வண்ணக் காகிதங்களாலும், சீனத்து மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய கூடத்தில்—

வண்ணப்பூச்சிகளைப் போல் பலவகை வண்ண ஆடை அணிந்த அழகிய பெண்களும், உயர்ந்த பதவியில் இருந்துகொண்டு பணத்திலேயே வாழ்ந்து வருபவர்கள் இவர்கள் என்று எண்ணும்படி தோன்றிய ஆடவர்களும் நீண்ட மேசையில் இரு பக்கங்களிலும் உட்கார்ந்திருந்தார்கள். மேசையின் ஒரு கோடியில் எல்லாரையும் பார்த்தபடி உட்கார்ந்திருந்த கம்பீரமான மனிதர்—

அவர்தான் நாகமாணிக்கமாக இருக்கவேண்டும் என்று எண்ணினார் பூவேந்தன்.

பூவேந்தனின் ஊகம் சரியாகிவிட்டது!

தயங்கி நின்ற பூவேந்தனைக் கண்டதும், அந்த மனிதர் எழுந்து வந்தார். பூவேந்தனை வரவேற்க அவர் எழுந்து வந்ததும், மேசையின் இரு பக்கங்களிலும் உட்கார்ந்திருந்த அத்தனை பேர்களும் திரும்பிப் பூவேந்தனையே பார்த்தார்கள். அப்போது—

பூவேந்தனுக்கும் சற்று அச்சமாகத்தான் இருந்தது! எத்தனையோ ஜோடி கண்கள் தன்னை நோக்கியதும், தவிர்க்க முடியாமல் ஏற்பட்ட அந்த அச்சத்தை அவர் மறைக்க மெல்லச் சிரித்தபடி, எதிரே வந்து இன்முகத்துடன் சிரித்து நின்று வரவேற்ற நாகமாணிக்கத்தைப் பார்த்தார்.

'உள்ளே வாருங்கள்! ஏன் அங்கேயே நின்று விட்டீர்கள்?' என்றார் நாகமாணிக்கம் பண்புடன்.

'மன்னிக்கவேண்டும்! உங்களை நான் தனிமையில் சந்திக்க வந்தேன்! நேரம் தெரியாமல் வந்துவிட்டேன்! என் பெயர் பூவேந்தன்!'

'நீங்கள் வந்ததுதான் சரியான நேரம்! தனிமையில் பிறகு பேசுவோம்! முதலில் விருந்தில் கலந்துகொள்ளுங்கள்!' என்று நாகமாணிக்கம் சொல்லி பூவேந்தனை அழைத்துச் சென்றார்.

நீண்ட அந்த மேசையின் மறுகோடியில் ஒரு நாற்காலி காலியாக இருந்தது. அங்கே, பூவேந்தனை நாகமாணிக்கம் உட்கார வைத்துவிட்டு, மறுகோடியில், அவர் உட்கார்ந்திருந்த இடத்துக்கே சென்று விட்டார்.

பரிமாறுபவர்கள் விரைந்து வந்து எல்லாருக்கும் உணவு வகைகளைப் பரிமாறிக்கொண்டிருந்தார்கள்.

பூவேந்தனின் கண்கள் எல்லாருடைய கண்களையும் ஒரு முறை சந்தித்தது. அங்கே வந்திருந்தவர்கள் அனைவருமே அவருக்குப் புதியவர்கள், பெரும்பாலானவர்கள் நடுத்தர வயதினர்கள். இளஞ் ஜோடிகளும் அந்தக் கூட்டத்தில் இருந்தனர். ஆனால்—

தனியாக ஓர் ஆணோ பெண்ணோ வந்ததாகத் தெரியவில்லை!



நாகமாணிக்கமும், நாகமாணிக்கத்தின் எதிரே பூவேந்தனும்தான் தனியாக உட்கார்ந்திருந்தார்கள்.

நாகமாணிக்கத்தைப் பற்றி பூவேந்தன் சிந்தித்துக்கொண்டிருந்தார். அவர் அணிந்திருந்த சட்டைப் பொத்தான்களிலும் விரல் மோதிரங்களிலும் வைரக்கற்கள் பளபளத்தன. அவர் சிரித்தபோது ஒன்றிரண்டு பொன் பற்கள் பளிச்சிட்டன. பூவேந்தன் மனத்துக்குள் சிரித்துக்கொண்டார். 'பற்களைக் கட்டுபவர்கள், அதையும் வைரத்தால் கட்டினால் இந்த நாகமாணிக்கம் இப்போது வைரப் பற்களை அணிந்திருப்பார் போலிருக்கிறது! பெரும் பணக்காரராக விளங்கும் இவர் மனைவி எங்கே? குடும்பம் எங்கே?' என்று எண்ணியது அவர் மனம். அப்போது—

பூவேந்தனின் மனத்தில் தோன்றிய வினாக்களுக்கு விடையளிப்பதைப்போல், விருந்தினரில் ஒருவர் எழுந்தார். 'நாகமாணிக்கம் ஐம்பது வயதைக் கடந்து விட்ட போதிலும், அவர் இன்னும் இளமையுடன் இருக்கிறார்! அவரைப் பார்ப்பவர் எவரும் நாற்பது வயதுக்கு மேல் மதிப்பிடுவதில்லை! இதற்கெல்லாம் காரணம் என்ன தெரியுமா? இன்னும் அவர் மணம் செய்துகொள்ளாமல், தன்னந்தனியாக பிரம்மசாரியாக வாழ்வதுதான்!' என்று அவர் சொல்லி முடிக்குமுன்னே, அந்த மனிதரின் மனைவி அவர் கையை மெல்லக் கிள்ளினாள். உடனே—

எல்லாரும் வாய்விட்டுச் சிரித்தபடி கைதட்டினார்கள். பிறகு—

உணவு வகைகளை உள்ளே தள்ள ஆரம்பித்தார்கள்.



பெண்:—என்னப்பா! தினம்தினம் வந்து கழுத்தறுக்கறுர் இந்த மாமான்னு பொய்தானே சொல்றே. நானும் தினமும் பாக்கிறேன். இவர் கையிலே கத்தி அரிவாள் ஒண்ணும் கொண்டு வருவதில்லையே.

நாகமாணிக்கம் மணமாகாதவர், தன்னந்தனியாகத்தான் வாழ்ந்து வருகிறார் என்பதை அறிந்ததும் பூவேந்தன் வியப்படைந்தார். அவருடைய மனம் நாகமாணிக்கத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தாலும், எங்கேயாவது வேல்நம்பியின் முகம் தெரிகிறதா என்று அவருடைய கண்கள் கவனித்தன.

எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு இங்கும் அங்கும் ஒரே மாதிரி உடைகளை அணிந்து ஓடிக்கொண்டிருந்த பணியாட்களையெல்லாம் பார்த்தார். எல்லாமே—

புது முகங்கள்தாம்!

பூவேந்தனின் எண்ணம் இப்போது வஞ்சிக்கொடியின்மீது பதிந்தது. வஞ்சிக்கொடி இந்த விருந்தில் கலந்துகொள்ளாததற்குக் காரணம் என்னவாக இருக்கும்?

பூவேந்தன் ஒன்றிரண்டு ஊகங்கள் செய்து பார்த்தார். ஆனால்—

அந்த ஊகங்கள் சரியாக இருக்குமா என்பதுதான் அவருக்கு விளங்கவில்லை!

வஞ்சிக்கொடியை பூவேந்தன் சற்று நேரத்துக்கு முன் சந்தித்த போது, அவளுக்குத் தலைவலியோ வயிற்றுவலியோ வந்துவிட்டதாகத் தெரியவில்லையே!

விருந்துக்கு வராதவர்கள் பொதுவாக சொல்லும் காரணங்கள் தலைவலியோ அல்லது வயிற்றுவலியோ தான்! தலைவலியோ வயிற்றுவலியோ உள்ளவர்கள் கூட நாகமாணிக்கம் எப்படிப்பட்ட உணவு வகைகளை அளிக்கிறார் என்பது தெரிந்தால், வருவது வரட்டும் என்று விருந்தை விடமாட்டார்கள் என்று முடிவு கட்டிய பூவேந்தன் தனக்குத் தானே சிரித்துக்கொண்டார்!

நேரம் எப்படியோ நழுவிக்கொண்டிருந்தது.

விருந்து முடிந்தது.

வந்தவர்கள் விடை பெற்று நழுவிக்கொண்டிருந்த ா ர் க ள். ஆனால்—

பூவேந்தன் மட்டும் பொறுமையுடன் ஒரு பக்கமாக உட்கார்ந்து காத்திருந்தார்.

எல்லாரும் போய்விட்டார்கள்.

நாகமாணிக்கம் மெல்ல நடந்து வந்து பூவேந்தனின் எதிரே நின்றார். 'உங்கள் பெயர் பூவேந்தன் என்றல்லவா சொன்னீர்கள்?' என்றார்.

'ஆமாம்.'

'உங்களை இதற்குமுன் எங்கும் பார்த்ததாக நினைவில்லை! ஆனாலும், விருந்தில் கலந்துகொண்டதற்காக மகிழ்ச்சி! வாருங்கள் மாடிக்குச் செல்லலாம்!'

பூவேந்தன் எழுந்து நாகமாணிக்கத்தைத் தொடர்ந்து சென்றார்.

பங்களாவின் மாடியில், கூடத்தை அடுத்திருந்த ஓர் அறைக்குள் பூவேந்தனை அழைத்துச் சென்றார் நாகமாணிக்கம். அந்த அறைக்குள் நுழைந்ததும்—

பூவேந்தன் ஒரு சில விநாடிகள் அசைவற்று நின்றார்.

நாகமாணிக்கம் ஒண்டிக்கட்டைதான் என்றாலும், அவர் அந்த அறையை அழகுபடுத்தி வைத்திருந்த விதம் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது!

இந்தியாவிலேயே சிறந்த படாதிபதியொருவர் இலட்சக்கணக்கில் பணத்தை அள்ளி விட்டுப் படமெடுக்க செட் ஒன்றைப் போட்டிருந்ததைப்போல் இருந்தது அந்த அறை!

'உட்காருங்கள்' என்றார் நாகமாணிக்கம்.

பூவேந்தன் உட்கார்ந்தார். அவருக்கு எதிரே நாகமாணிக்கம் உட்கார்ந்தார். அவர், தங்க நிறத்தில் செய்யப்பட்ட சிகரெட் பெட்டியை எடுத்து பூவேந்தனிடம் நீட்டினார்.

'புகை பிடிப்பதில்லை!' என்றார் பூவேந்தன்.

நாகமாணிக்கம் சிரித்துக்கொண்டே, 'என்னிடம் ஒன்றிரண்டு தீய பழக்கங்கள் உள்ளது! அவைகளில் புகை பிடிப்பதும் ஒன்று! தொடர்ந்து புகை பிடித்துக்கொண்டிருப்பேன்! பொதுவாக, மணமானவர்களில் பலர், மனைவிக்கு அஞ்சி பிடிப்பதில்லை! நானும் மணம்செய்துகொண்டிருந்தால், புகை பிடிப்பதை விட்டுவிட்டிருப்பேனோ என்னமோ?' என்றார்.

'நான் மணமாகாதவன்' என்றார் பூவேந்தன் சிரித்துக்கொண்டே.

'மணமாகாமல் மனக்கட்டுப்பாட்டுடன் இருப்பவர்கள் அரிது! உங்கள் உறுதிகொண்ட மனம் உங்களுடைய மனத்திலே பிரதிபலிக்கிறது! உங்கள் நேரத்தை வீணாக்கிக்கொண்டிருக்கிறேன்! வந்த வேலையைச் சொல்லுங்கள்' என்றார் நாகமாணிக்கம்.

பூவேந்தன் தயங்கவில்லை. 'வேல்நம்பியைப்பற்றிப் பேசவே உங்களிடம் வந்தேன்' என்றார் எடுத்த எடுப்பிலேயே!

'வேல்நம்பியா?' என்று சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார் நாகமாணிக்கம். பிறகு—

'அவனை எப்படி உங்களுக்குத் தெரியும்?' என்று கேட்டார்.

'எதிர்பாராத விதமாக அவனை சந்திக்கும்போது எனக்குக் கிடைத்தது! அவனை நான் தொடர்ந்து சென்ற போது வஞ்சிக்கொடியின் பங்களாவுக்குச் சென்றான். நான் அவனைத் தொடர்ந்து போன நேரத்தில் தானா வஞ்சிக் கொ டி அவனை வேலையிலிருந்து நீக்கி விட வேண்டும்?'

'என்ன நடந்தது சற்றுத் தெளிவாகச் சொல்லுங்கள், பூவேந்தன்' என்று சொல்லிவிட்டுப் பூவேந்தனையே உற்றுப் பார்த்தார் நாகமாணிக்கம்.



பூவேந்தன் முகத்தை சற்று கடுமையாக வைத்துக்கொண்டு, 'நான் போலீஸ் இலாகாவிலிருந்து வேண்டுமென்றே வேலையை உதறித் தள்ளியவன்! நிலாவழகி என்றொரு பெண் அண்மையில் கொலை செய்யப்பட்டதைப் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்! அந்த வழக்கில் இப்போது நான் தனிப்பட்ட முறையில் அக்கறை கொண்டிருக்கிறேன்?'

'அப்படியா? நீங்கள் நிலாவழகிக்கு உறவா?'

'இல்லை! நிலாவழகியை எனக்குத் தெரியக்கூடத் தெரியாது! ஆனால் நிலாவழகியின் கொலை வழக்கில் ஈடுபட்டு தலைமறைவாகத் திரியும் செம்மேனியனின் நண்பன் நான். செம்மேனியனை எப்படியேனும் குற்றமற்றவன் என்று காப்பாற்றும் பொருட்டு, நான் இந்த வழக்கில் சில உண்மைகளைக் கண்டுபிடிக்க முயற்சி செய்து வருகிறேன்!'

'இந்த வழக்குக்கும் வேல்நம்பிக்கும் என்ன தொடர்பு?' என்று கேட்டுவிட்டு பூவேந்தனை உற்றுப் பார்த்தார் நாகமாணிக்கம். அப்போது அவர் சிகரெட்டிலிருந்த புகையை இழுத்து மூக்கின் வழியே விட்டுக்கொண்டிருந்தார்!

'நிலாவழகியைப்பற்றிய விவரங்களைத் தெரிந்த ஒரு மனிதனை சந்தித்து நான் பேச முயன்றேன். நிலாவழகியைப் பற்றித் தனக்குத் தெரிந்த விவரங்களை என்னிடம் சொல்ல முன் வந்த அந்த மனிதன் ஓர் ஊமை. அவன் பெயர் வேலப்பன்! அவனை மீண்டும் நான் சந்திக்குமுன், அவன் தற்கொலை செய்து கொண்டான்!'

'தற்கொலை செய்து கொண்டானா?'

'அப்படித்தான் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர்களும், மற்றவர்களும் எண்ணுகிறார்கள்! ஆனால், நான் அப்படி எண்ணவில்லை!'

'நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?'

'ஊமையை மாடியிலிருந்து எவரோ வேண்டுமென்றே தள்ளி கொலை செய்துவிட்டிருப்பார்கள் என்பதுதான் என் உறுதியான முடிவு! நான் எண்ணுவது சரியானது என்றால், ஊமையைத் தள்ளியவன் இந்த வேல்நம்பி!'

வேல்நம்பியா? என்னால் நம்பவே முடியவில்லை! அவன் ஏன் ஊமையைக் கொல்ல வேண்டும்?' என்று கேட்டார் நாகமாணிக்கம்.

'அதைத்தான் அவனிடம் கேட்கவேண்டும்! அவனைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?' என்று கேட்டார் பூவேந்தன்.

'வேல்நம்பி அப்படிப்பட்டவன் என்று எண்ணினால் நான் அவனை வஞ்சிக்கொடியிடம் காரோட்டியாக அனுப்புவேனா? அவன் சற்று முரடன், பிடிவாதக்காரன்! ஆனால் நேர்மையானவன்! ஒரு பணக்காரப் பெண்ணிடம் பணியாற்றினால் திருந்திவிடுவான் என்று எண்ணி அவனை அனுப்பினேன்!' என்றார் நாகமாணிக்கம்.

'வேல்நம்பி உங்களை வந்து சந்தித்தானா?' என்று கேட்டார் பூவேந்தன் ஒன்றும் அறியாதவரைப்போல.

'எப்போது?'

'இப்போதுதான்!'

'இல்லையே! ஏன்?'

'வேலையிலிருந்து நீக்கப்பட்டதும் உங்களிடம் வந்திருப்பானோ என்று ஐயப்பட்டேன்! பாதக




# பூனையும் அழகிய வாலிபனும்

ஒரே ஒரு காலத்திலே... பூனையொன்று அழகிய வாலிபன் மீது காதல் கொண்டது. பூனையின் தாபத்தைக் கண்டு இரக்கம் கொண்ட ஒரு தேவதை பூனையை உடனே ஒரு அழகிய பெண்ணாக மாற்றிவிட்டது. பெண்ணைக் கண்டு மயங்கிய வாலிபன் அவளை உடனே மணம் புரிந்துகொண்டு விட்டான்.

சிறிது காலம் சென்றது. பெண் எப்படி இருக்கிறாள் என்று அறிய தேவதை ஆசை கொண்டது. பூனையின் பழைய சுபாவங்கள் அவளிடம் இருக்கிறதா என்பது பற்றியும் அறிய அதற்கு ஆவல். ஆகையால் அப்பெண் எதிரே ஒரு எலியை தேவதை ஓட விட்டது. அவ்வளவுதான். பெண் உடனே ஓடி எலியை 'லபக்' என்று பிடித்து விட்டாள். இதைக் கண்டு மனம் சோர்ந்த தேவதை பெண்ணை பழைய படி பூனையாக மாற்றிவிட்டது.

பெண்ணின் மீது உயிரையே வைத்திருந்த வாலிபனின் மனம் உடைந்து போயிற்று. "ஐயோ, நான் மட்டும் ஒரு டின் பாரிஸ் மிட்டாய் வாங்கிக் கொடுத்திருந்தால், அவள் எலியைப் பிடிக்க ஓடியிருக்க மாட்டாளே" என்று கதறி அழுதான்.



PRS 582 a.

நீதி:
நீ காதலிப்பவர்களில் பாரி மிட்டாயை விரும்பாதவரும் உண்டோ

பாரீஸ் மிட்டாய்கள் நிறைந்த ருசியும், தூய்மையும் கொண்டவை. இவற்றை உங்கள் இஷ்டப்படி சில்லறையாகவோ, அல்லது கண்கவர் மோஸ்தர்களில் அமைந்துள்ள அழகான டின்களிலோ வாங்கலாம். விலை ரூ. 1.75 லிருந்து ரூ. 5.00 வரை.

Parry's

தயாரிப்போர்: பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், மதராஸ்.


158413

மில்லை! அவன் இருக்குமிடம் எது என்று சொல்ல முடியுமா?'

'அதற்கென்ன?' என்று சொல்லிவிட்டு நாகமாணிக்கம் எழுந்து சென்றார். மாடிப்படியருகில் சென்றதும் பணியாள் ஒருவனை அழைத்து, வேல்நம்பியை எங்கே சென்று கண்டுபிடிக்கலாம் என்று கேட்டு, முகவரியைக் குறித்துக்கொண்டு வந்து கொடுத்தார்,

'மிக்க நன்றி' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார் பூவேந்தன்.

'என்னைப் பொறுத்த வரையில் நீங்கள் ஏதோ தப்புக்கணக்குப் போட்டிருக்கிறீர்கள் என்று தான் எண்ணுகிறேன்! வேல் நம்பி அப்படிப்பட்டவனல்லன்!' என்றார் நாகமாணிக்கம்.

'எதற்கும் என் ஐயத்தைத் தீர்த்துக்கொள்கிறேன் வேல் நம்பியை சந்தித்து!' என்றார் பூவேந்தன். பிறகு—




—55-ம் பக்கம் தள்ளுங்கள்.

'வஞ்சிக்கொடி ஏன் உங்கள் பிறந்த தின விழாவில் கலந்து கொள்ளவில்லை?' என்று கேட்டார் பூவேந்தன்.

நாகமாணிக்கம் சிரித்தார்: 'வஞ்சிக்கொடி, தன் கணவனை இழந்தது முதல், அதிகமாக எங்கும் விருந்துகளுக்கும் விழாக்களுக்கும் செல்லுவதில்லை! நானே இரண்டு தடவைகள் தொலைபேசியில் வேறு அழைத்தேன்! தலைவலி என்று சொல்லிவிட்டாள்' என்றார் அவர்.

'அப்படியா? நான் வருகிறேன்' என்று சொல்லிவிட்டு வெளியே நடந்தார் பூவேந்தன்.

அந்த பங்களாவுக்குள் எங்கேயோ வேல்நம்பி ஒளிந்திருக்கிறான் அப்போது என்று அறிந்திருந்தாலும், அவர் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை!

வேல்நம்பியை வெளியே மடக்கிவிடுவது என்று எண்ணிக் கொண்டு காரை நோக்கி நடந்தார்.

அங்கே நின்றிருந்த நூற்றுக் கணக்கான கார்களும் அப்போது போய்விட்டிருந்தன. ஆகையால், பரந்த வெளியில், தொலைவில் அவருடைய பியட் கார் மட்டுமே நின்றிருந்தது!

அவர் காரை நெருங்கிய போது—

பின்னாலிருந்து எவரோ வரும் சத்தம் கேட்டது. அவர் திரும்பிப் பார்ப்பதற்குள்—

பூவேந்தன் தலையிலே இடி விழுந்ததைப்போல பலத்த அடி ஒன்று விழுந்தது!

பூவேந்தன் பேச்சு மூச்சின்றி கீழே சாய்ந்தார்!

(தொடரும்)






கூண்டிலிருந்து விடுபட்ட கிளிபோல, பறந்து வந்தாள் சுதா. அவள் கையில் பி. ஏ. கடைசி நாளையப் பரீட்சை வினாத் தாள். 'மாலா, நமது நாலு வருஷச் சிறையிலிருந்து விடுதலை கிடைத்துவிட்டதடி' என்று சந்தோஷத்துடன் கூறினாள் அவள். 'என்னடி, சட்டென்று அப்படிச் சொல்லிவிட்டாய்? பூரண விடுதலை பெறுவதற்கு இன்னும் ஆறு மாதம் உருப்படியாக இருக்கிறதே! அப்போது தானே அக்டோபர் வருகிறது!' என்றாள் மாலா.

'தீர்மானம் பண்ணிவிட்டாயல்லவா, ரொம்ப சந்தோஷம். சரி, முதலில் நாம் மிஸ்டர் ரிஷியைப் பார்த்து விடை பெற்றுக் கொண்டு வருவோம், வா. அவர் ஆசிரமம் அந்த மகிழ மரத்தடியில்தானே இருக்கும்!' என்றாள் சுதா.

'மிஸ்டர் ரிஷியா, இதோ நாங்களும் வருகிறோம்'—குதித்துக் கொண்டு எங்கிருந்தோ ஓடி வந்தனர் இன்னும் சில ரம்பையர்-மன்னிக்கவும்- கல்லூரியின் 'நைலான் ஸாரி'கள்.

சில விநாடிகளில் அல்லி ராணிப் பட்டாளத்தின் ஆயுதந் தாங்கிய விசேஷ யூனிட் ஒன்று மகிழ மரத்தடியை நோக்கிப் படையெடுத்துவிட்டது! ஆம்... அவர்களின் அமுத மொழிகளை விட எந்த ஆயுதம் வேண்டும்?

'மிஸ்டர் ரிஷி! வெளியே வருகிறீர்களா?' சுதா குரல் கொடுத்தாள். அதைத் தொடர்ந்து, 'மிஸ்டர் ரிஷ்ய சிருங்க சுவாமிஜி! ப்ளீஸ் கம் அவுட்'—கோரஸில் ஆயிரம் குரல்களின் வெங்கல நாதம்—அதாவது வெங்கலக் கடையில் யானை புகுந்த நாதம் மரத்தடியை துவம்சம் செய்ய ஆரம்பித்தது.

'என்னடீ இது, இன்னும் சுவாமிகளைக் காணோமே?'—இது ஒருத்தி.

'ஸ்வாமிஜீ', கடைசிப் பரீட்சை எழுதிவிட்டுத் தங்களிடம் ஆசீர்வாதம் பெற வந்த ஏழை விதேயர்களை ரட்சிப்பதற்காகவாவது வெளியே வரமாட்டீர்களா?' அழாத குரலில் இன்னொருத்தி.

'கொல்'லென்று சிரிப்பு.

பட்டாளம் புறப்பட்டுவிட்டது!

ஐந்து நிமிஷம் கழித்து மகிழமரத்தினருகில் இருந்த சப்பாத்திக் காட்டின் பின்னாலிருந்து மெள்ளத் தலையை நீட்டிப் பார்த்த ஒரு உருவம், பட்டாளம் போய்விட்டதை அறிந்ததும், மெள்ள பதுங்கிப் பதுங்கி மகிழமரத்தடியை அடைந்தது. அங்கிருந்து குபீரென்று ஒரு ஓட்டம் பிடித்து, அருகில் காலியாயிருந்த வகுப்பறை ஒன்றிற்குள் சரணாகதியடைந்தது அது!

ஃ ஃ ஃ

'சங்கரா, சுவாமிஜியைக் காணோமே?'

'காணாமல் எங்கே போய்விடுவான். கழுதை கெட்டால் குட்டிச் சுவர். இரு இரு...அதோ... அந்த அறையிலிருந்து விம்மல் சப்தம் கேட்கிறதே' என்றான் சங்கரன்.

'அவன்தாண்டா அது. சரி நீ போ. நான் அவனுடன் பேசிக் கொள்கிறேன்.' ரகு புறப்பட்டான்.

உண்மையாகவே விம்மல் சப்தம்தான் வந்துகொண்டிருந்தது அந்த அறையிலிருந்து. சுவாமிஜி எனப்பட்ட கோபாலனிடமிருந்து தெறிக்கப்பட்ட பாக்கியம் அந்த விம்மல்களுக்கு! 'கோபாலா, இது என்னடாது! பரீட்சை முடிந்து போனதுக்காகவா அழறே! எங்கே, சிரி, பார்ப்போம்' என்றான் ரகு.

'ஹி ஹ் ஹி ஹி......' இது கோபாலன்.

'பரீட்சையெல்லாம் நன்கு எழுதினாயா? கிளாஸ் வருமா?'

''ராங்க்' வருமான்னு கேளுடா, முட்டாள்.'

'ஓ, ஸாரி...இந்த சவரணையில் அழுகை என்னடா கேடு உனக்கு?'

'வேறென்ன பண்ணுவது ரகு. நான் பிறந்ததுக்காக ஒரு முறையாவது அழ வேண்டாமா? அந்தக் காலத்தில் ஒரு 'ஈவ்' 'ஆடமை'க் கெடுத்தாள். (ஏவாள் ஆதாமைக் கெடுத்தாள்). இந்தக்காலத்தில், அதுவும் கொஞ்ச நேரத்துக்குமுன் நமது கல்லூரி 'ஈவ்'கள் அவ்வளவு பேரும்...என்னைச் சூழ்ந்துகொண்டு... உம்ம்... இல்லாத கோட்டாவெல்லாம்...' மறுமுறை விசிக்க ஆரம்பித்தான்.



**இன்ஷூரன்ஸ் ஏஜண்ட்: இப்பத்தான் உம்மைபத்தி நினைச்சேன், நீர் எதிரே வந்து நிற்கிறீர் உமக்கு நூறு வயசுதான், ஐயா!**

**நண்பர்: அப்ப ரொம்ப நல்லதாப் போச்சு பாலிஸி ஒண்ணு எடுத்துக்குங்கன்னு உயிரை வாங்க மாட்டீர் இல்லையா?**



அவனை அனுதாபத்துடன் பார்த்தான் ரகு. 'நீ அதிர்ஷ்டசாலிதான். ஆனால், அனுபவிக்கத் தெரியாத மடையனடா'. இதைத் தவிர, வேறென்ன கூற முடியும் அவனால்?

'ஏண்டா கோபாலா, இப்படி இருக்கிறாய் நீ?'

'எனக்கென்னடா தெரியும்? வந்து...எங்கம்மா, நான் வயிற்றில் இருக்கும்போது 'ரிஷ்யசிருங்கர்' கதையைப் பாதி கேட்டுவிட்டுத் தூங்கிவிட்டாளாம். அதுதான் இப்படி... ஹிஹிஹி...'

'சரி, உன் பிரதாபத்தை வீட்டில் வைத்துக்கொள். போகலாம் வா.' இருவரும் புறப்பட்டனர். வனிதா மணியரின் பார்வைக்கு அஞ்சிய கோபாலன் மறக்காமல் தனது சோடா பாட்டில் கறுப்புக் கண்ணாடியைக் கண்ணில் போட்டுக்கொண்டான். மிஸ்டர் ரிஷி எனப்படும் கோபாலனை உங்களில் யாருக்காவது தெரியுமா? அந்த ஊர் ஆண்டி—பெண் அஸோஸியேஷனின் ('பெண் எதிர்ப்புச் சங்கம்தான்! வேறொன்றுமில்லை, பயப்படாதீர்கள்) தலைவனாயிற்றே அவன். (செக்ரடரி, மெம்பர் எல்லாம் கூட அவனேதான் என்பதை சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை!!) பரீட்சையில் சூரப்புலி. பட்டை விபூதியும், கட்டுக் குடுமியும், காதில் கடுக்கனுமாய்க் காட்சியளிக்கும் இந்த முனிபுங்கவருக்குப் பெண் என்றால்மட்டும் சிம்ம சொப்பனம். சின்ன வயசில் தெரிந்த பெண்ணொருத்தி, பல்லால் அவனது இடது கையில் நன்கு பதம் பார்த்துவிட்டதால்தான் இப்படி என்றுகூட ஒரு வதந்தி உலாவுகிறது! பாவம், அவன் அதிர்ஷ்டம், பெண்களும் சேர்ந்து படிக்கும் கல்லூரியில்தான் இடம் கிடைத்தது. 'ஆண்கள்மட்டும்' கல்லூரியில் இவனுக்குமட்டும் 'ஸீட்'டில்லையாம்!




—59-ம் பக்கம் பாருங்கள்

ஒரு நாள் யாரோ ஒரு பெண் நோட் ஒன்றை இவனிடம் இரவல் கேட்டுவிட்டாள் என்பதற்காக மூன்று நாள் கல்லூரிக்கு மட்டம் போட்டுவிட்டு முழுப் பட்டினி கிடந்தான் என்பதைக் கேள்விப்பட்டபின், கல்லூரிக் கிளியோபாட்ராக்கள் அவனைச் சும்மா விடுவார்களா? 'பூர்வ ஜன்மத்தில் தான் செய்த பாபம்' என்று தலையில் அடித்துக் கொள்ளுவான் கோபாலன். இப்பேர்ப்பட்ட வீர தீர சிகாமணிக் கேசரியின் அத்யந்த ஹானரரி அப்போஸர் (எதிர்ப்பாளர்—அட்வைஸர் அல்ல)தான் ஸ்ரீமான் ரகு.



'ஏண்டா கோபாலா, இப்படி உட்கார்' நாற்காலியைக் காட்டினார் அவர்.

'பரவாயில்லையப்பா. நின்று கொள்கிறேன்.'

'பரீட்சையெல்லாம் நன்றாக எழுதினாயா? இன்று என்ன பரீட்சை?'

'டைனமிக்ஸ். கடபுடலாய் எழுதியிருக்கிறேன்.'

'அப்ளைய்ட் ஜியாமெட்ரி?'

'அப்பளமாப் பண்ணிவிட்டேனப்பா!'

'ஏண்டா, உனக்கு எகனமிக்ஸ்லே, பாபுலேஷன் கண்ட்ரோல், பாமிலி பிளானிங் எல்லாம் சப்ஜக்டாடா?'

'ஆய்வ்வ்...உவ்வ்வேவ்...'

வாந்தி எடுக்க ஆரம்பித்துவிட்டான் கோபாலன்.

இந்தமாதிரி சந்தர்ப்பத்திற்காகவே தயாராய் வைத்திருந்த வாந்தி மாத்திரைகளை அவனிடம் கொடுத்தார் அவர். 'ஏண்டா, இதுக்கே இவ்வளவு ஆர்ப்பாட்டம் பண்றியே? நாளைக்கு, போகிற இடத்தில் நீ பெண் பிடிக்கவில்லைன்னு சொன்னா சும்மா விடமாட்டேன் உன்னை, தெரியுமா?' என்றார் அவர்.

ஆ! இதென்ன?

கோபாலனிடமிருந்து பேச்சு மூச்சைக் காணோமே. இதை எதிர்பார்க்கவில்லை அவன் அப்பா. அதனால் மாத்திரையும் கைவசமில்லை. தனயனின் நிலையைக் கண்டு தந்தை பதறிப் போய்விட்டார். 'டேய், யாரங்கே? காரை ரெடி பண்ணுடா' உத்தரவிட்டார் அவர். கோபாலன் காரின் பின் ஸீட்டில் கிடத்தப்பட்டான்.

கனவேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது கார். பாதி தூரத்தில், மெதுவாகக் கண்ணை விழித்தான் கோபாலன். 'அப்பா, எங்கிருக்கிறேன் நான்?' என்று மெதுவாகக் கேட்டான் அவன்.

'நமது காரில்தாண்டா, கண்ணு, நீ இருக்கிறாய். டாக்டர் வீட்டுக்குப் போகிறோம். கார் இப்போது சோலையப்பன் தெருவில் போய்க் கொண்டிருக்கிறது'. 'ரன்னிங் காமெண்ட்ரி' கொடுத்தார் அவன் அப்பா.

'வேண்டாமப்பா, எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை. ரகுவின் வீடு அருகில்தானே இருக்கிறது? அவனுடன் பேசிக்கொண்டிருக்கிறேன். பிறகு காரை அனுப்புங்கள்'. அவன் இறங்கிக் கொண்டான். கார் புறப்பட்டுவிட்டது.

'ஆபத்பாந்தவா, தீனதயாளா' என்று கூறிக்கொண்டே தனது காலில் விழுந்தவனைக் கை கொடுத்து நிறுத்தினான் ரகு. கோபாலனுக்கு மூச்சு வாங்கிக்கொண்டிருந்தது! 'என்னடா பாவி! யாரைக் கொலை பண்ணிவிட்டே?' என்று பதறினான் ரகு.

'இல்லையடா... என்னைத்தான்... கொலை...எனக்குக் கல்யாணம்டா... நீதாண்டா மகாப்பிரபு, என்னைக் காப்பாத்தணும்' அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினான் கோபாலன். 'சரி வாடா, என் அறைக்குப் போகலாம்.'

ஆதியோடந்தமாக நடந்தவற்றைக் கூறினான் கோபாலன். 'உன் மாதிரி எங்கப்பா என்னைக் கேட்கவில்லையேடா கோபாலா' என்று தன் பங்குக்கு முறை வைத்தான் ரகு. இருவரும் நெடுநேரம் யோசித்தனர். காந்தத்தின் எதிர்முனைகள் நெருங்கும்போது உருப்படியான யோசனையா வரும்? கடைசியில் ரகு ஒரு யோசனை சொன்னான்.

'டேய், இரண்டு சீட்டுகளில் ஒன்றில் கல்யாணம். மற்றொன்றில் சந்நியாசம் என்று எழுதிக் குலுக்கிப் போடு. வரும் சீட்டில் இருக்கிறபடி செய்.'

'வேறு வழியே இல்லையாடா ரகு?' அவனுக்குப் பயம். சந்நியாசிக்கு அல்வாவும் பூந்தியும் யார் கொடுப்பார்கள்?

'வேறு வழி இருக்கிறது, என்னை அங்கு அனுமதித்தால்!' வெள்ளி மணியோசையின் சப்தம் அருகில் கேட்டது. ரகு, கோபாலனைப் பார்த்தான். கறுப்புக் கண்ணாடியை அணிந்துகொண்டே 'உம்'மென்று தலையை ஆட்டினான் கோபாலன்.

அன்னநடை போட்டு மெள்ள உள்ளே நுழைந்தவள், சீதா!— ரகுவின் தங்கை!



வீடு நெருங்கிவிட்டது. 'ஹலோ, ரிஷி...குட்-பை. நாளை மறுபடியும் சந்திப்போம், என் வீட்டில்.' ரகு விடை பெற்றுக் கொண்டுவிட்டான். 'சொச்ச' தூரத்தை ஆபத்தில்லாமல் கோபாலன் கடக்க வேண்டுமே! அட இழவே, இந்தப் பெயராவது அவனுக்குப் பொருத்தமாயிருந்து தொலைக்கப்படாதா?

ஃ ஃ ஃ

**சர்**வபல்லி ராதாகிருஷ்ணனுடன் பேசிக்கொண்டிருந்தான் கோபாலன். அதாவது, அவருடைய, ஆத்ம விசாரணைப் புத்தகம் ஒன்றை ஆழ்ந்து அனுபவித்துக்கொண்டிருந்தான் அவன்!

அந்தச் சமயம் பார்த்துத்தானா அடுத்த அறையிலிருந்து... 'டேய் கோபூ ஊஊவ்...' அடித்தொண்டையிலிருந்து அசரீரி ஒன்று கேட்டது. கோபாலன் தந்தை சொல் மிக்க 'சினிமா ட்யூன்' இல்லை என்ற கொள்கையைப் பின்பற்றுபவனாயிற்றே! விரைந்து ஓடினான்.

'என்ன ஸ்வாமிஜி! உங்களுக்குக் கல்யாணம் வேண்டாம். அவ்வளவுதானே?'

'ஆமாம்.'

'அதைத் தடுக்க ஒரு வழியிருக்கிறது. என்ன தெரியுமா?'

'என்ன என்ன?'

'லவ் லெட்டர்!!'

அப்பா கொடுத்த மாத்திரையில் ஒன்று மிச்சம் இருந்தது. 'சட்'டென்று வாயில் போட்டுக் கொண்டான் கோபாலன்.

'இதற்கெல்லாம் கூச்சப் பட்டீர்களானால், வேறு வழியே கிடையாது ஆமாம்' பயமுறுத்தினாள் கீதா.

'சரி' என்றான் கோபாலன்.

'வீட்டிற்கு உங்கள் பெயருக்கு வரும் கடிதங்களை வேறு யாரும் படிப்பதுண்டா?'

'கடிதமே எனக்கு வராதே!'

'வந்தால்...?' அதை அழுத்திச் சொன்னாள் கீதா.

'என் அப்பா மட்டும் படிப்பார்.'

'ரொ ம் ப நல்லதாய்ப் போயிற்று. முதலில் ஒரு பெண் உங்களுக்கு எழுதியதுபோல ஒரு காதல் கடிதம் கொண்டு வாருங்கள்!'

'ஐய்யைய்...'

'உஷ்...ஜாக்கிரதை!' ஆள் காட்டி விரலை உதடுகளின் மேல் வைத்துப் பயமுறுத்தினாள் கீதா!

'கடிதத்திற்கு எங்கு போவது?'

'போனால் போகிறது. என் அண்ணாவின் நண்பர் என்பதால் தானே உங்களுக்காக எழுதித் தருகிறேன். அதை உங்கள் பெயருக்கு போஸ்ட் செய்து கொள்ளுங்கள். உங்கள் அப்பா அதைப் படித்துப் பார்ப்பார். பெண் பார்க்கும் படலம் நின்று போய் விடும்.'

'வெரிகுட் ஐடியா. ஆனால், அப்பாவின் முன் ஆடு திருடிய கள்ளனைப்போல் விழிக்க வேண்டுமே. அவர் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டுமே!'

'பிரெஸிடென்ஸி ராங்க் வரும் மாணவருக்கு இதெல்லாம் தெரியவில்லையென்றால் கேட்பவர்கள் சிரிப்பார்கள்!'

❧ ❧ ❧

மூவரின் கூட்டு முயற்சியில் கடிதம் உருவாயிற்று. எதிர்பாராத வகையில் மிகப் பிரமாதமாக அமைந்துவிட்டது அது. தன் முத்துமுத்தான கையெழுத்தில் அழகுபட அதை எழுதிக் கொடுத்தாள் கீதா.

'எனது ஆருயிர்க் காதலர் கோபாலருக்கு,

பசுத்தோல் போர்த்த புலி நீங்கள் என்ற உண்மை இன்று எனக்குத் தெரிந்து விட்டது. புராணத்துக் கிருஷ்ணனின் பெயரை வைத்துக்கொண்டு, பகல் வேஷம் போடும் நீங்கள் அவனைப் போலவே லீலைகளும் புரிவது நியாயமா?

என்னிடம், நிச்சயம் என்னை மணப்பதாக ஆயிரம் சத்தியம் செய்துவிட்டு, நூறாயிரம் காதல் கடிதங்களை எழுதி ஏமாற்றி என்னை வஞ்சிக்கவும் செய்து விட்டுத் திரியும் நீங்கள் நாளை பெண் பார்க்கப் போகிறீர்களாமே. இருக்கட்டும் இருக்கட்டும்.

இப்படிக்கு,

தங்களை இதயபூர்வமாக என்றே மணந்துவிட்ட

அபலை'

'பலே பலே' என்றான் கோபாலன்.

'சபாஷ்' என்றான் ரகு.

'அற்புதம்' என்றாள் கீதா.

❧ ❧ ❧

மறுநாள்...

'ஏய் கோபாலா, எருமை மாடு.'

'வந்தேனப்பா!' ஓடினான் கோபாலன். அவனது உடம்பில், ஐந்து பனியன்கள், ஆறு சட்டைகள், இரண்டு கோட்டுகள். எந்த எதிர்ப்பையும் சமாளிக்க இந்த ஏற்பாடு.

அவன் அப்பா...

ரௌத்திராகாரமாக மாறியிருந்தார்! அவரது கையில்...கடிதம்...கோபாலனே 'போஸ்ட்' செய்த அதே காதல் கடிதம்!

'ஏண்டா தீவட்டித் தடியா, என்னடா இது?'

பதிலில்லை.

'ஏண்டா, ஆஷாடபூதி?'

'என்னப்பா'.

கடிதத்தை விட்டெறிந்தார் அவர். படித்த அவன் கண்களில் கண்ணீர் கசிந்தது.

'யாரடா, அது?'

'எனக்குத் தெரியாதப்பா.'

'ஏண்டா பொய் சொல்லுகிறாய்? இதனால் தானா, கல்யாணம் வேண்டாம் என்று இத்தனை நாளும் மாய்மாலம் செய்தாய். இந்தச் சவாரணையில் ரிஷ்ய சிருங்கர் வேஷம் வேறே.




ஏண்டா, தடித்தீவட்டி! யாரடா இந்தப் பெண்?'

'தெரியாதப்பா.'

'சொல்லித் தொலையேண்டா, பாவி! அவளையே உனக்குக் கல்யாணம் செய்து வைக்கிறேன்.' மசிந்து கொடுத்தார் அப்பா.

'சரி அப்பா, சொல்லுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. அவள் சம்மதிக்கவில்லையானால், என்னை என் போக்குப்படி விடுகிறீர்களா?'

'சரி' அப்பாவின் குரல் கம்மியது.

அச்சமயத்தில்—

'அதற்கு அவசியமேயில்லை. அவரை மணந்துகொள்ள எனக்கு முழுச் சம்மதம். நான்தான் அக்கடிதத்தை எழுதியவள்!' என்றவாறே உள்ளே வந்து கொண்டிருந்தாள் கீதா!

'சதிகாரி' என்று முணுமுணுத்தன கோபாலனின் உதடுகள்.


பூபதி எங்கே?
ஜமீந்தாரின் தம்பி வீரபாகு தூங்கிக்கொண்டிருந்தான்
தம்பியை எழுப்பினர்
வீரபாகு! பூபதியைக் காணோம்!
என்ன? தம்பி பூபதியையா?
சிப்பாய்களோடு மாளிகை முழுவதும் பூபதியைத் தேடினான் வீரபாகு. ஆனால் எங்குமே பூபதி தென்படவில்லை
எல்லோரும் ஜமீந்தாரிடம் சென்றனர்


ஒரு வேளை கள்ளர்கள் கவர்ந்து சென்றிருப்பார்களோ?
கண்ணே! பூபதி என்று கதறி மூர்ச்சையானார்
அந்தக் காலத்தில் கள்வர்கள் பணக்காரர்களின் பிள்ளைகளைக் கவர்ந்து சென்று, உயிருடன் திரும்பப் பெற ஆயிரக்கணக்கில் பணம் கேட்பது வழக்கம். பூபதியையும் அப்படி யாராவது...
பத்து நாட்களுக்குப் பின் ஒரு நாள் இரவில் பூபதியை நினைத்தபடியே அறைக்குள் நடந்தார் ஜமீந்தார்.
அப்போது— கையில் குத்துக் கத்தி ஏந்திய ஒரு உருவம் சாளரத்தின் வழியே உள்ளே குதித்தது.
கதை பாலன்.
கையிலிருந்த கத்தியால் ஜமீந்தாரைக் குத்த ஓங்கியது. கத்தி....

(தொடரும்)

# இப்படியும் ஒருவர்

'பொய்யாய்ப்
பழங்கதையாய்க் கனவாய்
மெல்லப் போனதுவே!...'

*

# குறை-ரங்கசாமி

ஒரு நாள் காலை நேரத்தில் சிகை அலங்காரம் செய்யும் கூடத்தில் திடீரென ஒரு கலவரம் மூண்டது. பெஞ்சியில் 'க்யூ' வரிசையில் அடுத்தடுத்து உட்கார்ந்த இருவரிடமிருந்து, மூன்று, நாலு, ஐந்து பேருக்குப் பரவியது அது. மயிர் வெட்டிக்கொண்டிருந்தவர்களும் மற்றும் அரைகுறையாகக் கிராப் வெட்டப்பட்டிருந்தவர்களும் கூட அந்தக் கைகலப்பில் கலந்து கொண்டனர்!...சுமார் அரை மணிக்கதிகமாக நடந்த புயல் ஓய்ந்தது. நல்லவேளையாக சேதம்—அன்றைய செய்திப் பத்திரிகைகளும் மற்றும் பல சஞ்சிகைகளுமே!...கண்ணாடி எதுவும் உடைவதற்குள் திருவாளர் (குறை) ரங்கசாமி, தான் வந்த காரியத்தை மறந்து தாடி மீசையுடன் ஹோட்டல் அறைக்குத் திரும்பி விட்டார்.

அன்றிலிருந்து ரங்கசாமி முக க்ஷவரம் செய்து கொள்ளவில்லை; முடிவெட்டிக் கொள்ளவில்லை! அன்றிலிருந்து அந்த சலூனிலும் 'தயவுசெய்து இங்கே எந்த விவாதமும் வேண்டாம்' என்ற பெயர் பலகைப் போடப்பட்டு விட்டது!...

ரங்கசாமி எந்த வேளையில் புனித ஜனனம் ஆனாரோ, தெரியாது. இன்று ஐம்பது வயதாகப் போகிறபோதிலும், வாழ்வில் எதிலும் நிறை என்பதே கிடையாது! திருப்தி அடையாத மனிதப் பிறவி!...

பார்வைக்குப் பெரிய யோகீஸ்வரர் மாதிரி தாடி, சடை, நெற்றியில் திருநீறு. சில சமயம் காவிக் கலரில் ஜிப்பாவுடன் உலவுவார். நல்ல உயரம்; ஆறடிக்குக் குறையாது. உத்தியோகம்கூட, ஒரு நூற்றாண்டை எட்டிவிட்ட ஒரு காகித விற்பனைக் கடையில் பிடுங்கல் இல்லாத வேலையான ஸ்டோர்ஸ் கிளார்க்தான். பிரம்மசாரி. பதினெட்டு ஆண்டுக்கதிகமாக அந்த 'சுக லாட்'ஜில் அறை எடுத்துத் தங்கி வருகிறார். அந்த ஓட்டலுக்குப் பல முதலாளிகள் வந்து போய்விட்டார்கள். ஆனால் ரங்கசாமி மட்டும் அந்தக் கட்டிடத்திலுள்ள முப்பது ரூமிலும் தங்கிவிட்டார். ஒவ்வொன்றில் ஒரு குறை. ஆறு மாதவாசம்...

ஆபீஸிற்குள் நுழைய வேண்டியதுதான் தாமதம், மற்றவர்கள் ரங்கசாமியின் வாயைக் கிளற ஏதாவது பேசுவார்கள். ஒரு கிளார்க், 'என்ன மிஸ்டர் ரங்கசாமி, இன்றைய ஒலிம்பிக் ரிஸல்டைப் பார்த்தீரா?...இந்தியாவுக்கு ஒரு மெடல்கூட இல்லை...மில்காசிங்குகூட ஏமாந்துவிட்டாரே...' என்பார்.



'நம்ப பசங்களிடம் என்ன இருக்கு?...சுத்த ஹம்பக்...ஏதாவது உருப்படியாக உடற்பயிற்சிக்கூடம், யோகாசன நிலையம் வைத்துத் தயார் பண்ணினப்புறம் வெளிநாட்டுக்கு அனுப்பணும்!...அதைக் கவனிக்க ஆள் கிடையாது...' என்பார், தாடியைத் தடவிக்கொண்டு.

ஓடும் ரயிலில்—அது மெயிலோ எக்ஸ்பிரஸ்ஸோ ... மூன்றாம் வகுப்பில் ரங்கசாமி பிரயாணம் செய்ய ஆரம்பித்தால் அவர் இறங்கும் வரை மற்றவர்கள் தூங்க முடியாது. யாருடனாவது எதையாவது பேச ஆரம்பித்து, சூடு பிடித்துவிடும். எதிராளி ஓய்ந்தால்தான் சமாதானம்.

யாரேனும் ஒரு வாலிபர், ரயில் பிரயாணத்தில் படிக்க காதல் கதைகள் நிறைந்த பத்திரிகையையோ அல்லது நவீனத்தையோ வைத்திருக்கக்கண்டால் கூச்சப்படாமல் கேட்பார். ஒரு புரட்டுப் புரட்டிவிட்டு வெகு அலட்சியமாக 'என்னவோ தன்னைப் பெரிய எழுத்தாளன்னு நினைச்சிண்டுஎழுதியிருக்கான்... அந்த அறைகுறைப் பேர்வழி!' என்று முனகுவார். அதற்குப் பதில் அளிக்க ஆரம்பித்தால் அந்த விவாதம் எதில் முடியுமோ சொல்ல முடியாது! ரயில் பிரயாணத்தின்போது, சுயநலத்துடன் மற்ற பிரயாணிகள் நடப்பதை எடுத்துப் பேச ஆரம்பித்தாலோ—காது இரண்டாகிவிடும்!

வாலிப நண்பர்கள், 'என்ன ஸ்வாமிஜி! ஸினிமாவுக்குப் போகலாம். வாருங்களேன்' என்பார்கள். அதுவும் அவர் அதிகம் ஆங்கிலப் படங்கள் பார்ப்பதை அறிந்து, 'ஆங்கிலப் படத்துக்கே போகவேண்டும்...' என்று.

'என்னய்யா படம வனடியிருக்கு?...பார்த்துப் பார்த்து ஓய்ந்து போயாச்சு...இங்கிலீஷ் படம்னு ஸ்பென்சர் டிரேசி, பால்முனி, பேர்பாங்க்ஸ் நடிச்சதைப் பார்க்கணும். ஹிந்திப் படம்னு சைகால், கே. சி. டே பாடியதுக்கும், கண்ணன்பாலா நடிச்சதுக்கும் போகணும்... இப்ப எல்லாம் என்ன படம் ஸார்




நன்றாயிருக்கு?' என்று தாடியை உருவிக்கொண்டே கேட்பார். ஆனால் ஸினிமாவிற்குப் போவதை நிறுத்தமாட்டார்.

'ரங்கஸாமீஜி... இன்றைக்கு வெள்ளிக்கிழமை; கோயிலுக்குப் போகலாமா...' என்று ஒரு பக்திப் பிரியர் கேட்கட்டுமே!

'ஸார்! தான் என்னவோ ஹிந்துதான். கடவுள் இல்லைன்னு சொல்லலை. இதோ விபூதிகூடப் பூசி

நம்மகோயில்லே சுத்தம் கிடையாது, ஸார்.. ஒருசர்ச்சுக்கோ, பள்ளிவாசலுக்கோ போய்ப் பாருங்கோ. எவ்வளவு சுத்தமாக இருக்கு? ...' என்று பட்டென்று பதில் சொல்வார். உடனேயே, 'பொழுதாவது போகும். வரேன், ஸார்!' என்றபடி பின்னாடியே வந்துவிடுவார்.



யும்.

ஏராளமாகப் புஸ்தகம் வாங்கிப் படித்திருக்கிறார். பணத்தைத் தாராளமாகச் செலவு செய்கிறார். பிச்சைக்காரனைக் கண்டால் ஒரு சமயம் கன்னா பின்னாவென்று திட்டி, ஒரு முழு ரூபாய் தர்மம் பண்ணுவார்!

கடைசியில் அவர் குறை காணாத ஒரு முடிவு: 'இந்த உலகம், வாழ்க்கை எல்லாம் பொய்தான். 'பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போனதுவே...' என்று பட்டினத்துப்பிள்ளை பாடியிருக்கிறார். ஏதோ இருக்கிறவரை காலந்தள்ளிவிட்டுப் போய்ச் சேருவோம்...' என வாய் ஓயாமல் சொல்லிக்கொண்டிருக்கிறார்! முடிவையாவது குறையில்லாமல் சொல்கிறாரே!

ரங்கசாமியைக் கண்டால் அநேகமாக அவரது உறவினர்கள், நண்பர்கள், மற்றும் தெரிந்தவர்களுக்குப் பயம். எதையும் அவரிடம் பேசிவிடலாம். ஆனால் 'இதுதான் உண்மை. நீர் சொன்னது தப்பு. பொய் என்று நிரூபிக்கமுடியாது!'... ரங்கசாமியால் அதற்காக வருஷக்கணக்காக




# ஊடலுக்குப் பின்...

சரஸன்



'பாட்டி! தாத்தா கதைக்குப் புறப்படத் தயாராகிவிட்டார். உன்னைக் கூப்பிடறார்' என்றான் என் பேரன் சிவராமன்.

'இதோ வந்துட்டேன்னு சொல்லு!' என்று கூறிவிட்டு, அவருடன் புறப்பட்டேன். வழியில் நானும் அவரும் அன்று காலை நடந்த சம்பவத்தைப் பற்றிப் பேசிக் கொண்டே போனோம்.

காலையில் நடந்த விஷயம் இதுதான்:— என் மருமகள் கமலவேணி தன் தம்பியின் கல்யாணத்திற்காகப் பிறந்த வீட்டிற்குச் சென்றிருந்தவள், அன்று காலை தான் திரும்பினாள். அவளைமட்டுமே கல்யாணத்திற்கு அனுப்பி வைத்தான் என் பிள்ளை பாண்டுரங்கன், தனக்கு லீவு கிடைக்காமையால். கமலவேணி புறப்பட்டபோது படித்துப் படித்துச் சொல்லியனுப்பினான் பாண்டுரங்கம், சரியாய் பத்தே நாட்களில் திரும்பிவிடும்படி. 'ஆகட்டும்' என்று கூறிவிட்டுச் சென்ற கமலவேணி, குறிப்பிட்டபடி வந்து சேரவில்லை. என் பிள்ளைக்குக் கோபம் அசாத்தியமாய் வரும். தவிர, பெண்டாட்டி ஆசை வேறு! காரசாரமாயும் கடிதம் எழுதினான். தன் பாட்டிக்கு காயலாவென்றும், இன்னும் சில தினங்களில் கட்டாயம் திரும்பி வந்துவிடுவதாயும் கமலவேணி பதில் எழுதினாள். மீண்டும் அவள் திரும்பி வராமற் போகவே, தந்தியடித்தான் பாண்டு, உடனே அவளைத் திரும்பி வரும்படி. தந்தி கிடைத்ததென்றும், அக்காளின் எட்டாவது குழந்தைக்கு ஆண்டு நிறைவு வருகிறது என்றும், அது முடிந்த மறு தினமே ரயில் ஏறி வருவதாயும் எழுதினாள் கமலவேணி. அப்படியும் வராமற்

போகவே ஆத்திரமடைந்தவனாய் 'இனி நீ வரவே வேண்டியதில்லை. அப்படியின்றி மானங்கெட்டு வந்தால், கட்டாயம் திருப்பியனுப்பிவிடுவேன்' என்று காரசாரமாய் எழுதினான் என் பிள்ளை. இந்தக் கடிதமும் என் மருமகளும் ரயிலில் எதிரும் புதிருமாய்ச் சந்தித்துக்கொண்டிருக்க வேண்டும். இக்கடிதம் கிடைப்பதற்கு முன்பே கமலவேணி புறப்பட்டுவிட்டாள் என்று மறு நாள் காலை அவள் திரும்பி வந்துவிட்டதிலிருந்து தெரிய வந்தது.

வீட்டு வாசலில் பேபி டாக்ஸி வந்து நின்றது. என் மருமகள் தன் கைக் குழந்தையுடனும் தம்பியுடனும் இறங்கினாள். வாசல் வராந்தாவில் பத்திரிகை படித்துக்கொண்டிருந்த பாண்டு அவளைக் கண்டான். அடுத்த கணம் ருத்ரமூர்த்தியாய்க் காட்சியளித்தான். வெறிகொண்டவன்போல, 'நில். உள்ளே நுழையாதே. திரும்பிப் போ உன் பிறந்த வீட்டுக்கே. போ என்றால் போ. உம்!' என்று கூவினான்.

பாவம்! கமலவேணி அரண்டுவிட்டாள். கைக் குழந்தை மிரண்டு விழித்தது. மைத்துனன் சற்றுத் துடுக்குக்காரப் பேர்வழி. தன் அக்காளை ஏறிட்டு நோக்கினான். 'அக்கா! ஏன் யோசிக்கிறாய்? ஏறு இதே டாக்ஸியில்! இந்த முரட்டு மனிதருடன் நீ குடும்பம் நடத்தியதுபோதும்! உனக்குத் திக்கு இல்லை என்று எண்ணிவிட்டாரா?' என்று கேட்கத் துடித்ததுபோலும் அவன் உதடுகள்! ஆம். அவன் அம்மாதிரி கேட்கக் கூடியவன்தான். நான்தான் அவனைக் கல்யாணத்தின்போது பார்த்திருக்கிறேனே!

கொல்லைப்புறம் துணி துவைத்துக்கொண்டிருந்த அவர் சந்தடி கேட்டு, வாசல் பக்கம் வந்தார். விஷயத்தையறிந்து, 'பாண்டு! என்ன கூத்து இது? சும்மா இரு குழந்தை! நீ உள்ளே போ அம்மா! யார் அங்கே? (இது அவர் என்னை அழைக்கும் முறை) இங்கே கமலம் வந்திருக்கிறாள் குழந்தையுடன். உள்ளே கூட்டிக்கொண்டு போ' என்று குரல் கொடுத்துவிட்டு, கமலவேணியின் தம்பியையும் வரவேற்றார்.

'அப்பா! நீங்கள் சும்மா இருங்கள். இவள் உள்ளே நுழையக் கூடாது' என்று மீண்டும் இரைந்தான் பாண்டு. அச்சமயம் நான் வாசலுக்குச் சென்று, என் மருமகளையும் குழந்தையையும் உள்ளே அழைத்துச் சென்றேன்.

'அம்மா! அம்மா!' என்று என்னைத் தடுக்க வந்தவனை நகர்த்திவிட்டு, உள்ளே விரைந்தேன் கமலவேணியுடன்.

'ஸார்! நேரமாகிறது!' டாக்ஸி டிரைவரின் குரல் இது.

அவர்தான் அவனுக்குச் சில்லறை கொடுத்தனுப்பினார். சில்லறையைப் பெற்றுக்கொண்ட பின்பும், டாக்ஸிக்காரன் புறப்படாமல், எங்கள் வீட்டையே நோக்கிக்கொண்டிருந்தான். அவன் நிற்பதன் நோக்கத்தை அறிந்த அவர் (நான் அவர் என்று குறிப்பிடுவது யாரை என்பதற்கு விளக்கம் தேவையில்லை என நினைக்கிறேன்). கோபத்துடன், 'ஏன் அப்பா நிற்கிறாய்? சில்லறைதான் கொடுத்துவிட்டேனே!' என்றார்.



'இல்லைங்க. மறுபடியும் வண்டி தேவையாய் இருக்குமோ என்றுதான்...' என்று இழுத்தான்.

'ஏன் அப்பா! உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?' என்றார் அவர்.

'இன்னும் இல்லிங்க!' என்றான் டிரைவர்.

'ஓ! அதுதானே பார்த்தேன். சரி! வண்டி தேவையில்லை நீ போகலாம்' என்று கூறி அவனை அனுப்பினார்.

தன் தாய் வந்துவிட்டதில் என் பேரன் சிவராமனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. பத்து வயதான அவன் தன் தாயுடன் கல்யாணத்திற்குப் போகவில்லை. இங்கேயே தங்கிவிட்டான். காரணம் அவனுக்குத் தினமும் என் பக்கத்தில் படுத்தால்தான் தூக்கம் வரும்.

கமலவேணி தன் அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கிவிட்டாள். பாண்டு முகத்தை உம் என்று வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

'அப்பா! அம்மா ஊரிலிருந்து லட்டு, அதிரசம் எல்லாம் கொண்டு வந்திருக்கிறாள்' என்றான் என் பேரன் பாண்டுவிடம் நெருங்கி.

'போடா! என்னிடம் ஒன்றும் சொல்லாதே!' என்று மகனை எரிந்து விழுந்தான் என் பிள்ளை.

கைக் குழந்தை மெல்ல நடந்துகொண்டே பாண்டுவிடம் வந்தது. அவன் மடிமீது தொப்பென்று விழுந்தது. அதை ஏறெடுத்துப் பாராமல் பத்திரிகையைப் பார்த்துக்கொண்டிருந்தான் பாண்டு.

அவன் கோபம் இன்னும் தணியவில்லை. வெந்நீர் எடுத்து விளாவிவிட்டு, 'அம்மா! குளிக்க அவரைக் கூப்பிடுங்கள்!' என்றாள் கமலம்.

'ஏன்? நீயே கூப்பிடு. அவன் என்ன பூதமா? பிசாசா?' என்று கேட்க விரும்பினேன். அதற்குள், பாண்டு, 'அம்மா! நான் குளிர்ந்த நீரில்தான் ஸ்நானம் செய்யப் போறேன்' என்று எழுந்தான்.

'கமலா! தட்டை வைத்து அவனுக்குப் பரிமாறு!' என்றேன் நான்.

'அம்மா! நீயே போடுவதாய் இருந்தால் சாப்பிடுகிறேன். இல்லையேல் ஓட்டல்...' என்று தலை வாரிக்கொண்டே கூச்சல் போட்டான் அவன்.


# உங்கள் எதிர்காலம் - 1961



உங்கள் பெயர் விலாசத்துடன் ஒரு புஷ்பத்தின் பெயரையும் கார்டில் எழுதி எங்களுக்கு அனுப்பிவையுங்கள். உங்களுக்கு ரூ. 1-4-0 செலவில் (போஸ்டேஜ் தனி) 12 மாத வருங்காலத்தில் ஏற்படக்கூடிய குறிப்புகளை முக்கியமாக வியாபாரத்தில் லாப, நஷ்டம், உத்தியோக உயர்வு, வேலையில் மாற்றம், பிறப்பு, திருமணம், உடலிலுள்ள நோய்கள் மற்றும் நவக்கிரகங்களின் பார்வையினால் ஏற்படும் தீமைகளிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஆலோசனைகளையும் அனுப்புகின்றோம். ஒரு முறை பரீட்சித்துப் பார்த்து உண்மை அறிவீர்கள்.

SRI KRISHNA JYOTISH ASHRAM, Post Box No. 63. (SWM), JULLUNDUR CITY.

எனக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டேன். அவர், அவன், குழந்தைகள் எல்லாருக்கும் தானே பரிமாறினேன்.

சட்டையை மாட்டிக்கொண்டு, ஆபீசுக்குச் சென்றுவிட்டான் பாண்டு. மாலை மறைந்து இரவு ஏழரையாகியும் அவன் திரும்பவில்லை.

எங்கள் வழக்கப்படி ராமாயணம் கேட்கப் போனேம் கோவிலுக்கு. ராமாயணம் கேட்டுவிட்டு ஒன்பதரை மணிக்குத் திரும்பினேம். வழியிலே கோடி வீட்டுக் கோமதி அம்மாள், 'என்ன மாமி! உங்கள் மருமகள் ஊரிலிருந்து இன்று காலை வந்துவிட்டாள்போலிருக்கிறதே' என்ருள்.



'ஆமாம். வந்ததும் வராததும் அவன் கூத்தடித்தான். பைத்தியக்காரன்!' என்ருர் அவர்.

'என்ன? என்ன?' என்ருள் அந்த அம்மாள்.

'என்னவா? அவளைத் 'திரும்பிப் போ. படி ஏருதே!' என்று கூச்சல் போட்டான். முட்டாள்! ஏதோ போன இடத்திலே இரண்டு நாள் அதிகமாய்த் தங்கும்படி நேர்ந்துவிட்டது. சகஜந்தானே? இதற்காகப் பாவம்! அந்தப் பெண்ணைக் கலங்க வைத்துவிட்டான்' என்ருர்.

'கோமதி, அந்தப் பெண்ணுக்காக இவர் உருகுவது இருக்கட்டும். இவர் அந்த நாளில் என்னை என்ன பாடு படுத்திஞர் என்று உனக்குத் தெரியாது. ஐயோ! ஒரு சமயம் இவர் படுத்தின பாடு உண்டே, ஊரே கூடிவிட்டது. ஒன்றுமில்லை. அம்மா—என்னை என் அப்பா ஊருக்கு அழைத்துக்கொண்டு போனுர் பிரசவத்திற்காக. பிரசவம் முடிந்து, சரியாய் இரண்டு மாதம் ஆனதும் அனுப்பிவிட வேண்டும் என்று கண்டிப்புடன் கூறி என்னை அனுப்பினுர். புண்ணியாவசனத்திற்கு வந்தார். அதை மறுபடியும் ஞாபகப்படுத்திவிட்டுச் சென்ருர். குடும்பம் என்ருல் எவ்வளவோ தொல்லைகள். என் அப்பாவினுல், தான் ஒப்புக்கொண்டபடி, இரண்டு மாதம் முடிந்தவுடன் என்னை கொண்டுவிட முடியவில்லை. உடனே தந்தியடித்தார். பார்க்க வேண்டுமே இவர்! அப்பா அலறிக்கொண்டு என்னைக் கொண்டு விட்டார். நாலு நாள் தாமதமாகிவிட்டது என்ற காரணத்திற்காக, குழந்தையும் கையுமாகத் திரும்பிய என்னை வாசலில் நிற்க வைத்து, கூப்பாடு போட்டு, ஊரே கூடும்படி செய்துவிட்டார். அப்பாவையே கொண்டுவிட்டான் பிள்ளையும். இதில் அதிசயம் என்ன?' என்றேன் நான், கோமதியின் காதில் மெதுவாய்.



இது அவர் காதில் விழுந்துவிட்டது. 'ஏய்! என் மானத்தை வாங்குகிருயே! ஏதோ அந்த நாளில் ஆயிரம் அசட்டுத்தனமான காரியங்கள் செய்திருக்கிருேம். அவற்றையெல்லாம் இப்போது எண்ணிப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது' என்ருர். பாவம்! அவர் முகத்திலே அசடு வழிந்தது.

'மாமி! உங்கள் அகத்து மாமா என்ன? எங்களவரும் அப்படியேதான். வீட்டுக்கு வீடு அப்படித்தான்' என்ருள் கோமதியம்மாள்.

நானும் அவரும் வீட்டுப் படி ஏறிஞேம். உள்ளே பாண்டுவும் கமலமும் பேசும் குரல் கேட்டது. என்னைச் சந்தடி செய்யாதே

என்று சைகை காட்டினர் அவர். உள்ளே என் பையனும் நாட்டுப் பெண்ணும் பேசுவதை ஒட்டுக் கேட்க விரும்பி.

'கமலம்! ரயிலில் கூட்டம் அதிகமோ?'

'......'

'சௌகர்யமாக இடம் கிடைத்ததா? தூங்கினையா?'

'உம்!'

'குழந்தையின் உடம்பு ஏன் இப்படிக் கறுத்துவிட்டது?'

'வெய்யில் அதிகம் அங்கு.'

'இப்போது நீ அங்கு போனதில் உனக்கு வருமானம் எவ்வளவு?'

'நூற்றைம்பது ரூபாய் பெறுமானமுள்ள புடவை. ரொக்கம் ஐம்பது.'

'என்ன இருந்தாலும் நீ செய்தது தவறு ஒரு கார்டு போட்டிருக்கக் கூடாதா? ஸ்டேஷனுக்கு வந்திருப்பேனே!'

'போதும்! என்னைக் காலையில் அம்மாதிரி மானபங்கம் செய்திருக்கவும் வேண்டாம். இப்போது இம்மாதிரி குழையவும் வேண்டாம்.'

'பைத்தியமே! அதில்தான் உண்மையான இன்பம் இருப்பதாய் அனுபவசாலிகள் கூறுகிறார்கள். அதனால்தான்...'

'நானும் அதனால்தான் வேணுமென்றே கால தாமதம் செய்தேன். என் பாட்டி கல்லாட்டமாய்த்தான் இருக்கிறாள். நமக்குள் அன்பு பெருக, இம்மாதிரி சிறு பிணக்கு தேவைதானே?'

'நான் காலையில் அம்மாதிரி முரட்டுத்தனமாய் நடந்துகொண்டிருக்கக் கூடாதுதான்! அதை மறந்துவிடு!'

'ஐயோ! என் கன்னத்தை விடுங்கள்! அதோ வெளியே ஓசை கேட்கிறது!'

கிழவர் தன் கைத் தடியால் என்னைத் தொட்டு, குறும்புடன் என்னை நோக்கினர்.

எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது!






## 2

அலமாரியில் அன்று இரவு வைத்துச் சென்ற மிட்டாய் பொம்மையைக் காணவில்லை. மாயமாய் மறைந்துவிட்டது! ஓடிச்சென்று தன் மனைவியை எழுப்பி தான் கண்ட கனவையும், மிட்டாய்ப் பாப்பா மறைந்துள்ளதையும் கூறினர். இருவரும் மிட்டாய்ப் பாப்பாவிற்காக வீடு முழுவதும் தேடினர்.

'பூ...! மிட்டாய் பொம்மை உயிர் பெறுவதாவது, ஓடிச் செல்வதாவது. ஏதாவது பூனை அல்லது எலி வந்து அதைத் தூக்கிச் சென்றிருக்கலாம்' என்று முடிவு கட்டினர்! ஆனால் நடந்தது என்ன?



# மிட்டாய்ப் பாப்பா

'கல்வி' கோபாலகிருஷ்ணன்

மிட்டாய்க்கார முனுசாமி கனவு கண்டதுபோல் அவர் மிட்டாயில் செய்த பொம்மை உண்மையாகவே உயிர் பெற்று விட்டது. உயிர் பெற்றதும் அப் பொம்மை அலமாரியிலிருந்து அறை முழுவதும் சுற்றிப் பார்த்தது. இரவு நேரமாதலால் அவ்வறையில் ஒருவரையும் காணவில்லை. மெல்ல அலமாரியிலிருந்து கீழே இறங்கி அறையை விட்டு வெளியேற முயன்றது. எல்லாக் கதவுகளும் மூடப்பட்டிருக்கவே அறையைவிட்டு வெளியே வர முடியவில்லை. ஓர் கதவின் அடிப்பாகத்தில், பட்சணக் கடையில் புகுவதற்காக எலிகள் செய்து வைத்திருந்த ஓர் துவாரம் தென்பட்டது. அதன்வழியே மிட்டாய்ப் பாப்பா புகுந்து சென்றது! அத்துவாரம் மிட்டாய்ப் பாப்பாவை வீதியில் கொண்டு விட்டது! மிட்டாய்ப் பாப்பா இருட்டில் வீதி வழியே மெல்ல நடந்து செல்லத் தொடங்கியது. கிராமத்தின் தெருக்களின் வழியே நடந்து செல்லும் பொழுது வீடுகளின் வாயில் திண்ணைகளில் 'கொ...ர்...ர்...ர்... கொடக்... கொர்... ர்... ர்... ர்... கொடக்! கர்...ர்...ர்...ர்...கப்; கர்...ர்...ர்...ர்...கப்!' என்று ஓர் விநோத ஓசையைக் கேட்டுத் திடுக்கிட்டு பீதியால் ஓடத் தொடங்கியது. பாவம், திண்ணையில் தூங்குபவரின் கொரட்டை ஓசை என்று அறிந்திருந்தால் அது பயந்திருக்கக் தேவையில்லை. சற்று தொலைவு ஓடியதும் ஊர் நாய்கள் இடைவிடாது குரைப்பதைக் கேட்டு மேலும் பீதியால் ஓடியது! எப்படியோ ஓடி ஓடி கிராமத்து எல்லையை அடைந்தது. 'அப்பாடா இனி எந்த ஓசையும் கேட்காது' என்று மிட்டாய்ப் பாப்பா எண்ணி முடிப்பதற்குள் 'கிரீச்...கிரீச்... கிரீச்...கிரீச்...கிரீச்...' என்று காதைத் துளைக்கும் ஆந்தையின் கூவல் இதை கதிகலங்கச் செய்தது. மிட்டாய்ப் பாப்பா ஓடி ஒரு மரத்தின் அடியிலிருந்த புதரில் ஒளிந்துகொண்டது. ஆந்தையின் கூவல் ஓயவில்லை. இடைவிடாது கேட்கவே மிட்டாய்ப்

பாப்பாவுக்கு அந்தப் புதரை விட்டு வெளியில் வரவே பயமாக இருந்தது. இரவு முழுவதையும் அங்கேயே கழித்தது. இரவு முழுவதும் கண் விழிக்கவே அதிகாலையில் அசந்து தூங்கிவிட்டது. காலையில் பொழுது விடிந்து வெகுநேரம் கழித்து கண் விழித்து, மேலே செல்லத் தொடங்கியது.

சற்றுத் தொலைவில் சில பிள்ளைகள் வட்டமாகக் கூடி நிற்பதைக் கண்டது! அது என்ன வேடிக்கை என்று பார்க்க அந்தக் குழந்தைகளின் கூட்டத்தை மிட்டாய்ப் பாப்பா அணுகியது. பிள்ளைகள் பலர் வட்டமாக நின்றுகொண்டு பம்பரம் ஆடிக்கொண்டிருந்தார்கள். மிட்டாய்ப் பாப்பா அந்தக் கூட்டத்தின் அருகே சென்று என்ன நடக்கிறது என்று பார்க்க முயன்றது. பிள்ளைகள் நெருக்கமாக நிற்கவே வட்டத்தின் உள்ளே என்ன நடக்கிறது என்று இதனால் பார்க்க முடியவில்லை. மெல்ல மிட்டாய்ப் பாப்பா ஒரு பிள்ளையின் கால்களுக்கு நடுவே நுழைந்து வட்டத்தின் மத்தியை அடைந்தது! வட்டத்தின் உள்ளே நுழைந்ததும் பிள்ளைகள் விட்டிருந்த பம்பரங்களில் ஒன்று இங்குமங்குமாகச் சுழன்று சுழன்று ஓடியது. பம்பரம் சுழலும் பாதையில் மிட்டாய்ப் பாப்பா சென்றுவிடவே பம்பரம் இதை துரத்தத் தொடங்கியது. இதைக் கண்ட பிள்ளைகள், 'அடே மிட்டாய் பொம்மைடா! அடே மிட்டாய்ப் பாப்பாடா, பிடி பிடி விடாதே' என்று கூச்சலிட்டனர். அடுத்த விநாடி எல்லோரும் கூடிக்கொண்டு மிட்டாய்ப் பாப்பாவைப் பிடிக்க முயன்றனர். அது பிள்ளைகளின் கையில் பிடிபடாமல் அங்குமிங்கும் ஓடி ஒரு பையனின் கால்களின் இடுக்கு வழியாக நுழைந்து வெளியே ஓடிவிட்டது!

## கையில் சிக்கியது

ஆனால் ஒரு சாண் உயரமுள்ள மிட்டாய்ப் பாப்பா எவ்வளவு வேகமாய் ஓடிதான் என்ன பலன்? எட்டு சாண் உயரமுள்ள பிள்ளைகளுடன் ஓட்டப் பந்தயத்தில் போட்டி போட முடியுமா? வெகு விரைவில் ஒரு பையனின் கைகளில் சிக்கியது. கையில் சிக்கிய மிட்டாய்ப் பாப்பா அவன் பிடியிலிருந்து தப்ப உடலை நெளித்துப் பார்த்தது. பயனில்லை. அவன் பிடியை மேலும் இறுக்கினான். வேறு வழியில்லாமல் திருதிருவென்று முழித்தது.

'அடே சோமு, இப்படிக் கொடுடா. அந்த மிட்டாய் பொம்மையை அது என்னுடையது. அதை முதலில் நான்தான் பார்த்தேன். கொடுக்கிறாயா இல்லையா? என்ன செய்கிறேன் பார்' என்று ஒருவன் சோமுவின் கையில் சிக்கி இருந்த மிட்டாய்ப் பாப்பாவை தாவிப் பிடுங்கப் பார்த்தான்.

'ஏய் குப்பு! இந்த பொம்மை என்னுடையது தெரியுமா? இதை என் பம்பரம்தான் சுற்றிச் சென்று உன் கையில் பிடிபடும்படி செய்தது. இப்படி அதை என் கையில் கொடு' என்று இரண்டாவது பையன் முதல் பையனுடன் போட்டி போட்டுக்கொண்டு மிட்டாய்ப் பாப்பாவை சோமுவின் கையிலிருந்து பிடு






ங்க முயன்றான். இப்படியே அங்கு கூடியிருந்த பிள்ளைகள் எல்லோரும் மிட்டாய் பாப்பாவை பிடித்திழுத்துப் பிய்த்துவிட முயன்றனர். சோமு மற்றவர்களைவிட உயரமாய் இருந்ததால் அங்கு இருந்த மற்ற பிள்ளைகளின் கையில் சிக்காமல் தப்பியது.

அங்கே இருந்த பிள்ளைகளில் ஒருவன் 'ஏன் வீண் சண்டை போடுகிறீர்கள். மிட்டாய் பொம்மையை ஆளுக்கொரு பாகமாகப்

பங்கிட்டு எடுத்துக்கொண்டு சாப்பிடலாம்' என்று கூறினேன்.

'ஆ! அப்படியே செய்வோம். எனக்குத் தலையைக் கொடு. எனக்குக் காலைக் கொடு. எனக்கு உடல்தான் வேண்டும். எனக்கும் உடல்தான் வேண்டும்' என்று எல்லோரும் கூக்குரலிடத் தொடங்கினர். அங்கங்கமாகப் பிய்த்துப் புசிக்கத் திட்டமிடுவதைக் கேட்ட மிட்டாய் பாப்பா கதி கலங்கியது!

## கல்லில் மோதத் திட்டம்

ஒருவன் உடல் பாகத்தைக் கேட்டால் மற்ற பிள்ளைகளும் தங்களுக்கும் உடல் பாகமே வேண்டுமென்று சண்டை பிடித்துக்கொள்ளவே, யார் எந்த பாகத்தை எடுத்துக்கொள்வது என்று ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. பிள்ளைகள் யாவரும் ஒருவருடன் ஒருவர் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். இதற்குள் சோமுவிற்கு ஓர் விபரீத எண்ணம் உதயமாயிற்று! 'அடேய் நான் ஒரு நல்ல யுக்தி சொல்லுகிறேன். பிள்ளையார் கோவிலின் முன்னே சிதர் தேங்காய் உடைப்பது போல் இந்த மிட்டாய் பொம்மையை ஒரு கல்லின்மேல் மோதி உடைக்கிறேன். அவரவர்கள் எடுத்துக்கொள்ளுங்கள்' என்றான்.

'ஓ, அப்படியே செய்வோம். இதோ ஒரு பாராங்கல் இருக்கிறது. இதைச் சுற்றி வட்டமாக நில்லுங்கள்' என்று ஒருவன் கூக்குரலிட்டான். எல்லாப் பிள்ளைகளும் அந்தப் பாராங் கல்லைச் சுற்றி வட்டமாக நின்று கொண்டனர். சோமு அந்தப் பாராங் கல்லின் அருகில் நின்றுகொண்டு மிட்டாய் பாப்பாவைப் பிடித்துக்கொண்ட கையை உயரத் தூக்கி அதைக் கல்லில் மோதி சுக்குநூறாய் உடைக்க ஆயத்தமானான். எல்லாப் பிள்ளைகளும் பாராங்கல்லையே நோக்கி நின்றனர். சோமுவும் பாராங்கல்லை உற்று நோக்கியபடி 'ஒன்று உம் ஒன்று...' என்று எண்ணத் தொடங்கினான்.

சோமு 'ஒன்று...ஒன்று...ஒன்று... இரண்டு... இரண்டு... இரண்டு... மூ...' என்று ஆரம்பித்தவன் மூன்று என்று முடிக்காமல் 'ஐயோ' என்று அலறினான்! அவன் கையிலிருந்த மிட்டாய்ப் பாப்பாவைக் காணவில்லை. மிட்டாய்ப் பாப்பாவைப் பிடித்த கையில் இரத்தம் பீறிட்டுக்கொண்டு கொட்டியது! மிட்டாய்ப் பாப்பாவைக் கொல்ல முயன்ற சோமுவின் கை இரத்தக் காடாகக் காட்சி அளித்தது. சோமு வலி தாங்காமல் 'ஐயோ... அப்பா...அம்மா...ஸ்ஸ' என்று அலறிய வண்ணம் நின்ற இடத்திலேயே குதிகுதி என்று குதித்தான்!

(தொடரும்)





# பாசத்திற்கு

சௌந்தரம் ராஜகோபால்

'ஒரே ஒரு ஆளுதான். வேறே இடமில்லை. சீக்கிரமாக குந்து ஆயா...ரைட்'—விசில் கொடுத்து விட்டான் கண்டக்டர். 'அப்போ நான் வர்ரேன். நீ போயிக்க. பெறெவு பேசிக்கிடலாம்' பஸ்ஸின் கீழே நின்றிருந்த ராக்காயி, பச்சையம்மாவிடம் பெரிதாக இரைந்து கத்தினாள். உள்ளேயும் வெளியேயும் காதைத் துளைத்த பிரயாணிகளின் இரைச்சலில், வண்டி புறப்படும் சந்தடியில் ராக்காயியிடம், விடை பெறக்கூட இயலவில்லை பச்சையம்மாவிற்கு. புழுக்கம் தாங்கவில்லை. மூச்சு விடக்கூட சிரமப்படும்படியான வெம்மையின் கசகசப்பு.

'ஏய்யா, உனக்குக் கண்ணு தெரியுதா. மனிசனை மாட்டுக் கணக்கிலே நினைச்சுக்கிட்டு இம்மாம் பெரிய கூடையை என் காலிலே வைக்கிறயே, தலையிலேயே போடுறதுதானே. இங்கிதம் தெரியாத பயலுக'. கிருதா மீசையும் மல் ஜிப்பாவுமாய் ஒரு ஆசாமி இரைந்துகொண்டிருந்தான். புழுக்கம் தாங்காமல் சில குழந்தைகளின் அழுகைக் குரல் உச்ச நிலையை எட்டிக்கொண்டிருந்தது. பிரயாணிகளின் சலசலப்புக்கிடையே ஆரவாரம் நிறைந்த கடை வீதியையும், லெவல் கிராஸிங் பகுதியையும் கடந்து விரைந்துகொண்டிருந்தது கோவை— திருப்பூர் பஸ். நகர சந்தடிகளுக்கு அப்பால் நீண்டு விரிந்து கிடந்த மரமடர்ந்த சாலையில் கரிப் புகையை எழுப்பும் புகைபோக்கிகளுடன் நெசவாலைகளின் வெள்ளைக் கட்டிடங்கள் கம்பீரமாகக் காட்சியளித்து மறைந்தன. அலைகளின் வெளியே எறும்பு சாரை சாரையாக ஆண்களும் பெண்களுமாய் பஞ்சுப் பிசிறு வெண்திரையிட்டுப் பொலபொலவென உதிர்ந்து மறைத்த தலைகேசங்களுடன் 'ஷிப்ட்' வேலை முடிந்து வீடு நோக்கி விரையு

காட்சியோடும் பஸ்ஸின் பின்னோக்கி மறைந்தது. பருத்தி பயிரிடப்பட்ட பூமிகளுடன் ஆங்காங்கே வயல்களில் நிமிர்ந்து நின்ற கொண்டையிட்ட சோளப்பயிர்கள், கரும்புத் தோட்டங்கள் அனைத்தும் கோடைக் கதிரவனின் வெம்மையில் தலைசாய்ந்து நின்றன. கோடை வெம்மை தாளாது சிற்சில இடங்களில் வெடித்துப் பிளவுண்டு கிடந்த கரும் பருத்தி பூமியான கரட்டு நிலங்களைப்போலத்தான் பச்சையம்மாவின் வாழ்வுப் பாதையும் வறண்டு கிடந்தது.

அவள் இதயம் வெறுமையாகிப் பிளவுபட்டு எத்தனையோ காலம் கடந்தாகி விட்டது. வறுமையிலும், துன்பத்திலும் உழன்று, சுழன்று அந்த சூழ்நிலையையே கால ஓட்டத்தில் வாழ்வின் நியதியாகக் கொண்டு இதுகாறும் இயங்கி வந்துவிட்டாள் அவள். சிறு பிள்ளையிலேயே ஒரு கால் வலுவிழந்து போனாலும் உடல் வலி குன்றாத, உழைப்புக்கு அஞ்சாத மகன் செங்கோடனும் அவளும் அமைதியான சலனமற்ற வாழ்வு சில ஆண்டுகளாக கடத்தனர். அரை வயிற்றுக் கஞ்சியிலும் ஆறுதலும், அமைதியும் கிடைத்து வந்தது. 'ஆனால் அந்த அமைதியை அடியோடு குலைப்பதற்காகவா அந்தச் சந்திப்பு நேரிட வேண்டும். அதுவும் எப்படிப்பட்ட சூழ்நிலையில் எப்போதோ மனதில் புரையோடி ஆறாத ரணமாகி நாளடைவில் மனதில் மக்கி மடிந்து வடுவாகி விட்ட துயர ரணங்களையெல்லாம் ஆழமாகக் கீறி உதிரம் கசியவைத்த நிகழ்ச்சியன்றோ அது.

'ஆயா எங்கிட்டுப் போறீங்க, திருப்பூரா. நான் சிங்காநல்லூரிலே இறங்கணும். சிணுங்கி அழுதுகொண்டிருந்த குழந்தையை வாழைப்பழம் உரித்துக் கொடுத்து சமாதானம் செய்து கொண்டிருந்த எதிர் 'ஸீட்' ஜவந்திப்பூக் கொண்டைக்காரிதான் கேட்டாள். தலை தாங்காத ஜவந்தி இதழ்கள் பொல பொலவென உதிர்ந்தன. அவளை அடுத்து அமர்ந்திருந்த முண்டாசு கட்டிய ஆளின் குறட்டை காதைத் துளைத்தது. பழமை நினைவலைகளின் ஆரவாரச் சுழலிலே சிக்கிக் கிடந்த பச்சையம்மாவின் சிந்தனைகள் ஒரு கணம் ஓய்ந்தன.

'ஆமா. திருப்பூருதான். அங்கு ராட்டை சுற்றி சிட்டம் நெய்து கதர் ஆபீசுக்கு கொடுத்திட்டிருக்கிறேன். மவன் வீட்டிலே தறி போடுறான். வேண்டாத நினைவுகளின் தெறி கெட்ட சுழற்சியை—அந்த வயிற்றைக் கெல்லும் சிந்தனையின் வேதனைத் தவிப்பை—பேச்சின் மூலமாக ஆற்றிக்கொள்ள முயன்றாள் பச்சையம்மா. ஆனால் அவைகள் ஓயவேயில்லை.

நோயில் அடிபட்டு குணமடைந்து வந்த பச்சையம்மா, சிட்டம் நூற்கும் நாட் கூலியெல்லாம் இயலாமையால் குறைந்து, திணறிக்கொண்டிருந்தாள். அவளது அத்தை மகள் ராக்காயிதான், ஒரு பெரிய மனிதர் வீட்டுக் கல்யாணத்தில் வேலைக்கு பெண் பிள்ளை தேவையாயிருப்பதாகச் சொல்லி அவளைக் கோவைக்கு அழைத்து வந்தாள். அதுவுமன்றி அவள் மகனுக்கும் நிலையான ஊதியம் பெற வழி செய்வதாகச் சொன்னாள்.

செங்கோடனுக்கு தன் அன்னை இந்த உடல் நிலையில் பணம் சம்பாதிக்கக் கிளம்புவது சிறிதும்



விருப்பமில்லை. ஆனாலும் கண்ணுக்குக் கண்ணான அருமை மகனுக்கு மிகவும் சிரமம் கொடுப்பது பச்சையம்மாவின் உயிரையே வதைப்பது போலத் தோன்றியது அவளுக்கு. அவன் என்ன சொல்லியும் கேளாமல் கோவைக்கு ராக்காயியுடன் கிளம்பி விட்டாள் பச்சையம்மா.

கோவை பஸ் நிலையத்தில் இறங்கிப் பீளமேட்டுச் சாலையில் நடக்கும்போது 'தொண தொண'வெனப் பேசிக்கொண்டே வந்தாள் ராக்காயி.

'என்னோட பொறந்தவன் அங்கிட்டுத்தான் தோட்ட வேலை செய்யுறான். இந்தக் கண்ணால சமயத்திலே நல்லா வேலை செய்து நல்ல பேரு வாங்கிக்கிட்டேன்னா சாப்பாடு வவுத்துக்குப் போட்டு கைக்குப் பணமும் கொடுத்து வீட்டோடேயே வெச்சுக்குவாங்க அவுங்க. ஒன்ர மவனுக்கும் அந்த ஐயாவிடம் சொல்லி மில்லிலே எதனாச்சும் வேலை போட்டுத் தரச் சொல்லுறேன். அவுங்க அக்கரைச் சீமையிலே சிங்கப்பூருலே ரொம்பக் காலமா இருந்தவுங்க. இங்கிட்டு வந்து மூணு வருசம்தான் ஆவுது. பீளமேட்டு மில்லுங்களிலே ஒருமில்லுலே கூட்டாளியாப் பணம் போட்டிருக்காங்க. இரண்டேபிள்ளைங்கதான். மூத்த மவளுக்குத்தான் கண்ணாலம். மவன் படிக்கிறான்.

ராக்காயியின் இடைவிடாத பேச்சு பச்சையம்மாவிற்குப் பிடிக்கவில்லைதான். கோவை நகரைப் பார்த்தே பல வருடங்கள் கடந்துவிட்டபழமையின் நினைவுகளினூடே சுற்றுப்புறத்து நகரக் காட்சிகளையெல்லாம் ரசித்துக்கொண்டே நடந்தாள் அவள்.

## புத்-தேள் உலகு!



இந்தக் கூடையோடு வேலை எல்லாம் முடிந்தது. வீட்டிலே தேள் என்ற நாமதேயமே இல்லை!

முன்பெல்லாம் சிற்சில நெசவாலைகளும் யந்திரச் சாலைகளுமாக இருந்த அந்த ஊர்தான் இப்போது பார்க்குமிடமெல்லாம் பஞ்சாலைகளும் கால்வைக்கும் இடமெல்லாம் இரும்புத் தொழிற்சாலையுமாக விரிந்து பரந்து பெரும் நகராக வளர்ந்து விட்டது. கிராமப் பண்பாட்டுப் பாமர மங்கையான அவளுக்குப் படிப்படியாக விரியும் நகர முன்னேற்றங்களைப் பற்றித் தெரிந்திருக்க நியாயமில்லைதான். ஆனாலும் அந்த கரிசல் மண்ணிலேயே பிறந்து ஊன்றி வாழ்வின் பெரும்பகுதியையும் பரம்பரைத் தலைமுறைகளாகக் கழித்து வரும் அவளுக்குப் பிறந்த பூமியைப் பற்றி தெரியாமலிருக்க முடியுமா? கால் வலுவிழந்த மகனுக்காக எத்தனையோ இடர்

களையும் துயர்களையும் அந்த உடல் தாங்கி செக்காக உழைத்துக் களைத்து இப்போது ஒடுங்கத் தொடங்கி விட்டது. முதுமையின் வாயிலில் இருந்த போதிலும் வாழ்வின் பல்வித திருப்பங்களின் கோணங்களில் துயரமும் வறுமையும் இடைவிடாது தொடர அந்தப் போராட்டங்களை வெற்றி காண்பதில் ஏற்பட்ட ஒடுக்கத்தில் தேகம் தளர்ந்து கண்முகமெல்லாம் சுருங்கி நரைத்துத் திரைத்த கேசங்களுமாய் மூப்பின் எல்லையை எட்டி விட்டது போன்ற தோற்றம்தான் பச்சையம்மாவிற்கு. செங்கோடனின் எல்லையற்ற அன்பும், தாய் பாசமும்தான் அவளை வாழவைத்துக்கொண்டிருந்தது. தற்போதும் தன் மகனின் நல்வாழ்விற்கு வழி வகுத்து கொடுக்க வேண்டும் என்ற ஆவல்தான் கதர் சிட்டம் நூற்பதுடன் அல்லாமல் ஒடுங்கிய உடலுடன் உடல் உழைப்புக்கும் ராக்காயியுடன் வந்து விட்டாள் அவள்.

'இதோ. அந்தாலே தெரியுதே அந்த காவி பூசிய பங்களாதான் அவுங்க வூடு. விசையா நட. நேரமாயுட்டுது என அவசரப் படுத்தினாள் ராக்காயி.

வேகமாக நடந்து வந்ததில் பச்சையம்மாவிற்கு மூச்சு இரைத்தது. கால்கள் தளர்ந்து தொய்ந்தன. அகன்ற சாலையையே அடைத்து அந்த வீட்டார் பெரிய பந்தல் போட்டிருந்தனர். பந்தலெங்கும் வண்ண விளக்குகள் போடுவதற்காக ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. வாழை கமுக மரங்கள் கட்டும் ஆட்கள். வண்டி வண்டியாக தேங்காய்களும் வாழைப்பழத் தார்களும் இறங்கிக்கொண்டிருந்தன. மேளக்காரர்களுடன் பேச்சு நடத்திக் கொண்டிருக்கும் மனிதர்கள். அங்கும் இங்குமாகப் பரபரவென ஓடும் பணியாட்கள். அந்த இடமே பரபரத்து விளங்கியது. 'போர்டிகோவில் கப்பல் போன்ற பெரிய கார் ஒன்று பளபளவென மின்னிக்கொண்டு நின்றது. காகிதமும் பென்சிலுமாக பணிவாக நிற்கும் குமாஸ்தாவிடம் ஏதோ உத்தரவிட்டுக் கொண்டிருந்தாள் வீட்டின் எஜமானி. திரைப் படங்களில் காண்பிப்பதுபோல மலர் குலுங்கும் பூந்தோட்டமும் பங்களாவும் காருமாய் பச்சையம்மா கனவில்கூட நினைக்க முடியாத அந்த சுக வாழ்வின் ஆடம்பரங்களைக் கண்டு வியப்பில் கண் மலர நின்றாள்.

எஜமானிக்கும் பச்சையம்மாவை அறிமுகப்படுத்தினாள் ராக்காயி. உடலெல்லாம் வைரமும் தங்கமும் ஒளி வீச கர்ப்பூரமாக வாட்ட சாட்டமாக நன்று கொண்டிருந்த எஜமானி அலட்சியமாக ஒரு பார்வை பார்த்தாள் அவளை. 'சரி சரி. பேச டயமில்லை. பின்னாலே கூட்டிக் கிட்டுப் போய் வேலையெல்லாம் காட்டிக் கொடு. ராக்காயிக்கு உத்தரவிட்ட எஜமானி உள்ளே மறைந்து விட்டாள்.

வீட்டின் பின்புறம்கூட சிவப்பு தளவரிசையுடன் பிரமிப்பூட்டியது பச்சையம்மாவிற்கு. குழாயடியில் கிடந்த பெரிய பாத்திரங்களின் குவியல்களைப் புளியிட்டுத் தேய்க்கலானாள் அவள்.

எதிர்ப்புறம் தெரிந்தது மாடி அறையின் சாளரங்கள்.

'என்ன சம்பந்தம். கார்டன் பார்ட்டிக்கு பர்னிசர் எல்லாம் ஏற்பாடு ஆகிட்டுதா. .ஊர்வலத்



துக்கும் கார் அலங்காரத்திற்கும் பூக்காரனிடம் 'ஆர்டர்' கொடுத்து விடு. மாடியிலிருந்து குரல் வந்தது. நிமிர்ந்து பார்த்தாள் பச்சையம்மா. ஒரே ஒரு கணம் தான். அந்த முகம். அந்தக் கண்கள் கன்னத்தில் உள்ள அந்த நீண்ட மச்சம். கேசம் நரைத்து முகம் முதிர்ந்து விட்டாலும் உள்ளம் கண்டுகொண்டது அவரே தான். பச்சைப்பசும் குழந்தையாக செங்கோடனையும் தன்னையும் விட்டு ஓடிவிட்ட தன்னைக் 'கொண்டவனை' இத்தனை கால இடைவெளிக்குப் பிறகு கண்டு கொண்ட அதிர்ச்சியில் உள்ளம் ஓலமிட்டது. உடலெல்லாம் துடித்து அதிர்ந்தது. அந்த இடமே இருண்டு மிகப் பெரிய இருட்கோளங்கள் கவிந்து சூழ்ந்து பச்சையம்மாவின் கண்கள் முன் சுழன்றன.



யாவையுமே மறந்த நிலைதான். ஆனாலும் உள்ளுணர்வின் வழிப்பில் கனவு போன்று பல காட்சிகள் விரிந்து படமாகி ஓடின.

பொன்னி நதிப் பாசனத்தின் செழிப்பில் பசுமை மண்டிக் கிடக்கும் சாவடிப்பாளையம் கிராமமே. உழுது பயிரிட்ட ஈர நிலங்கள். பசேரெனக் குலுங்கி பச்சைக் கம்பளமாக விரித்திருக்கும் நெல் வயல்கள். அவைகளின் மையத்தில் அமைதியின் சூழலில் அழகு மிளிர நிற்கும் சிறு ஓட்டு வீடு. பின்புறம் எழுப்பியிருந்த மூங்கிற் படலுக்குள் தளதளவெனக் காய்த்துக் குலுங்கும் சிறு காய்கறித் தோட்டம் ஏற்றக் கிணற்றினருகில் வேப்ப மரத்தினடியில் அமுதம் பொழியும் நிலவின் தண்மையில் தென்றல் தவழ கயிற்றுக் கட்டிலில் அருகருகே அமர்ந்து வாய்நிறை

நத வெற்றிலைச் சாற்றின் சுவையுடன் தலையில் சூடியிருக்கும் மலர்ச் சரத்தின் மணத்துடன் பச்சையம்மாவும் பெரியண்ணனுமாய் பேசி மகிழும் இன்பக் கதைகள், காட்சியின் திருப்பம். திமில் உயர வெள்ளை வெளேரென மின்னும் காங்கேயம் காளைகளும், பால் கொழிக்கும் பசுக்களுமான கொட்டிலுடன் காங்கேயச் சீமையிலே பையில் வெள்ளி குலுங்க உடலில் தங்கம் குலுங்க பால் விற்றுப் பணம் பெருக வாழ்ந்த நாட்கள். இன்ப வாழ்வின் முடிவுக் காட்சியில் பச்சையம்மாவையே சுற்றி வந்த பெரியண்ணன் 'ரங்' காட்டமே உயிர்நிலையாய், மதுக் கடையே உறைவிடமாய் அவளை நையப் புடைத்து வதைத்து வந்த கொடும் நாட்கள். அனைத்தையும் இழந்து நிறைமாதக்காரியாய் பசித்த வயிறுமாய் கண்ணீரும் கம்பலையுமாய் சுருண்டு கிடக்கும் கோலம்.

கால் துவண்டு பிறந்த சிசுவையும் குற்றுயிராய் படுத்துக்கிடக்கும் அவளையும் விட்டு அவளுடைய ஒரே ஆஸ்தியான தங்க அட்டிகையுடன் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் பெரியண்ணன் மறைந்ததும் இத்தனை காலம்வரை செங்கோடனை ஆளாக்க அவள் பட்ட சிரமங்கள். செல்வச் சீமானாய் மற்றொரு மனைவியுடன் காரும் பங்களாவுமாய் அவன் இத்தனை காலத்திற்குப் பின் தன் அமைதி வாழ்வில் புயல் வீசத் தோன்றிய காட்சி.

முகத்தில் சில்லென்ற உணர்வு தாக்கியதும்தான் கண் விழித்தாள் பச்சையம்மாள். அவளைச் சுற்றிச் சிறு கூட்டமே கூடியிருந்தது. குழாயடியில் நெடு நேரம் கிடந்ததில் சேலையெல்லாம் தெப்பமாக நனைந்திருந்தது அவளுக்கு. அவளை ஒரு ஓலைப்பாயில் படுக்க வைத்திருந்தார்கள் போலும்! வீட்டின் எஜமானி ராக்காயியிடம் இரைந்து பேசுவது கிணற்றிலிருந்து ஒலிப்பதுபோல் மங்கலாகக் கேட்டது.

'இப்படி சீக்குக்காரப் பொம்பளையெல்லாம் எதுக்காவ வேலைக்குக் கூட்டிவறே? ஏதேனும் இங்கேயே ஆயிடப்போவுதே அவளுக்கு என நான் ஒரே திகிலும் பட்டுக்கிட்டேன். முதலில் அவளை ஊரிலே கொண்டு போய்ச் சேர். நல்ல பொம்பிளை கூட்டியாந்தே. கல்யாண வீட்டு வேலைக்கு,'

சிறிதுகூடப் பரிவின்றி அவள் பேசும் வார்த்தைகள் பச்சையம்மாவின் மனதில் பதியவேயில்லை. 'அவுரு' எங்கே என்ற இதயத் துடிப்பின் விசையில் அக்கூட்டத்தில் அவள் கண்கள் பெரியசாமிக் கவுண்டரைத் தேடிச் சுழன்றன.

'இந்தா இதைக் குடி. எல்லாம் படுமயக்கம்தான். சூடா வயத்துலே போனதும் களைப்பெல்லாம் சரியாயிடும்.

வெண்கலத் தம்ளர் நிறைய ஆவி பறக்கும் காப்பியை அவள் முன் நீட்டினாள், அந்த வீட்டின் சமையலாள். ராக்காயி எவ்வளவோ சொல்லியும் அந்தக் காப்பியை வாயில் ஊற்றிக் கொள்ள மறுத்து விட்டாள் பச்சையம்மா.

'எனக்கு ஊட்டு வேலையெல்லாம் தோதுபடாதுடி ராக்காயி. ஒரு நிமிசம்கூட என்னாலே இங்கிட்டு இருக்க முடியாது. பஸ் 'ஸ்டாப்பு' வரைக்கும் வா. நான் திருப்பூரு போயிக்கிடறேன்.



எஜமானியம்மாவைத் திரும்பியும் பாராமல் வாசல் வராந்தாவைத் தள்ளாடியவாறே கடந்தாள் அவள். பச்சையம்மாவின் போக்கு ஒன்றும் புரியாமல் கூட நடந்தாள் ராக்காயி. ஒரே ஒரு முறை மாடியை நிமிர்ந்து பார்க்க வேண்டும் என்ற ஆவல் உந்தித் தள்ளியது பச்சையம்மாவை. மாடியின் முகப்பில் இரும்புச் சட்டமிட்ட கைப்பிடிச் சுவரின் முன் அவளையே நோக்கிக்கொண்டிருந்த விழிக்கடையில் நீர் பளபளக்கும் பெரியசாமியின் கண்கள் பச்சையம்மாவின் விழிகளை சந்தித்தன. சரேலெனப் பார்வையை மீட்டவாறு தள்ளாடியபடி நடக்கும் பச்சையம்மாவின் உருவம் சாலை முனையில் மறையும்வரை அசையாமல் அங்கேயே நின்றார் அவர்.

விரைந்துகொண்டிருந்த வண்டியிலே சிந்தனைப் புயலூடே சுழன்று கொண்டிருந்த பச்சையம்மாவிற்கு திருப்பூர் நகர் சாலையில் பஸ் வேகம் குறைந்து செல்வதுகூடப் புலனாகவில்லை.

கடை வரிசைகள், மில்கள், சினிமா இசைத்தட்டு கேட்பாரற்று அலற, வீதிக்கு நாலாய் நிற்கும் சிற்றுண்டி சாலைகள், க்யூ வரிசையில் மக்கள் கூட்டம் காத்திருக்க பெருமிதமாக நிற்கும் திரைப்படக் காட்சிக் கட்டிடங்கள் உயர்நிலைப் பள்ளியின் விளையாட்டுத் திடல் அனைத்துமே அவள் கண்களுக்கு உருவற்ற வடிவங்களாகத்தான் தோன்றின.

'இந்த வீடுதானே தறிக்காரன் செங்கோடன் வீடு.'

வீட்டின் வெளிப்புறத்தில் யாரையோ வினவிக்கொண்டிருந்த அந்த வெண்கலக் குரல் சுர




புதுசா சன்யாசிக் கலர்லே ஒரு புடவை வந்திருக்கு! ரொம்ப நன்னு இருக்கு! விலை 170 ரூபாயாம்! ஒண்ணு வாங்கிண்டு வரப் போறேன்......

இந்தா! இந்தா! எனக்கும் அதே கலர்லே நாலு முழத்துலே ஒண்ணு கரை இல்லாமெ வாங்கிண்டு வா முதல்லே!

வேகத்தில் சுருண்டு கிடந்த பச்சையம்மாவைச் சரேலெனத் தள்ளாடியபடியே எழுந்து உட்காரச் செய்தது.

மண் திண்ணையின் முன்புறம் கட்டப்பட்டிருந்த ஓலைத் தட்டியில் கார் முன் விளக்குகளின் வெளிச்சம் ஒளியை வாரி இறைத்தது. சன்னல் வழியே புகுந்த ஒளி லாந்தர் ஒளியில் உறங்கிக்கொண்டிருந்த வீட்டின் உட்புறத்தைக்கூட பளீரெனத் துலக்கியது.

'கோவையிலிருந்து வந்தது முதல் மூன்று நாட்களாய் குளிர் சுரத்தில் வேதனைப்படும் தன் அன்னைக்காகக் கஞ்சி காய்ச்சி இறக்கி வைத்துவிட்டு வைத்தியரையாவிடம் சூர்ணம் வாங்கி வர ஓடியிருந்தான் செங்கோடன். உட்புறம் தாழிடப்படாமல் மூடப்பட்டிருந்த மரக் கதவு கிறீச்சிட்டது. மெதுவாகத் திறந்தபடியே உள்ளே வந்தார் பெரியசாமிக் கவுண்டர்.

அவரைக் கண்டதுமே பச்சையம்மாவின் உடல் முழுவதும் வெடவெடவென ஆடியது. சொல்லொணா உணர்ச்சிகள் நெஞ்சுக் குழியை அடைத்தன. இதுகாறும் அவள் மனதில் புரையோடிக் கிடந்த வெறுப்புணர்ச்சிகள், மனக்கொதிப்பு யாவும் எங்கோ ஓடி ஒளிந்தன. நெஞ்சம் நெகிழ்ந்து நெக்குருகித் தவித்தது. கண்ணீர் மடை போலக் கன்னம் நிறைந்து வழிந்தது. ஏதேதோ கேட்க வேண்டும், பேச வேண்டுமென்ற தவிப்பு. ஆனால் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டது. தொண்டை எழும்பவேயில்லை. தட்டுத் தடுமாறியவாறே எழுந்து மூலையில் கிடந்த ஒரு முக்காலியை இழுத்துப் போட்டாள் அவள்.

'நீ உடம்பை அலட்டிக்கிடாதே பச்சை. உன்னை இந்த நிலையில் காண என் மனசு என்ன பாடுபடுது தெரியுமா? உனக்கும் மகனுக்கும் நான் பெருந் துரோகம் செய்து விட்டது எனக்குப் புரியாமலில்லை. உங்களைப் பார்க்க என் மனம் துடித்தது. இந்தக் கல்யாண ஆரவாரமெல்லாம் முடியட்டும் என்றிருந்தேன். அக்கரைச் சீமையில் நான் வியாபாரத்தில் கூட்டாகச் சேர்ந்திருந்த முதலாளி கட்டுடலுடன் இளமை மாறாதிருந்த எனக்குத் தன் ஒரே பெண்ணையும் கொடுத்து திரண்ட சொத்தையும் எங்களுக்கு எழுதி வைத்து விட்டார். நான் செய்தது மிகப் பெரிய தவறுதான். அழகிய பெண்ணையும் ஆஸ்தியையும் ஒருங்கே கண்டதும் உண்மையைச் சொல்ல என் நாவடைத்து சபலம் பிடித்த நெஞ்சு மறுத்து விட்டது. உங்களுக்கு நான் செய்த துரோகத்திற்குப் பரிகாரம் செய்யும் உறுதியில்தான் இப்போது நான் வந்தேன். என் அமைதியில்லாத மனம் இனியேனும் சிறிது சாந்தியடையும் என நினைக்கிறேன்.

நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு பெரியண்ணனின் குரல் ஒலித்தது. தம்மையும் மீறி இளகும் நெஞ்சின் நெகிழ்ச்சியில் குரல் உடைந்து கம்மியது.

பச்சையம்மாவின் உள்ளம் ஒரு கணம் மகிழ்வில் துள்ளிக்குதித்தது. பிரிந்த வாழ்வு ஒன்றுகூடிவிட்ட எண்ணக் களிப்பில் வாழ்வின் பிற்பகுதியிலாவது மனமிரங்கிக் குலதெய்வம் மருதமலைச்சாமி தங்களை ஒன்றுபடுத்தி வைக்கப்போவதை எண்ணி ஆனந்த போதை கொண்டு விட்டாள் அவள்.

கொண்டு வந்திருந்த தோல் பையைத் திறந்தார் பெரியண்ணக் கவுண்டர். கட்டுக்கட்டான முத்திரை நோட்டுகள் அதிலிருந்து வெளிவந்தன.

'இதை வாங்கிக் கொள். உங்களுக்கு எப்போது பணம் தேவையாயிருப்பினும் என் மில் விலாசத்திற்கு இரண்டு வரி எழுதினால் போதும். உங்களுக்கு பணம் வந்து சேரும். எப்போதேனும் வந்து உங்களை முடிந்தால் பார்க்க வருகிறேன். செங்கோடனைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலுடன் வந்தேன். அவனைக் காணவில்லை. எனக்கும் நேரமாகிறது. உங்களிருவரிடமுமே நான் ஒன்றே ஒன்று வேண்டிக் கொள்கிறேன் சமூகத்தில் மதிப்பு நிறைந்த மனிதனாகயிருந்து வருகிறேன். அதற்கு நீங்கள் ஊறு செய்யமாட்டீர்களென நம்புகிறேன். உண்மை தெரிந்தால் என் மதிப்பைக் குலைத்து சமூகம் என்னை எள்ளி நகையாடும், புரளி செய்யும்.

அவருடைய நீட்டிய கரங்களிலிருந்த நோட்டுகளைப் பச்சையம்மா தீண்டவேயில்லை. நம்பிக்கையும் கற்பனையும் துகள் துகளாகச் சரிந்து விழ நெஞ்சம் வெந்துவிடும் போலக் கொதித்தது. கண்களைக் கரங்களால் மூடியபடி சரேலென அந்தக் கிழிந்த கம்பளத்தில் சுவர் பக்கமாக ஒருக்களித்துப் படுத்துவிட்டாள் அவள். பெரிய சாமியை நிமிர்ந்து காணக்கூட இதயம் கசந்தது.

அவர் எப்போது போனாரோ தெரியாது அவளுக்கு. துன்ப வேதனையில் காய்ச்சலின் வாதனையில் நினைவிழந்து விட்ட அவள் கண்விழித்த போது பாச பந்தங்களையும் துடைத்தெறியும் பணத்தின் வலிமையை உணர்த்தியபடி அந்தப் பண நோட்டுகள் அவள் அருகில் ஆணவத்துடன் வீற்றிருந்தன.

❀ ❀ ❀

பகல் உணவை முடித்துக் கொண்டு சிறு துயிலில் சோபாவில் சாய்ந்திருந்தார் பெரியசாமிக்கவுண்டர். தோட்டத்து மரங்களில் இடைவிடாது குரல் கொடுக்கும் பறவைகள், அணில்களின் ஒலியைத் தவிர பங்களா

## உவமைநயம்!



ஏணி! ஏணியோய்!!

அமைதியில் ஆழ்ந்திருந்தது. மாதர் சங்க ஆண்டுவிழா வேலைகளுக்கென காலையிலேயே புறப்பட்டுப் போன வீட்டு எஜமானி நண்பகல் ஆகியும் வீடு திரும்பவில்லை. ஆண்டுத் தேர்வுக்காகப் படித்துக் கொண்டிருந்த மகனையும் சமையற்காரரையும் தவிர இதர பணியாட்களும் பகல் உறக்கத்தில் இருந்தனர்.

'அப்பா... திருடன்... திருடன். சீக்கிரமா ஓடியாங்க எல்லோரும்.' தமது அறைக்கு வெளியே எழுந்த கூக்குரலில் திடுக்கிட்டுக் கண்விழித்தார் பெரியசாமி. தற்காப்புக்கென படுக்கையடியில் வைத்திருக்கும் ரிவால்வருடன் வெளியே ஓடி வந்தார்.

சில பணியாட்களின் முரட்டுப் பிடியில் அமைதி தவழ நிற்கும் அந்தத் திருடனை உற்று நோக்கினார். வலது காலின் கீழ் பாதம் சுருங்கிக் கூம்பியிருந்தது. உட

னும் உள்ளமும் ஒருங்கே பதைத்தது அவருக்கு.

'அவன் திருடனில்லை. தயவு செய்து விட்டுவிடுங்கள்.'

எஜமானர் பலமுறை இரைந்து கத்தியதில் வியப்படைந்து பிடியைத் தளரவிட்டனர் பணியாட்கள்.

'உங்கள் அறைப் பக்கமாக நூறு ரூபாய் நோட்டுகளுடன் கம்பி நீட்டியிருப்பான் அப்பா இவன். பகற் கொள்ளைக்குத் துணிந்து வந்திருக்கிறான். போனில் போலீஸ் ஸ்டேஷனை அழைக்கிறேன்.'

பெரியசாமியின் செல்வப் புதல்வன் கோபம் கொந்தளிக்க முறைத்துப் பார்த்தான் செங்கோடனை.

'அப்படியெல்லாம் நினைச்சு, கோபப்படாதே தம்பி. இதுங்களை அந்த ரூமிலே வைக்கத்தான் வீடு தேடி வந்தேன். எனக்கு இதெல்லாம் லட்சியமில்லை. உன் அப்பாருக்கு அது தெரியும். புன்சிரிப்புடன் மொழிந்த செங்கோடன் காலை விந்திவிந்தி நடந்து பெரியசாமியின் அறைக்குள்ளே விரைந்தான். செயலற்று அனைவரும் வியப்பில் சிலையாகினர். சில விநாடிகளில் திரும்பி எவரையுமே ஏறெடுத்தும் பாராமல் மாடிப்படியில் இறங்க முயன்றான் செங்கோடன். பாய்ந்து பிடிக்க அவனை சூழ்ந்தனர் பெரியசாமியின் பணியாட்கள். ஆனால் 'அவனை விட்டுவிடுங்கள் அவன் போகட்டும்' என்ற எஜமானரின் கம்மி உடைந்த குரல் அவர்களைத் தடை செய்தது.

தமது அறையின் உள்ளே விரைந்தார் பெரியசாமி. அகன்ற மேஜையின் கண்ணாடிப் பரப்பில் அவர் அன்று பச்சையம்மாவின் அருகில் வைத்த பச்சை நோட்டுகள் கட்டுப்பிரியாமல் காட்சி அளித்தன. அதற்கும் மேலே சிறிய காகிதம் ஒன்று மடித்து வைக்கப்பட்டு மின்விசிறிக் காற்றில் படபடத்தது. நடுங்கும் கரங்களுடன் காகிதத்தைப் பிரித்தார். அது கடிதமாகத் தோன்றவில்லை அவருக்கு. அதில் செங்கோடன் அவர் எதிரில் நின்று செந்தழல் வீசும் கண்களுடன் பேசினான்.

மதிப்பு மிகுந்த பெரியசாமிக் கவுண்டர் அவர்களுக்கு ஏழை நெறிக்காரச் செங்கோடன் எழுதிக்கொண்டது.

பணம் திரட்டிக் குடும்பத்தைக் காக்கக் கடமையின் பிடியில் கடல் கடந்து சென்ற தந்தை வாழ்வு அங்கேயே முடிந்துவிட்டதாக இதுகாறும் எண்ணி, அந்தத் தந்தையின் மேல் அளவற்ற பாசமும் மதிப்பும் வைத்து என் இதயத்திலே பூசித்து வந்தேன். ஆனால் என் இதயத்திற்கு அளவற்ற வேதனை தரும் ஏமாற்றத்தைக் கடவுள் அளித்துவிட்டதை அறிந்தபோது நான் உங்கள் நிலைமைக்காக அனுதாபப்படுகிறேன். உங்கள் மதிப்புக்கு ஊறு செய்துகொண்டு இந்த மண்ணில் தங்குவதாக இனி எண்ணமில்லை. பல தலைமுறைகளாகப் பிறந்து வளர்ந்து இந்த மண்ணிலேயே மறைந்தும் வந்த இந்தக் கொங்கு நாட்டைப் பிரிந்து நாங்கள் தொலைதூரத்திற்குப் புறப்படுகிறோம். என் ஏழைத் தாயாரை வட கோயமுத்தூர் ரயில் நிலையத்தில் அமர்த்திவிட்டுத்தான் நான் இங்கு வந்தேன். ஒரு கால் முடமாகிப் போனாலும் உழைக்க வலிவான கரங்களும் வைரம் பாய்ந்த உடலிலே ஒரு துளி உதிரமும் இருக்கும்வரையில் என்னைப் பெற்றவளை நான் காப்பாற்றிவிடுவேன். அதற்குப் பண நோட்டு தேவையில்லை. கடமையுணர்ச்சியும், உழைப்பும், நெஞ்சுக் கனிவும் போதும். உங்களிடம் நானும் ஒன்று கடைசியாக வேண்டிக்கொள்கிறேன். பாசத்திற்கு ஈடு பணமல்ல. இதை அறிந்து நீங்கள் வாழுங்கள். பழனியாண்டவன் உங்களை மேலும் மேலும் நல்ல நிலையில் வை[illegible]து உடல் திடத்தையும், நீண்ட ஆயுளையும் அளிக்க வேண்டும் என நானும் என் தாயாரும் மனதார வேண்டுகிறோம்.

ஏழைச் செங்கோடன்.

கண்கள் நீர்க் குளமாயின பெரியசாமிக்கு. புதையுண்டு கிடந்த பாசம் பீறிட்டெழுந்து உலுக்கி எடுத்தது அவரை. மாடியிலிருந்து வெறிகொண்டவர் போலக் கீழே இறங்கி ஓடினார் அவர். மூச்சிரைக்க ஓடிவந்த அவருக்கு அந்த நெடுஞ்சாலையின் முனையில் சிறு புள்ளியாக மறைந்துகொண்டிருந்த செங்கோடனின் உருவம் நீர் நிறைந்த விழிகளிடையே மங்கலாகத் தெரிந்தது. நெஞ்சினுள் ஏதோ ஒன்று முளைத்து அவரை வாயிற்புறக் கதவுகளிலேயே தடுத்து நிறுத்தியது. கால்கள் தடுமாற, நெஞ்சின் வேதனைச் சுமை தாளாது. உடல் தள்ளாட, மீண்டும் மாடியறையில் நுழைந்த அவர் திடுக்கிட்டு நின்றார்.

மடித்து வைக்கக்கூடத் தோன்றாமல் பிரித்துப் போட்டுவிட்ட அந்தக் கடிதத்தை ஊன்றிப் படித்து முடித்த அவர் மகன் நிமிர்ந்து நோக்கினான் தந்தையை. பொருள் பொதிந்த ஏளனம் மிதந்த அந்தச் சிறுவனின் பார்வையைக் காண வெட்கி கண்ணீர் கோடிட்ட முகத்துடன் தலைகுனிந்தார் அந்தப் பெரிய மனிதர்.



# ஏமாந்து போகலாமா?



மேலமாசி வீதி முடிந்து தெற்கு மாசி வீதி ஆரம்பமாகும் சந்திப்பு முனை; பாதைத் திருப்பத்தில் இருந்த முதற் கடையே அதுதான்— 'பேமஸ் பேன்ஸி டிரஸ்ஸர்ஸ்!'

தனது அழுக்கேறிய ஆடைகளைக் கழற்றி எறிந்துவிட்டு 'வாடகைத் துணிகளை எடுத்து உடுத்தி அலங்கரித்துக்கொண்ட பிற்பாடு ஸ்ரீமான் சிவப்பிரகாசம் முன்னாலிருந்த நிலைக் கண்ணாடியில் கம்பீரத் தோற்றம் தந்தான்! ஒரு அலட்சியக் கனைப்போடு கழுத்துக் காலர் பட்டையைச் சுற்றியிறுக்கிய 'நெக்போ'வைச் சரிசெய்து கொண்டான். நெற்றி மேட்டிலே புருவம் ஏறி நின்று வளைந்தது, கீழுதட்டில் விஷமச் சிரிப்பு லேசாக நெளிந்தது.

சிவப்பிரகாசம் உள்ளே நுழைந்தபோது முகம் சுளித்து வரவேற்ற கடைச் சிப்பந்திகள், அவன் எடுப்பாக வெளியேறிய போது ஒருவித முகமாறுதலும் காட்டினார்களில்லை. தினம் அவர்களுக்கு சலித்துப்போன காட்சி நகலாகும், அது! தெருப் பிச்சைக்காரனும் வரும்படிச் சில்லரை அதிகமாகக் கிடைத்த ஒரு நாளில் வாடகைத் துணிக்குள் புகுந்து குபேர சம்பத்துக் கிடைத்தாற்போல் ஒரு முழு சிகரெட்டைப் புகைத்து அனுபவிப்பதைப் பார்த்துப் பழகிய கண்களுக்கு இது எம்மாத்திரம்? ஆனால் வெளி வாசலை அணுகியதும் வெகு அலட்சியமாக ஒரு பத்து ரூபாய்த் தாளை எடுத்துக் காஷியரிடம் விட்டெறிந்தது கண்டு சிவப்பிரகாசத்தை அகல விரித்த கண்களால் அளந்துவிட முயற்சி எடுத்துக்கொண்டனர், கடைச் சிப்பந்திகள்.



அநாயாசமாக ஒரு முறை உடலைச் சிலிர்த்துவிட்டுக்கொண்டே ரசீதைப் பெற்றுக்கொண்டு வெளியேறினான் சிவப்பிரகாசம்.

விளக்குத் தூண், நாற்சந்தி கூடும் ஓர் இடத்தில் நாலாபுறமும் விழிகளை ஓட்டியவாறு நின்றிருந்தாள், நீலா! சிவப்பிரகாசம் அவள் அருகே வந்து உரசி நின்றான். இருவருமாக 'பத்துத்தூண் சந்து' வழியாகத் திருமலை நாயக்கர் மஹால் நோக்கி நடந்தனர். நாயக்கர் மகாலின் பின் வாயில் மூடிக் கிடந்தது. சுற்றுப்புறச் சூழ்நிலையில் மனித நடமாட்டமே சிறிதும் இல்லாத அந்த இடத்தில் இருவரும் நின்றனர். அரும்பி நின்ற முகத்து வேர்வைத் துளிகளை கைக்குட்டையால் துடைத்து விட்டுக் கொண்டான் சிவப்பிரகாசம். கழுத்திலிருந்த தனது மாலையைக் கழற்றி அவன் விரித்த கைக்குட்டையில் நடுங்கும் கரங்களால் வைத்தாள், நீலா. அவளது கண்ணொளி அவன் நெஞ்சை ஊடுருவிக் கெஞ்சியது. அவன் அலட்சியபாவத்துடன் நின்றிருந்தான்.

'சிவம்! ஏமாந்து விடாதீர்கள்; என்னை ஏமாற்றியும் விடாதீர்கள்!' என்று கம்மிய குரலில் பேசினாள். 'உங்களை நான் நம்புகிறேன்; என்னை நம்பியவர்களுக்கு நான் மோசம் செய்ததும் கிடையாது!'

தன் கையிலிருக்கும் 'ஹாண்ட் பேக்'கிலிருந்து நான்கைந்து பத்து ரூபாய்த் தாள்களை எடுத்து நீட்டினாள், நீலா.

'திரும்பியதும், நேராக உன் அறைக்கே வந்து விடட்டுமா?'— குறுகுறுத்த நெஞ்சில் எழும்பியது குறும்புக் கேள்வி!

'வேண்டாம்! அங்கு வரவேண்டாம். அந்த வட்டாரத்தில் எனக்கிருக்கும் நற்பெயரைக் கெடுத்துக்கொள்ள நான் விரும்பவில்லை!' என்று பதறிப்போய்க் கூறினாள், அவள். நாளை மாலை ஐந்து மணி சுமாருக்குத் தெப்பக்குளத்தில் காத்திருக்கிறேன்.'

'சரி, நான் வருகிறேன்!'

இருவருமே இரு எதிர்த்திசைகளில் திரும்பிப் பாராமலேயே பிரிந்து விரைந்தனர்.

ஃ ஃ ஃ

தெற்காவணி மூல வீதி கண்ணைப் பறித்தது. பாதையின் இருமருங்கிலும் இருந்த நகைக் கடைகள் ஒளி உமிழ்ந்தன.

ப. வே. அண்டு சன்ஸ் கடையில் 'பழனிவேல்' செட்டியார் சாம்பிராணிப் புகை கிளப்பிக் கொண்டிருந்தார். சுற்றியுள்ள மற்ற கடைகளுக்கும் அவரது கடைக்கும் நிறைய வித்தியாசம்— வேறுபாடு! இங்கே 'ஈடு' கொடுக்கப்படும் என்ற விளம்பரப் பலகையும் தொங்கியது. ஆனால் இதுநாள்வரை அவரிடம் 'அடகு' வைத்த அனைவரால் ஒருவருமே அதைத் திருப்பிக்கொள்ள வந்ததில்லை! இதனால் அவரது உண்மைத் திருநாமம் மறைந்து பழனிவேலை செட்டியார் என்றே அழைக்கப்படலானார். அவர் பெயரைக் குறிப்பிட்டாலே, 'சே! அந்த மனிதரா? மொட்டை அடித்து விடுவாரே?' என்றுதான் பதில் பிறக்கும்.

செட்டியாருக்கு அன்று கொஞ்சம் வரும்படி அதிகம்; அதனால் மனம் நிறைந்திருந்தார். அன்றைய 'தினப் பல'னில்கூட அவரது துலா ராசிக்கு 'எதிர்

'கோட்டும், சூட்சுமாக சிவப்பிரகாசம் அவர் முன் நின்று ஒரு கனைப்பு எழுப்பினான். 'என்ன வேண்டும்' என்பது போல் கூர்மையாகப் பார்த்தார் பழனிவேலை. சிவப்பிரகாசம் அவரை நெருங்கிச் சென்று தாழ்ந்த குரலில் பேசினான்:

'என்னிடம் ஒரு திட்டம் இருக்கிறது. அதை ஆரம்பித்தால் ஒரே மாதத்தில் பல லட்சம் சம்பாதிக்கலாம்— ஆறே மாதங்களில் நூறு லட்சம் புரட்டலாம்!'

பழனிவேலைக்குப் புரியவில்லை; இருந்தாலும் கேட்பதற்கு ஆசையாக இருந்தது!

'என்ன சொல்லுகிறீர்கள்?'

'இப்போது எனக்குப் பணமுடை; நீங்கள் என்னை வேலைக்கு வைத்துக்கொண்டால் சரி பாதிப் பங்கு தருகிறேன்' என்றான் சிவப்பிரகாசம்.

'இங்கு வேலை காலி இல்லை; இருந்தாலும் உமது திட்டத்திற்காக எவ்வளவு சம்பளம் கேட்கிறீர்கள்?'— பழனிவேலையின் நாக்கில் பணநீர் சுரந்தது.

'கொஞ்சம்தான்; மாதம் ஐநூறு ரூபாய் தந்தால் போதும்.'

'ஆ!' அவர் வாய் தானாகத் திறந்து பிளந்தது; நல்லவேளை, நின்ற மூச்சு வந்துவிட்டது. 'என்னிடம் வேலை இல்லை; நீங்கள் போகலாம், தம்பி. ம்,... ஐநூற்றை ஐம்பதாக்கிக் கேளுங்கள்— ஒரு வேளை, பார்க்கலாம்!'

சிவப்பிரகாசம் கேலியாகச் சிரித்தான். 'என் திட்டம் அமுலானால் ஐநூறு லட்சம் தேறுமே! என் போதாத காலம்; எனது அவசரத் தேவைக்கு உங்களை நாடவேண்டியிருக்கிறது.



தேன்?' என்று தமக்குள் எண்ணிக்கொண்டார் பழனிவேலை.

சிவப்பிரகாசம் சிறிது நேரம் யோசித்தான். 'சரி, இதைப் பாருங்கள்!' என்று பையிலிருந்து ஒரு மாலையை எடுத்து நீட்டினான். 'இதை வைத்துக்கொண்டு முடிந்த அளவுக்கு அதிகப் பணம் தாருங்கள். இன்னும் ஒரே மாதத்தில் வட்டியும் முதலுமாகச் சேர்த்து தந்துவிடுவேன்.'

பழனிவேலை, வேலையில் முழுமூரமானார். அது ஒரு விலையுயர்ந்த தங்க நெக்லஸ்; சுற்றிலும் அழகாக இணைத்திருக்கும் வெண்முத்துக்கள்! தேய்க்க வேண்டியதில் தேய்த்து, உரசி நுகர்ந்து பார்த்து அதன் முழுத் தன்மையையும் ஆராய்ந்தார், பழனிவேலை. 'டால்'டிக்கும் அந்த நெக்லஸைவிட ஒரு பிடி அதிகமாகவே பிரகாசித்தது அவர் முகம்.

'ஐநூறு ரூபாய் தரட்டுமா?'

சிவப்பிரகாசத்திற்கு நெற்றிக்கண் இல்லை! ஆத்திரத்தோடு அவர் கையிலிருந்த மாலையைப் பிடுங்கிக்கொண்டான்.

'விளையாடுகிறீர்களா? எனக்கு இரண்டாயிரம் ரூபாய் தேவை! நாயக்கர் காலத்து மாலை, ஐயா. விலையுயர்ந்த இந்தநகை குறைந்தது ஆறேழு ஆயிரம் பெறும் என்று நீங்கள் அறிவீர்கள். இருந்தும் வாய்கூசாமல் பேசுகிறீர்களே! ஒரே மாதத்தில் திருப்பி விடுவேன். 'சிவப்பிரகாசத்தின் பேச்சில் படபடப்பு இருந்தாலும் இரைந்து பேசவில்லை. 'என்மனைவியின் கடைசி நகை, ஐயா! இறந்துவிட்ட அவள் நினைவுக்கு இது ஒன்றுதான் இருக்கிறது. இல்லாவிட்

டால் எனது இப்போதைய நிலைக்கு விற்றே இருப்பேன்.'

'சரி, இரண்டாயிரமே தருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை!' பழனிவேலை சற்று தயங்கினார். அப்புறம் சற்று அழுத்தமாகவே கேட்டார். 'ஒரே மாதத்தில் நகையைத் திருப்பாவிட்டால் பொருள் எனக்குச் சொந்தமாகிவிடும். சம்மதமா?'

அவர் நம்பிக்கை வீண் போகவில்லை. சிவப்பிரகாசம் விநாடி



நேர நெற்றிச் சுருக்க நினைவிற்கப்புறம், துணிந்து ஒப்புக்கொண்டான். அதே நேரத்தில் அவன் மூளையில் ஒரு முன்னணி இரட்டிப்புத் திட்டம் உருவாகி ஒளி வீசியது; உடலே சிலிர்த்தது!

'சரசர'வென்று, பத்திரக் காகிதமிரண்டில் நறுக்குத் தெறித்தாற்போல் நான்கு வரி ஒப்பந்தம் எழுதப்பட்டது—

'சிவப்பிரகாசத்திற்குச் சொந்தமானதும், பதினைந்து முத்துக்களைக் கொண்டதுமான சுமார் ஏழாயிரம் பெறுமானமுள்ள தங்க நெக்லஸ் பழனிவேலைச் செட்டியாரிடம் ரூபாய் இரண்டாயிரத்திற்கு மட்டும் அடகு வைக்கப்படுகிறது. மேற்படி நகையை இன்றிலிருந்து ஒரே மாதத்திற்குள் வட்டியோடு திருப்பிக்கொள்ளாவிட்டால் நகை பழனிவேலைக்குச் சொந்தமாகும்.'

—இரண்டு பத்திரங்களிலும் பழனிவேலும், சிவப்பிரகாசமும், சாட்சியாக கடைச் சிப்பந்தி இருவரும் கையெழுத்திட்டனர். பேரம் முடிந்தது. பணமும், பொருளும் கைமாறின. நீர் தளும்பிய கண்களைக் கைக்குட்டையால் ஒற்றிக்கொண்டு விரைந்து வெளியேறினான் சிவப்பிரகாசம்.

ஐந்து நிமிட கால வித்தியாசம் கடந்த பிற்பாடு திடீரென்று கடைச் சிப்பந்தியொருவனின் பெயர் கூறிக் கூச்சலிட்டார், ப. வே. அவர் விழிகள் சிவந்து, நீரில் மிதந்தன. பதட்டத்தால் கை கால்கள் நடுங்கின. தலையில் கை வைத்தவாறே தரையில்

அமர்ந்து ஒப்பாரி வைத்துப் பாட ஆரம்பித்து விட்டார்!

'ஓடிப்போய் அந்த ஆளை மடக்கப் பாருங்கடா, பயல் என்னையே மொட்டை அடிச்சுட்டான். கண்ணுலே மண்ணைத் தூவிட்டாண்டா, மண்ணை!' என்றலறினார். பாபம் அவர் கையிலிருந்த முத்துமாலை அவரைப் பார்த்துப் பரிகசித்தது. 'மாலையை மாத்தி ஏமாத்திட்டானே; பேச்சு சுவாரஸ்யத்திலே 'ஒரிஜனலை' மறைச்சிக்கிட்டு 'டூப்ளிகேட்'டைத் தள்ளிட்டானே. என் துட்டுக்கு மண்டை இடி. போச்சே ரெண்டாயிரம்!'

பழனிவேலையின் புலம்பல் ஓயவில்லை; சிப்பந்திகளின் கண்களுக்கு சிவப்பிரகாசம் தென்படவுமில்லை!

ஃ ஃ ஃ

மறுநாள் மாலை; மாரியம்மன் தெப்பக்குளம்!

'நாலாம் நம்பர் டவுன் பஸ்ஸிலிருந்து சிவப்பிரகாசம் இறங்க மாட்டானா' என்று எதிர்பார்த்துக் காத்து நின்றாள், நீலா. குறிப்பிட்ட நேரத்தில் அவனும் வந்து சேர்ந்தான். இருவரும் வைகைக் கரை நோக்கி நடந்தனர். அங்கே மணற் பரப்பில் குளிர்ந்த இடமாகப் பார்த்து அமர்ந்தனர்.

அடக்கி வைத்த ஆர்வமெல்லாம் ஒன்று சேர, 'என்ன சிவம்! காயா, பழமா?' என்று ஆசையோடு கேட்டாள், நீலா.

பையிலிருந்த 'கரன்ஸி' கற்றையை எடுத்துக்கொடுத்து, 'உன் வேலை என்னவோ பழுத்துவிட்டது; அதே நேரத்தில் என் கண்ணிற்கும் ஒரு காய் தென்பட்டிருக்கிறது. அதைத் தடிகொண்டடித்து கன்னிப்போக வைத்தாவது பழுக்க வைக்கப்போகிறேன்! உனக்கும் பங்கு வைத்திருக்கிறேன்; அதில் சிரமமும் அதிகமில்லை' என்று தன் அடுத்த திட்டம் முழுதையும் விளக்கினான் சிவப்பிரகாசம்.

நீலாவின் கருநீல விழிகள் அகல விரிந்தன'

ஃ ஃ ஃ

நீலநிற நைலான் சாரி நழுவி விழ, வாடாமல்லி கலரில் சோளிகை ரவிக்கை மேலுடலை இறுக்கித் தழுவ, தலை நிறைய மல்லிகைச் சரம் மணம் வீச பழனிவேலைச் செட்டியாரின் கடைக்குள் நீலா நுழைந்தபோது கடைக்கே ஒரு தனி உற்சாகம் வந்துவிட்டது— ஆமாம்!

தன்னிடமிருந்த விலையுயர்ந்த நகைகள் எல்லாம் எடுத்துக் கடைபரப்பி விட்டார், பழனிவேலை. ஒவ்வொரு நகையின் விலை கூறப்படும்போதும், நீலாவின் 'லிப்ஸ்டிக்' அதரத்தில் நெளியும் உதாசீன முறுவலையும், ஏறி இறங்கும் புருவக் கீறலையும், நாணி மறையும் முகப் பொலிவையுமே காணப் பறந்தார், பழனிவேலை!

'இத்தனை நகைக் கடைகளையும் விட்டுவிட்டு இங்கு வந்திருக்கிறேன். வருத்தப்படக் கூடாது! என் தங்கை மிகவும் சிறியவள்— கவனக்குறைவு மிகுந்தவள். அவளுக்குப் பிறந்த நாள் பரிசு தர விரும்புகிறேன். நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள். நகை பார்வைக்கு மட்டும் அழகாக இருந்தால் போதும்!'

ஏதோ புருவ அசைவிலேயே புரிந்து விட்டவர்போல் கருத்துத் தடித்த உதடுகளைக் குவித்தார், பழனிவேலை—

'ஓ!'



கடைச் சிப்பந்தி ஒருவனை அழைத்து விரித்த நகைகளை எல்லாம் பத்திரப்படுத்தும்படி கூறினார். கண்ணாடி பீரோவிலிருந்து சில நகைப் பெட்டிகளை எடுத்து வைத்தார்.

நீலாவின் முகத்தில் முழு நிலா காய்ந்தது!

'பார்த்தால் நிஜமான முத்து மாலைபோல் தோன்றுகிறதல்லவா? ஹூம்; இதனிடம் ஏமாந்ததற்கு இரண்டாயிரம் தண்டம்! என்ன செய்வது? பிடித்திருந்தால் எடுங்கள்—எண்பதே ரூபாய்கள் போதும்!' என்றார் பழனிவேலை. அந்த மாலை தொலைந்தாலே போதுமென்று நினைத்தார். நிம்மதியாவது மிஞ்சுமல்லவா?

நீலா அதன் விலையைக் குறைக்கக் கூறியே கேட்கவில்லை! அவளுக்குத்தான் அது பிடித்துவிட்டதே? நீலா எடுத்து நீட்டிய எண்பது ரூபாய்த் தாள்களைக் கண்களில் ஒற்றிக் கொண்டார், பழனிவேலை செட்டியார்.

ஃ ஃ ஃ

பழனிவேலையின் பழைய வேலை மாமூலாகவே முன்னேறியது. அவ்வப்போதுதான் ஏமாந்து போனதை நினைத்து முகம் வருந்தினாலும், பெரும் வரும்படியும், 'தரும் வெறும் அடி'யும் எண்ணி மனத்தைத் தேற்றிக் கொள்வார்.

ஆனால்—

பத்திரத்தில் கண்டபடி குறிப்பிட்ட மாத இறுதி நாளில் மீண்டும் அவர் முன் சிவப்பிரகாசம் 'வட்டியும் முதலும்' நீட்டி நின்று 'நகை' கேட்டபோது? அவர் முகத்தில் 'எள்' எண்ணெயாகி வழிந்தது! கடைச் சிப்பந்தியை அனுப்பிக் கையோடு தன் வக்கீலை வரவழைத்தார்.

ஆத்திரத்தால் பதறித் துடித்தார், பழனிவேலை. புகையை இழுத்து அவர் முகத்தில் ஊதி, சிகரெட் நுனியால் நீறு பூத்துக் கிடந்த சாம்பலை அலட்சியமாகத் தட்டிவிட்டுக் கொண்டான், சிவப்பிரகாசம்! பத்திரத்தையும்— படித்த சட்டத்தையும் ஓட்டி உரசி மூளையைப் புரட்டிப் பார்த்தார், வக்கீல். வழி ஒன்றும் அவருக்குப் புலனாகவில்லை. சிவப்பிரகாசத்தை நெருங்கி நயமாகப் பேச ஆரம்பித்தார்.

---



கணவன்:—என் மணி பர்ஸைக் காணலியே எங்கே வச்சேனு ஞாபக மில்லையே.

மனைவி:—ஆறுனும் உங்களுக்கு ஞாபக மறதி அதிகம் காலையிலே நீங்க ஆபீஸ் போனப்பறம் வீட்டைப் பெருக்கினேன். மணிபர்ஸ் டேபிள் கீழே விழுந்து கிடந்தது.

கணவன்:—நீ எடுத்து வச்சிருக்கியா?

மனைவி:—அப்ப எடுத்துவச்சேன், அதை ஆறு எங்கே வச்சேன்னு இப்போ ஞாபகம் வரமாட்டேங்குது.

அமைதியாக இருந்த சிவம், ஆத்திரத்தோடு எகிறிக் குதித்தான்—

'என்ன நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? மான நஷ்ட வழக்கொன்றையும் தொடரக் கூறுகிறீர்களா?' என்று போட்டான் ஒரு வேட்டு. வக்கீல் வாயடைத்துப் போனார். 'பேசாமல் பணத்தைப் பெற்றுக்கொண்டு என் நகையைத் தருப்பி விடுங்கள். பிறகு நான் பொல்லாதவனாகி விடுவேன்; போலீசாரைக் கூப்பிடுவேன்!'

சிவப்பிரகாசத்தின் சினம் அடக்கப் பகீரதப் பிரயத்னம் எடுத்துக்கொண்டார், வக்கீல். 'வேண்டாம், மெள்ளப் பேசுங்கள் ஸார்! நாலு பேர் கூடினால் நம் எல்லோரையுமே ஒரு விதமாக நினைத்து விடுவார்கள், பாருங்கள்.'

வக்கீல், செட்டியாரை நோக்கினார்—

'ஏனய்யா, பழனிவேலே! என்னிடமே காட்டுகிறீரே உமது வேலையை? எங்கேய்யா, அந்த உண்மை நகை? பத்திரத்தில் கண்டபடி பேசாமல் நடந்து கொள்ளும்!'— தனது வக்கீல் எதிரிக்கு வக்காலத்து வாங்குவது கண்டு சிலையானார், செட்டியார்.

'உண்மை நகை என்ன, அவன் தந்துவிட்டுப் போன 'கில்ட் நகை'கூட என்னைக் கட்டிப் போட்டடித்தாலும் இப்போது என்னிடம் கிடையாது, ஆமாம்!

'ஏனாம்? அவன் சும்மா போவானா?'

'ஏன் போகணும்? போட்ட திட்டம் குட்டி மேல் குட்டி போட்டு எட்டி நடக்கிறதே!'

'என்ன ஓய்! இலக்கியம் பேசுறீர்? கொஞ்சம் புரிபடத்தான் பேசுமேன்?'

'இது வேறே வயித்தெரிச்சல். இன்னுமென்ன 'குசுகுசு' வேண்டிக்கிடக்கிறது? அந்த கல்ட் நகையை வித்துட்டேன்!'

'அவனுக் கென்ன வழி?'

'என் தலை வதி!'

இரு தரப்பு நடுவே நின்று சமரசம் ஏற்படுத்தினார் வக்கீல். பத்திரத்தில் கண்டிருந்தபடி சிவப்பிரகாசத்திற்கு அடகு வைத்த நகைக்குப் பதிலாக ஏழாயிரம் ரூபாயைக் கொடுத்தார், பழனிவேலை. சிவப்பிரகாசமும் வேண்டா வெறுப்புடன் பெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

'ஐயா, லட்சத் திட்டம்! அன்னிக்கு வேலை வேணுமின்னியளே...?' என்ற கேள்வி எழுப்பினார் பழனிவேலை.

'ஐநூறு ரூபாய் தர்றேன், பாக்குறீயளா?'

'சிவப்பிரகாசம் சிரித்தான், எனக்கு இப்போது வேலை தேவை இல்லை. என் திட்டம் வெகுவாக அமுலாகிக்கொண்டிருக்கிறது' என்று கண்ணைச் சிமிட்டினான்.

'அமுலாகிறதைத்தான் நானே அனுபவிக்கறேனே!' என்று வயிற்றெரிச்சல் பட்டார், பழனிவேலை.

இதுவரை சிறிது சிறிதாக ஊரை மொட்டையடித்த பழனிவேலையிடம் தன் வேலையைக் காட்டி மொத்தமாக மொட்டையடித்தான் சிவப்பிரகாசம். சிறு மீனை வாளை மீன் விழுங்கினால் அதை விழுங்கச் சுறா மீனையும் படைத்துவிட்டிருக்கிறானே ஆண்டவன்?






சேங்காலிபுரம் அனந்தராமதீக்ஷிதர்

முப்பத்து நான்காவது தசகம்

### 4. ஸ்ரீராமபட்டாபிஷேகம் தடுத்தல்

आरुन्धाने रुषाऽन्धे भृगुकुलतिलके
संक्रमय्य स्वतेजो
याते यातोऽस्य योध्यां
सुखमिह निवसन् कान्तया
कान्तमूर्ते ।
शत्रुघ्नेनैकदाऽथो गतवति भरते
मातुलस्याधि
वासं तातारब्धोऽभिषेकस्तव किल
विहतः केकयाधीशपुत्र्या ॥

ஆருந்தானே ருஷாऽந்தே ப்ருகு
குலதிலகே ஸங்க்ரமய்யஸ்வதேஜோ
யாதேயாதோऽஸ்ய யோத்யாம்
ஸுகமிஹ நிவஸன் காந்தயாகாந்த
மூர்த்தே
சத்ருக்னேனைகதாऽதோ கதவதி
பரதே மாதுலஸ்
யாதிவாஸம், தாதாரப்தோऽபிஷேக
ஸ்தவகிலவிஹத: கேகயாதீசபுத்ர்யா

பதவுரை:— ப்ருகுகுலதிலகே—ப்ருகு வம்சத்திற்குத் திலகம்போன்ற பரசுராமர், ருஷா அந்தே—கோபத்தால் கலங்கி, ஆருந்தானே—வழிமறித்த பொழுது, ஸ்வதேஜ:—தன் தேஜஸை, ஸங்க்ரமய்ய—தங்களிடத்தில் சேர்ப்பித்து, யாதே—சென்றபோது, அயோத்யாம்—அயோத்யா நகரத்தை, யதோ ஸி—அடைந்தீர், காந்த மூர்த்தே—அழகிய ரூபத்தை உடைய பகவான், இஹ—அங்கு, காந்தயா—ஸீதையுடன், ஸுகம்—ஸுகமாக, நிவஸன்—வஸித்தீர், அதோ—பிறகு, ஏகதா—ஒரு ஸமயம், பரதே—பரதன், சத்ருக்னேன—சத்ருக்னனோடு, மாதுலஸ்ய—மாமாவினுடைய, அதிவாஸம்—இருப்பிடத்தை, கதவதி—அடைந்திருக்கையில், தாதாரப்த:—தந்தையால் ஆரம்பிக்கப்பட்ட, தவ—உம்முடைய, அபிஷேக:—பட்டாபிஷேகம், கேகயாதீசபுத்ர்யா—கைகேயியினால், விஹத: கில—தடுக்கப்பட்டதல்லவா?

கருத்துரை:—ஓ குருவாயூரப்பா! ப்ருகுவம்சத்தின் தலைவரான பரசுராமர் கோபம் கொண்டு தங்கள் மார்க்கத்தைத் தடுத்துவிட்டார். மேலும் தன் தேஜஸையும் தங்களிடம் சேர்த்துச் சென்றார். பிறகு தாங்களும் அயோத்திக்குச் சென்றீர்களே. ஹே பகவன்! அங்கு தாங்கள் மனைவியான ஸீதையுடன் ஸுகமாக வஸித்து வந்தீர்கள்.

ஒரு ஸமயம் பரதன் சத்ருக்னனுடன் மாமாவின் வீட்டிற்குச் சென்றிருக்கையில் தந்தையினால் ஆரம்பிக்கப்பட்ட தங்களுடைய பட்டாபிஷேகமானது கைகேயியினால் தடுக்கப்பட்டதாமே என நம்பூதிரி கேட்க, ஸ்ரீ குருவாயூரப்பனும் 'ஆம்' என்று சொல்லி தலையை அசைத்து அங்கீகாரம் செய்தாராம்.

விளக்கவுரை:—பரசுராமர் மிகுந்த தபஸ் சக்தி வாய்ந்தவர். அதோடு பகவதம்சமும் பொருந்தியவர். அதனால் ப்ருகுமுனியின் குலத்திற்கே திலகம் போன்றவர். இப்படிப்பட்ட முனிவர் மிகுந்த கோபத்துடன் ஸ்ரீ ராமனையும் நடுவழியில் மறித்துத் தடுத்தார். இவ்வாறு ஸ்ரீராமனிடத்தில் த்வேஷ மனப்பான்மை தெய்வாம்சம் பொருந்திய பரசுராமருக்கு ஏற்பட்டிருக்குமா? அப்படியிருந்தால் அது பொருந்துமா? உலகில் உள்ள அவிவேகிகளான மனிதர்களுக்கு சண்டையிட்டதுபோல் தோன்றிற்று. ஆனால் அப்படியில்லை. ராவணவதத்திற்காக தன்னிடமுள்ள வைஷ்ணவமான தேஜஸை ஸ்ரீ ராமரிடம் பரசுராமர் கொடுப்பதற்காகவேயாகும். இதையே நம்பூதிரி संक्रामय्य स्वतेजः

(ஸங்க்ரமய்யஸ்வதேஜ:)

என்றதால் வெளியிட்டிருக்கிறார். உலகிற்கு அவதார ரஹஸ்யத்தை ஸ்தூலமாகக் காண்பிக்காமல் இம்மாதிரி சண்டையிட்டதுபோல் உலகிற்குக் காட்டித் தேஜஸை ஸ்ரீ ராமரிடம் சேர்ப்பித்ததாகப் பக்தர்கள் உணரவேண்டும். பிறகு ஸ்ரீராமன் அயோத்தி சென்றான். அங்கு அளவுகடந்த அன்பு வாய்ந்த ஸீதாதேவியுடன் அழகிய உருவம் வாய்ந்த ஸ்ரீராமன் திவ்ய போகங்களை அனுபவித்தான். இங்கு நம்பூதிரி सुखमिहनिवसन् कान्तया कान्तमूते (ஸுகமிஹநிவஸன் காந்தயா காந்த மூர்த்தே) என்று 'வைகுண்டத்திலிருக்கும் பகவான் இங்கு சுகமாக இருக்கிறார்' என்று சொன்னதால் வைகுண்டத்தைக் காட்டிலும் இங்கு சுகமாக வஸித்து வந்ததாகத் தெரிகிறது. இதையே ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸுந்தரகாண்டத்தில் அசோகவனத்தில் ஹனுமாரிடத்தில்தான் அயோத்தியில் அனுபவித்த போகங்களைச் சொல்லுமிடத்தில் ஸீதாதேவி समाद्वादश तत्राहं

राघवस्य निवेशने ।
भुञ्जानाऽमानुषान्भोगान्सर्वे
कामसमृद्धिनी ॥

(ஸமாத்வாதச தத்ராஹம்
ராகவஸ்ய நிவேசனே
புஞ்ஜானா மானுஷான் போகான்
ஸர்வகாம ஸம்ருத்தினி)

என்று 'பன்னிரண்டு வருஷகாலம் ராமனுடைய அரண்மனையில் சகல பாக்யங்களுடன் திவ்யபோகங்களை அனுபவித்தேன்' எனக் கூறியிருக்கிறாள். மாமாவான யுதாஜித்து பரதனை சத்ருக்னனுடன் கேகய தேசத்திற்கு அழைத்துச் சென்றான். அந்த சமயத்தில் தசரதன் ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய முயற்சித்தார். அதைக் கைகேயி தடுத்துவிட்டாள். இப்படி வால்மீகி முதலிய முனிவர்கள் பல ச்லோகங்களில் சொல்லிய பொருளை நம்பூதிரி சுருக்கமாகச் சொல்லியிருப்பது அவரது பக்தியை வெளிப்படுத்துகிறது.

## 5. ஸ்ரீராமர் சித்ரகூட பர்வதத்திற்குச் செல்லல்

तातोक्त्या यातुकामो वनमनुजवधूसंयुतश्चापधारः पौरानारुध्य मार्गे
गुहनिलयगतस्त्वं जटाचीरधारी ।
नावा संतीर्य गंगामधिपदवि पुनस्तं भरद्वाजमारान्नत्वा तद्वाक्यहेतोरतिसुखमवसश्चित्रकूटे
गिरीन्द्रे ॥



தாதோக்த்யா யாதுகாமோ
வனமனுஜவதூ ஸம்யுதச்
சாபதார: பௌராநாருத்ய மார்கே
குஹநிலயகதஸ்த்வம் ஜடாசீரதாரீ
நாவாஸந்தீர்ய கங்காமதிபதவி
புனஸ்தம் பரத்வாஜமாராந்நத்
வாதத்வாக்ய ஹேதோரதி—
ஸுகமவஸச் சித்ரகூடே கிரீந்த்ரே

பதவுரை:— தாதோக்த்யா—பிதாவின் வாக்யத்தால், சாபதார:—வில்லேந்தியவராயும், அநுஜவதூஸம்யுத:—தம்பியோடும் ஸீதையோடும் கூடியவராயும், வனம்யாதுகாம:—காட்டிற்குச் செல்ல விரும்பி, த்வம்—தாங்கள், மார்கே—வழியில், பௌரான்—நகர மக்களை, ஆருத்ய—தடுத்து நிறுத்திவிட்டு, குஹநிலயகத:—குஹனுடைய இருப்பிடத்தை அடைந்தவராய், ஜடா(த)சீரதாரீ—ஜடைகளையும் மரவுரியையும் தரித்துக் கொண்டு, நாவா—தோணியின்மூலம், கங்காம்—கங்கையை, ஸந்தீர்ய—கடந்து, புன:—மறுபடியும், அதிபதவி—வழியில், ஆராத்—அருகிலிருக்கும், தம்—அந்த, பரத்வாஜம்—பரத்வாஜ முனிவரை, நத்வா—வணங்கி, தத்வாக்யஹேதோ:—அவருடைய வார்த்தைப் படிக்கு, கிரீந்த்ரே—சிறந்த மலையான, சித்ரகூடே—சித்ரகூடத்தில், அதிஸுகம்—மிகவும் சௌக்யமாக, அவஸ:—வஸித்தீரன்றோ?

கருத்துரை:—'ஓ குருவாயூரப்பா! தந்தையின் வசனப்படி, ஸ்ரீராமனாக அவதரித்த தாங்கள் காடு புறப்பட்டீர். தம்பி லக்ஷ்மணனும், ஸீதையும் பின்தொடர்ந்தனர். கையில் வில்லேந்தினீர். வழியில் நகர மக்களை நிறுத்திவிட்டு, குஹனுடைய இருப்பிடத்தை அடைந்தீர். ஜடை, மரவுரி இவற்றைத் தரித்தீர். பிறகு கங்கையைக் கடந்து, வழியில் உள்ள பரத்வாஜரை அடைந்து வணங்கினீர். அவரது வாக்குப்படிச் சித்ரகூடத்தில் மிக சௌக்யமாக வசித்தீராமே' என நம்பூதிரி கேட்க, ஸ்ரீ குருவாயூரப்பனும் 'ஆம்' என்று சொல்லி தலையை அசைத்து அங்கீகாரம் செய்தாராம்.

விளக்கவுரை:— பிதாவின் சொல்லினால் ஸ்ரீ ராமன் வனம் செல்ல விரும்பினார். அரசன் ஸ்ரீ ராமனை நேரில் 'காடு செல்' என்று சொல்லவில்லை. 'அரசன் சொன்னான்' என்ற கைகேயியின் சொல்லால்தான் காடு புறப்படுகிறான். 'அரசன் தன்னிடம் நேரில் சொல்லவில்லையே என்று ஸ்ரீ ராமன் வருத்தப்பட்டார்' என வால்மீகி சொல்லியிருக்கிறார். கைகேயி, 'அரசன் உன்னிடம் நேரில் சொல்லப் பயப்படுகிறார்' என்று சொல்கிறாள். அதற்கு ஸ்ரீ ராமன் கூறியிருப்பதை வால்மீகி கூறியிருப்பதாவது:—

अलीकं मानसं त्वेकं हृदयं
दहतीव मे ।
स्वयं यन्नाह मां राजा भरतस्याभि
षेचनम् ॥

அலீகம் மானஸம் த்வேகம்
ஹ்ருதயம் தஹதீவமே
ஸ்வயம் யன்னாஹமாம் ராஜா
பரதஸ்யாபிஷேசனம்

அரசன் என்னிடம் நேரில் சொல்லப் பயப்படுகிறார் என்ற ஒரு சொல் என் ஹ்ருதயத்தை எரிப்பதுபோல இருக்கிறது. நான் உத்தம புத்திரனாக இருந்தால் 'பரதனுக்குப் பட்டாபிஷேகம்: உனக்கு வனவாஸம்' என அரசன் நேரில் அல்லவா சொல்ல வேண்டும்? அப்படிச் சொல்லவில்லையே என வருந்தினார். ஸ்ரீ ராமனுடன் ஸீதையும் கானகம் புறப்பட்டாள். லக்ஷ்மணனும் கூடவே சென்றான். ஸ்ரீ ராமன் கையில் வில்லேந்திச் சென்றார். ஸ்ரீ ராமனுடைய பிரிவாற்றாமையால் நகர மக்கள் பின்தொடர்ந்து சென்றனர். அவர்களையெல்லாம் தன்னுடன் காட்டில் கஷ்டப்படுத்த வேண்டாம் என ஸ்ரீ ராமன் நினைத்தார். ஸ்ரீ ராமனே கருணை மூர்த்தி. தான் பித்ரு வாக்கியத்திற்காகக் காடு செல்ல வேண்டியது அவசியம். தன் ப்ரஜைகள் கஷ்டப்பட வேண்டியது அவசியமில்லை என நினைத்து அவர்களை நடுவழியில் விட்டுவிட்டார். கங்கா தீரத்தில் குஹன் இருக்குமிடம் சென்றார். அங்கு ஜடை, மரவுரி இவற்றைத் தரித்தார். வால்மீகி அயோத்தியில் ஸ்ரீ ராமன்

மரவுரி தரித்ததாயும், கங்கைக் கரையில் ஜடை தரித்ததாயும் சொல்லியிருக்கிறார். இங்கு நம்பூதிரி ஜடை, மரவுரி இரண்டையும் கங்கைக் கரையிலேயே தரித்ததாகச் சொல்லியிருக்கிறார். இதனால் அயோத்தியில் கைகேயி மரவுரி கொடுத்து, ஸ்ரீ ராமன் தரிக்கவில்லை என்பது புலப்படவில்லை. கங்கைக் கரையில் தரித்தது குஹன் ஸ்ரீ ராமனுக்கு அன்புடன் கொடுத்ததாகவும் இருக்கலாம். குஹனால் கொண்டுவரப்பட்ட ஓடத்திலேறிக் கங்கையைக் கடந்தார். அங்கு வழியில் பரத்வாஜ முனிவரைக் கண்டு வணங்கினார். ஞானிகளை நமஸ்கரிப்பதால் ஸர்வ பாக்யங்களும் கிட்டுமென உபநிஷத்துகள் கூறுகின்றன. இப்படி ஸ்ரீ ராமன் நமஸ்கரிப்பது பெரியோர்களை வணங்கும் முறையைப் பிறருக்குக் காட்டவேயாகும். இம்மாதிரி பல தர்மங்களை உலகிற்கு உபதேசிக்க எடுத்த அவதாரமே ராமாவதாரமாகும். பரத்வாஜ முனிவரின் அனுக்ரஹத்தின்பேரில் அவருடைய உத்தரவு பெற்றுப் பர்வதங்களுள் சிறந்ததான சித்ரகூடத்தில் ஸ்ரீ ராமன் வசித்தார். ஹிமய மலை, மேரு இவை மலைகளுள் சிறந்தவைகள். அப்படியிருக்க, சித்ரகூடத்தை गिरिन्द्रे (கிரீந்த்ரே) 'மலைகளுள் சிறந்தது' எனக் கூறியிருப்பது 'ஸ்ரீ ராமன் தேவியுடனும், பக்தனை லக்ஷ்மணனுடனும் வசித்ததினால்தான்' என்பது வெளியாகிறது. அதனாலேயே ஸ்ரீ ராமன் சித்ரகூடத்திலிருக்கும்போது பரதன்

सुभगश्चित्रकूटो ऽसौ गिरिराजोपमो
गिरी : ।
यस्मिन्वसति काकुस्थो कुबेर
इवनन्दने ॥

,ஸுபகச்சித்ரகூடோ z ஸௌகிரி
ராஜோபமோகிர:
யஸ்மின்வஸதி காகுஸ்தோ
குபேர இவநந்தனே

'பர்வதங்களுக்கு அரசன்போலிருக்கும் இந்த சித்ரகூட மலையானது மஹத்தான பாக்யம் செய்திருக்கிறது, ஏனெனில் காகுஸ்தனை ஸ்ரீ ராமன், இந்த்ரனுடைய நந்தவனத்தில் குபேரன் வந்து வசிப்பதுபோல் வசிக்கிறானன்றோ?' என்று கூறினான். இப்படிப் பட்ட சிறந்த [illegible] அளவுகடந்த ஸுகத்துடன் ஸ்ரீ ராமன் வஸித்ததாய் தம்பூதிரி வர்ணித்திருக்கிறார்.

158413



ஒருவர்:—என்ன ஓய்! சிவன் கோவில் பக்கம் போகிறீரே பெருமாள் கோயில் பஜனை நன்றாயிருக்குமே!

மற்றவர்: 'பிரஸாதம்' நன்றாயிருக்காதே ஐயா!

Printed and published By N. Rajagopalan for and on behalf of the 'Swadesamitran' Ltd., at The 'Swadesamitran' press, 'Victory House' Mount Road Madras. Editor: C. R. SRINIVASAN, B. A.



தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர். சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே. எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| 1-3 | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.